# செவ்வாழை

# செவ்வாழை

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம்.ஏ.,

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 5-90

37111

பூம்புகார் வெளியீடு எண்: 157
முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1980
உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ பிரஸ, சென்னை-600001

## பதிப்புரை

**ச**மூகத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்து கிடக்கும் உயிர்த் துடிப்புள்ள பிரச்னைகளில் ஏதாவது ஒன்றை எடுத்து, வெளிப்படுத்தி, அதற்குப் பரிகாரம் காண முயல்வது எதுவோ அதுவே சிறுகதை.

இதில் வெற்றி கண்டவர் விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேதான் இன்றளவும் இருந்து வருகிறார்கள்.

ரசனைக்காக எழுதுவதை, கவலையை மறப்பதற்காக கற்பனையில் சிறகடித்துப் பறப்பதையெல்லாம் சிறுகதையாக ஒருக்காலமும் அங்கீகரிக்க முடியாது.

படிப்பதற்காக மட்டுமல்ல, படிப்பினை பெறுவதற்காகவும் அந்தச் சிறுகதை இருக்க வேண்டும்.

துவண்டு போயிருக்கும் மனத்தைத் தூக்கி நிறுத்தும் வல்லமை கவிதைக்கு எந்த அளவுக்கு உண்டோ,அதே அளவுக்கு சிறுகதைக்கும் உண்டு.

இதிலே கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை பலிக்காது.

கதைக்கென்று சிருஷ்டிக்கப்படும் ஒரே ஒரு பாத்திரத்தின் நேர்முக தரிசனமே இதற்குத் தேவை.

புறப்படும் இடத்திலிருந்து அந்தப் பயணம் முடியும் கட்டத்திற்குள்ளே வந்து போகும் கிளைவழிகளுக்கெல்லாம் இதிலே இடமில்லை.

பயணத்தின் குறிக்கோளே இதற்குப் பிடித்த நைவேத்தியம்.

உணர்ச்சி மயமான சொற்களால் படிப்போர் நெஞ்சை உருகிடச் செய்யும் யுக்தியே கதைக்குரிய சிறந்த ஆராதனை.

மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாகவும் முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை—விவஸ்தை கெட்ட விஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக இது அமைய வேண்டும்.

மனித மனத்தை நிறைவு படுத்தும் வேலையை, கொஞ்சம் அழகாக எழுதத் தெரிந்த யாராலும் செய்து காட்ட முடியும். அதுவல்ல, சிறுகதை.

ஒரு மனத்தின் சேஷ்டையை மற்றொரு மனத்துக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல;

அந்த மனத்தின் கசிவைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் அது பொருந்தி இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கதையைத்தான் 'சிறுகதை' யாகக் கொள்ள முடியும்.

காலத்துக்கேற்ற மாதிரி —சூழ்நிலைக்குத் தகுந்த விதத்தில் எந்த ஒரு பூவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் மனிதருக்கு புத்தி சொல்லக் கிளம்பும் சில புஸ்வாண எழுத்தாளர்கள் மட்டும் உடையை மாற்றிக்கொள்வது போல மனத்தை மாற்றிக் கொண்டு, எழுதுவதையெல்லாம் 'கதை' என்று கதைக்கின்ற இந்தக் காலகட்டத்தில், உங்கள் கரங்களில், உண்மையான -உயிருள்ள கதைகளைச் சிருஷ்டித்த பெருமைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறுகதைத் தொகுப்பை, 'செவ்வாழை' என்னும் தலைப்பில் தவழவிட்டிருக்கிறோம்.

மனித சமுதாயத்துக்கு அவசியமாகத் தேவைப்படும் ஒன்றை, அது எங்கு பிறந்திருந்தாலும் அதைச் சுவீகாரம் கொள்வதில் எந்த ஒரு தவறும் கிடையாது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'சிறுகதை' என்பது சுவீகாரக் குழந்தைதான். அதுவும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை அது.

அந்தக் குழந்தையை அமரர் அண்ணா அவர்கள், தம் கரத்தில் ஏந்தித் தவழவிட்டி

ருக்கும் பாங்கை இதில் நீங்கள் பரவலாகக் காண லாம். அந்தக் குழந்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் ஒவ்வொரு விஷயமும் விழிப்பை மட்டுமா, நல்ல வெளிச்சத்தையும் கொடுக்கக் கூடிய ஒன்றாகும்.

அத்தகு சிறப்புள்ள—உயிர்த் துடிப்புள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் கதைகளை நாங்கள் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையைப் பூரணமாக வழங்கி இருக்கும் திருமதி ராணி அண்ணாதுரை அவர்கட்கு எங்களின் இதய பூர்வமான நன்றி.

**பூம்புகார் பிரசுரத்தார்**

# 1
# செவ்வாழை

**செ**ங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்து வந்தான. இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன்பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும்போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம்-அவனுடைய முதல் பையன் காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கரையும் காட்டு கிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற் பட்டது, குப்பிக்கு.

''குப்பி! ஏதாச்சும் மாடுகீடு வந்து வாழையை மிதிச்சி டப் போகுது. ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று—ஆமாம், செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும். உருண்டையாகவும் இருக்கும்—ரொம்ப ருசி—பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்'' என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப் பார்கள்—அதுமட்டுமா—பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசை

களிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள் உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும்—அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப் பற்றிப் பேசமுடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன, 'செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்' என்று சொல்லுவான.

''ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயாடா—நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும்—வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன; கவனமிருக்கட்டும்''—என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே ''உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு'' என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, ''சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதிங்க—ஆமா—பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துவிடுவாங்களோ, யாரு கண்டாங்க'' என்று சொல்லுவான்—வெறும் வேடிக்கைக்காக அல்ல—திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்து விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான்—செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவ

னப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது—கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும்—குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப்பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதிலே பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு, கண்ணைப் போல வளர்த்துவரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும்—செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று வளர்ந்தது கள்ளங் கபடமின்றி. செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டு

களுக்கும் ஏற்படும் பிரேமைபோல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டுவிட்டது.

''இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?'' கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

''இரண்டு மாசமாகும்டா கண்ணு'' என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று — செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையை, பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்து விஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைரமாலையைக்கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்கமாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைரமாலையைவிட விலைமதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும, சச்சரவும, பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும் ஓங்கி வளரலாயிற்று. ''எப்போது பழமாகும்?'' என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?' என்று கேட்பான பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப்பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம—இடையே தரகர் இல்லை—முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது—அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும்—அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர் மானித்தான்—பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால். மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது—பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர், பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையா ரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது—ஆனால் உழைப்பு நம்முடைய தாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ, இந் தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்துவளர்த் தது—எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது—இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்-பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம் கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலா யிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித் திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம் பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐய ரிடம்' சொல்லிவிட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக்

குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றாம லிருக்குமா? 'இரண்டு சீப்பு வாழைப்பழம்' என்றார் பண்ணையார்.

ஏனுங்க பழம்—கடையிலே நல்ல பழமே இல்லை— பச்சை நாடாத்தான் இருக்கு'' என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

''சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?— வேறே நல்ல பழமா எங்கே இருக்கு!'' என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், ''நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்கு துங்க—அதைக் கொண்டுகிட்டு வரலாம்'' என்றான். 'சரி' என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக்குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூ கலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோட னின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற் குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று—நாக்குக் குழறிற்று—வார்த்தை கள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்கு பிறந்த நாள் பூஜை—என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங் கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழை

யோடு சேர்ந்து வளர்ந்த ஆசை—அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை—இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல்—எனும் எதைத் தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பி னால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு,இவ்வளவு நன்றி கெட்ட தனமா? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந் தஸ்துக்கு, இது ஒரு பிரமாதமா!—என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன்—மாடு மிதித்துவிடாத படி பாதுகாத்தேன்—செவ்வாழை ரொம்ப ருசியாக இருக் கும். கல்கண்டுபோல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத் திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா ,உன்னை கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்த தல்லவா!'—என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக் குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப் பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு—செவ்வாழைக்குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான்—உள்ளே கொண்டு வந்தான்—அரிவாளைக் கீழே போட்டான்—'குலையைக் கீழேவை அப்பா ,தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முது கைத் தடவினான் செங்கோடன். ''கண்ணு! இந்தக் குலை,

நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன்—அழாதிங்க—இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்'' என்று கூறிக்கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான்—அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளைபோல் வளர்த்து என்ன பலன்...!

அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல—ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு...? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான்—எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள்—எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்ன நடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்காலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள், பழம் வாங்கிக்கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான்—அவன் விற்றான் கடைக்காரனுக்கு—அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! ''பழம், ஒரு அணா டா, பயலே—காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா — போடா'' என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப் போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது; கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே. செங்கோடன், கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன்.

''ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?'' என்று கேட்டான் கரியன்.

''இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட'' என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். ''எங்க வீட்டுச் செவ்வாழைடா,'' என்று.

''எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துவிட்டோம்—மரத்தை வெட்டி ''பாடையிலே கட்டிவிட்டோம்'' என்றான் கரியன்.

பாபம், சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.

★

# 2
# பூபதியின் ஒருநாள் அலுவல்

"ஏதோ எனக்கென்று கொஞ்சம் சொத்து இருக்கிறது பிரதர்! நான் ஒன்றும், அலைந்து திரியவேண்டிய அவசிய மில்லை. நிம்மதியாக வாழ எனக்கு வசதி இருக்கிறது. ஆண்டவன் அப்படி ஒன்றும் என்னை உழைத்து உருக்குலை யும்படியான நிலையிலே விட்டு வைக்கவில்லை. வாழ்வதற் காக வதைபடு என்று என் தலையில் ஒன்றும் எழுதியில்லை" என்று கூறினார், ஒய்யூர் மிட்டாதார் ஒயிலானந்த பூபதி, கொஞ்சம் கோபத்துடன். அவரிடம் பேசிக் கொண்டிருந்த "பிரதர்" துரைசிங்கம் என்பவர். துரைசிங்கம், பூபதி யிடம் கொஞ்சம் சுறுசுறுப்பாக வேலைசெய்து, யுத்தக் கடன் பத்திரங்களை அதிகமாக விற்று, "கவர்னர் பெருமான்" ஒய்யூருக்கு வரும்போது, இந்தப் பக்கத்திலேயே, அதிகமாக யுத்த உதவி செய்தவர், மிட்டாதாரர்தான் என்ற கியாதியை அடைய வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருந்தார். யுத்தக் கடன் பத்திரங்களை விற்பது, யுத்த உதவி நிதி சேர்ப்பது இரண்டும் முதலிலே ஒயிலானந்த பூபதிக்குச் சந்தோஷமாக இருந்தது. அதிலும், மேற்படி நிதிக்காக, சங்கீதக் கச்சேரிகள், நாட்டியக் கச்சேரிகள் முதலியவற்றை ஏற்பாடு செய்யும்போது, 'ரொம்பக் குஷி' பூபதிக்கு. இந்தச் சந்தோஷத்துடன் கொஞ்சம் சுறுசுறுப்பாகவும் வேலை செய் தால் பலன் உருவாகும் என்பது துரைசிங்கத்தின் எண்ணம். யுத்த உதவித் தொகையின் அளவு உயர உயரத் தனக்கும் 'ராவ்சாகிபு' பட்டத்துக்கும் இடையே உள்ள 'தொலைவு' குறையும் என்பது துரைசிங்கத்தின் எண்ணம். எனவே பூபதியைச் சற்று அதிகமான சுறுசுறுப்புக் காட்டும்படி

கேட்டுக் கொண்டார். பூபதிக்குக் கொஞ்சம் கோபம். ''இவனே அலையட்டும்! சர்க்கார் இவனை யுத்தப்பிரசாரகர் என்று நியமித்திருக்கிறார்கள்; மாதம் 500 சம்பளமும் தருகிறார்கள்; இவன் அலைய வேண்டியது சரி; என்னை எப்படி இவன் அதிகமாக வேலை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கலாம்'' என்று கருதியே கோபித்துக் கொண்டு, தனது அந்தஸ்தைச் சுட்டிக்காட்டினார் துரைசிங்கத்திடம்.

''ஏன் ஊர் சுற்றித் திரியமாட்டான்! குடித்துவிட்டுக் கூத்தாடத்தான் செய்வான். ஏதாவது ''வித்து விசனம்'' கவலை—கஷ்டம் இருந்தால்தானே! காளைமாடு போலச் சுற்றி வருகிறான். இருப்பது பாழாகாதபடி பார்த்துக்கொள்ளவும், இவனுக்குச் சொத்து சுகம் தேடிக் கொடுக்கவும் நான் பாடுபட்டேன். அவன், அந்தத் தைரியத்திலே, உலகத்தைப் பற்றியே கவலை இல்லை என்று மதோன்மத்தனாகத் திரிகிறான். எந்த விலை ஏறினால் அவனுக்கென்ன! அவன் உண்டு, நண்பர்கள் உண்டு, செலவு செய்வதற்குக் கேட்கும்போது பணம் தர நான் உண்டு என்று இருக்கிறான். விளைந்து வருகிறது, விற்றுப் பணத்தைக் குவிக்கிறான், செலவு செய்து கொண்டு குஷாலாக இருப்போம் என்று உலவுகிறான். பாடுபட்டுப் பணத்தைச் சேர்க்கிறனெக்கல்லவா தெரியும், அதனுடைய அருமை.''

பூபதி, புவனேஸ்வரியின் நடனக் கச்சேரியை ஏற்பாடு செய்யப் போயிருக்கிறார்; கல்யாணி என்ற பாடகியை அழைத்துவரப் போயிருக்கிறார் என்ற செய்திகளை அடிக்கடி கேட்டுக் கோபங் கொண்டார், பெரிய மிராசுதாரர், பொன்னுராமர். தன் மகன், சர்க்கார் காரியமாகப் போயிருக்கிறான், சண்டைக்குப் பணம் திரட்டும் காரியமாகத்தான் போயிருக்கிறான், யுத்த நிதி உதவிக் கச்சேரிகளுக்காகத்தான் புவனேஸ்வரி, கல்யாணி ஆகியோரைத் தேடிச் சென்றானேயொழிய வேறு சொந்த வேடிக்கைக்கு அல்ல என்று, பொன்னுராமரிடம் கூறப்பட்டது என்றபோதிலும், அவர் சமாதானம் அடையவில்லை. யுத்த வேலை, நிதி திரட்டுவது என்று என்ன பேர் வேண்டுமானாலும் வைக்கட்

டும், பூபதி இப்போது சதா சர்வகாலம், இந்தச் ''சிரிப்புக் காட்டிகள்'' இருக்கும் இடத்திலே உலாவுகிறான். அது தவறு; அது கூடாது என்று கூறியபடி இருந்தார். அவருக்குத் தன் பாலிய கால நினைவு. அவர் காலத்திலே யுத்தநிதி வசூலிக்கும் வேலை இல்லை; ஆனால் 'நவராத்திரி உற்சவ ஏற்பாடு' இருந்தது. பொன்னுராமர் அதிலே தீவிரமாகச் சேவை செய்தபோதுதான் திலகாவும், அன்னமும் அவருக்குச் சினேகிதமானது. ''இலேசாக படுக்கப் போகும்போது கொஞ்சம் உசத்திச் சரக்கு'' சாப்பிடக் கற்றுக் கொண்டதும் அந்தச் சமயத்திலேதான். ஆகவே பொன்னுராமர், யுத்த நிதி வசூல் வேலைக்குத்தான் போயிருக்கிறான் ஒயிலானந்தன் என்று சொன்னவர்கள் மீது சீறி விழுந்தார். தனக்கு ''நவராத்திரி''—தன் மகனுக்கு 'யுத்தநிதி வசூல் வேலை' என்று மாறி இருக்கிறது என்று எண்ணினார்.

''ராஜா போல நிம்மதியாக இருக்க வேண்டியவன்! வீடு இருக்கிறது, அரண்மனைபோல; தோட்டம் இருக்கிறது, நந்தவனம் போல; என்ன குறை இவனுக்கு? எந்த வேலைக்குத்தான் இவனுக்கு இங்கே ஆள் இல்லை. நிம்மதியாக இருக்கக்கூடாதா? பகவான், நமக்கு ஒரு குறையும் செய்யவில்லை; சகல சம்பத்தும் கொடுத்திருக்கிறார். இதை அனுபவித்துக்கொண்டு, வீட்டோடு சந்தோஷமாக ஏன் இருக்கக் கூடாது? என்னமோ, பாடுபட்டு ஜீவிக்க வேண்டியவனைப் போல, சதா அலைச்சல்! வீடு தங்குவது கிடையாது; வேளா வேளைக்குச் சாப்பிடுவது கிடையாது; உடம்பைக் கவனித்துக் கொள்வது கிடையாது; கண்டவர்களிடம் பேசிப்பேசி, தொண்டையைக்கூடப் புண்ணாக்கிக் கொள்வான் போலிருக்கிறது. ஏனம்மா இவனுக்கு இந்தக் கஷ்டம்? இவன் தலையிலே நல்ல எழுத்து எழுதியிருக்க, எதற்காக இவன் அலைந்து கொண்டிருக்க வேண்டும்? வீட்டோடு நிமமதியாக இருக்கக்கூடாதா'' என்று, பூபதியின் தாயார் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். எப்போது பார்த்தாலும் பூபதி வெளியே சுற்றிக் கொண்டே இருப்பதைக் கண்டு தாய்க்கு, மகன் இப்படி அலைந்து உடம்பை பாழாக்கிக் கொள்கிறானே

என்று சோகம். அவர்களுக்கென்ன தெரியும், மகன், உல்லாச வேட்டையாடுகிறானே தவிர, ஊருக்கு உபகாரம் செய்ய ஒரு துளியும் வேலை செய்யவில்லை என்பது? அலைந்து தீர வேண்டும், திரிந்து கிடக்க வேண்டும், பாடுபட்டுப் பணம் தேடியே ஜீவித்தாக வேண்டும் என்ற நிலையில் பலர் இருப்பதற்குக் காரணம், அவர்கள் தலையிலே ஆண்டவன் அப்படி எழுதினான் என்பது, மிட்டாதாரணியின் எண்ணம். மகன்,ஏதோ பாடுபடுகிறான் மற்றவர்களுக்காக என்று வருத் தப்பட்டார்கள் அந்த அம்மையார். இரவெல்லாம் குடித்து விட்டுக் கிடப்பதால், பூபதியின் உடல் இளைத்தது. அதை அம்மையார், மகன் ஊருக்கு உழைத்து அப்படியானான் என்று எண்ணிக் கொண்டார்கள்.

"உன் அந்தஸ்துக்கும், செல்வத்துக்கும், இது ஒரு பிரமாதமா? நேற்றுத் தோன்றியவர்களெல்லாம், ஷெவர் லேயில் போகும்போது, நீ ஏன் 'ரோல்ஸ்ராயில்' போகக் கூடாது? அந்தப் பயல், 'ரேஸ்' கிளப்பிலே, ஆயிர ரூபாய் நோட்டை அலட்சியமாக வீசி எறிகிறான்; நூறு ரூபாய் நோட் எடுப்பதென்றால் உனக்குக் கைநடுக்கம் பிறக்கிறது. உன் அந்தஸ்துக்கு ஏற்றபடியா உடை இருக்கிறது? 'ட்வீட்' இல்லாமல் டாக்டர் தாமோதர் வெளியே கிளம்புவதில்லை; உன் உடையைப் பார்! செச்சே! என்ன இருந்தாலும், நீ இப்படி உன்னுடைய செல்வ நிலைக்குக் குறைவாக, மட்ட மாக, வாழ்க்கையை நடத்தக்கூடாது. மதிக்கமாட்டார்களே ஜனங்கள்!" "என்னடா மகா பிரமாதம்! அவனபெரிய ஆசாமி யின மகன என்று சொல்லுகிறாய்; அவனுந்தான '555' பிடிக்கிறான்; நமமுடையதும், அதே ரகச் சிகரெட்தான்" என்று, அன்று ஒரு நாள் அப்ர்காம் சொன்னான். எனக்கு வெட்கமாகத்தான இருந்தது. எவ்வளவு செலவு செய் தாலும் உனக்குத் தகும்."

செல்வவான்களின் செருக்கு, அவர்களையே அழிக்கும் நெருப்பாக மாறும். ஆகவே அவர்கள் உள்ளத்திலே அந்த நெருப்புக் குறையாதபடி நாம் அடிக்கடி தூண்டி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும்; அதிகமாகச் செலவு செய்

கிறோம், அனாவசியமாகச் செலவு செய்கிறோம் என்ற எண்ணமே, அந்தச் சீமானுக்குத் தோன்றக்கூடாது. எவ்வளவு செலவு செய்தாலும் கெடுதி இல்லை; தகும். மேலும் அப்படிச் செலவு செய்வதுதான் நமது அந்தஸ்துக்கு ஏற்றது. ஜனங்கள் அப்போதுதான் நம்மைக் கண்டால் மதிப்பார்கள்; செலவைச் சுருக்க ஆரம்பித்தால், கேவலமாக நினைத்துவிடுவார்கள் என்ற இப்படிப்பட்ட எண்ணம் சீமானின் மனதிலே முளைத்தபடி இருக்க வேண்டும். அந்தப் பயிர் செழிப்பாக இருக்க முகஸ்துதி என்ற தண்ணீரை நாம் பாய்ச்சியபடி இருக்க வேண்டும் என்ற தத்துவம், கோடீஸ்வரனுக்கு. பெயர் கோடீஸ்வரன்; நிலைமை மகா மோசம். ஆசாமியோ பலே பேர்வழி. மரத்திலேதான் பழம் இருக்கும்; நாம் நடந்து செல்லும் பாதையிலேயா இருக்கும்? பாதையிலே, முள்ளும் கல்லும்தான் இருக்கும். நமக்கு இந்தக் கல்தான் கிடைக்கும்; கனி தோட்டக்காரனுக்குத்தானே கிடைக்கும்? நாம் பாட்டையிலே போக வேண்டியவரானோம் என்று சொல்பவன், பைத்தியக்காரன். கிடைக்கிற கல்லை, எடுத்துத் தொலைவிலே தொங்கும் பழத்தை நோக்கி வீசினால், பழம் கீழே விழுகிறது. கல்லை விட்டுவிடு, கனியை எடு; சாப்பிடு! இதுதானே புத்திசாலி செய்ய வேண்டிய காரியம்? பாதையிலே நடந்து கொண்டே, காலிலே கல் தடுக்கினால் கஷ்டப்பட்டு, அதே நேரத்திலே, மேலே அண்ணாந்து பார்க்கும் போது, மரத்திலே கனி குலுங்கக்கண்டு, ஏக்கமடைந்து நடப்பவன் ஏமாளி. மேலே பழம், உன் காலடியிலே கல்! கைக்கும் கருத்துக்கும் கொஞ்சம் வேலை கொடு. கனி பிறகு உனக்குத்தான். மரத்துக்கா, தோட்டக்காரனுக்கா? - இந்தத் தர்க்கம் செய்பவன் கோடீஸ்வரன். பணம், பணக்காரனிடம் இருக்கிறது, மரத்திலே பழம் இருப்பது போல! ஏழையிடம், பணமில்லை; ஆனால் பணக்காரனிடம் உள்ள பணத்தைப் பறிக்கும் 'வித்தை' கூடவா இல்லை? அவன் மூளைக்குக் கொஞ்சம் வேலை கொடுத்தால்தானே என்பான் கோடீஸ்வரன. அந்த முறையிலே, சீமான்களின் தோழனாக இருந்தான், இலாபத்துடன். சீமான்களின் மனது குளிரும்படி பேசுவான். கெஞ்சுவதில்லை; பணம் ஒரு பிரமாதமா என்று சொல்

வான். சீமான் எவ்வளவு செலவு செய்தாலும், இது என்ன சாதாரணச் செலவுதான் என்று கூறுவான். வேறு பல சீமான்களின் நடை, நொடி, பாவனைகளை தன் வலையில் வீழ்ந்த சீமானின் முன் புகழ்ந்து பேசுவான். அதன் மூலம், நல நண்பனான சீமானின் மனதிலே, 'ரோஷ' உணர்ச்சி உண்டாகச் செய்வான். அந்த ரோஷ உணர்ச்சி, ஷெவர்லே காராகக் காட்சி அளிக்கும்; ட்வீட் சூட்டாகத் தோற்றமளிக்கும்; உயர்தரமான ஓட்டல்களுக்கு இழுத்துச் செல்லும்; சினிமா நாடகங்களிலே, சோபாவிலே கொண்டுபோய் உட்கார வைக்கும்! அதிகமாக அவசியமற்ற செலவு செய்து வருகிறோம் என்று பூபதி கொஞ்சம் கவலைப்பட்டபோது, ''ரோஷ'' உணர்ச்சி ஊட்டுவதற்கு உபயோகித்த உபதேசம் மேலே குறிப்பிடப்பட்டது. அந்தப் பேச்சின் பயனாகப் பூபதிதான் உண்மையிலேயே தன் அந்தஸ்துக்கு ஏற்றபடி செலவு செய்ய வில்லை என்று எண்ணவும், கொஞ்சம் வெட்கப்படவும்கூட நேரிட்டது. கோடீஸ்வரன், பூபதியின் ரோஷ உணர்ச்சியை அவ்வளவு சாமர்த்தியமாகக் கிளறிவிட்டான். அதன் பலன், அன்று ரமாமணி வீட்டிலே ரசமான விருந்து பூபதிக்கு! கோடீஸ்வரனிடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள், கோகிலா. ரமாமணியின் தங்கை. ''உங்களுக்கென்ன குறைச்சல்! மிட்டாதாரர்தான், நீங்கள் போட்ட கோட்டைத் தாண்டுவதில்லையாமே?'' என்றாள் கோகிலம். ''கோடு போடுவது நான், புதிய வீடு கட்டுவது ரமா'' என்றான் கோடீஸ்வரன் வேடிக்கையாக. ''அந்த வீடு உங்களுக்கும் சொந்தம்தானே' என்று ''பாத்யதை'' யைக் கவனப்படுத்தினாள் கோகிலம்.

''உனக்கு என்னப்பா குத்தலும் குடைச்சலும்? பெட்டியிலே பணம் இருக்கிறது ஏராளமாக. வட்டி மூலம் அதனை வளர்க்கச் சரியான தந்தை இருக்கிறார். நீ சுற்றலாம், ஆனந்தமாக. விலையைப் பற்றிக் கவலை இல்லாமல் சாமான்களை வாங்கலாம். காலத்தைப் பற்றியே கவலையின்றி, வேடிக்கையாக இருக்கலாம். எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம்—நீ கஷ்டப்பட்டு சம்பாதிததது என்ன கெட்டுவிட்டது! எப்படியோ சொத்து சேர்ந்துவிட்

டது; சுகமாக வாழ முடிகிறது. நீ எதற்குப் பாடுபடப் போகிறாய்? மற்றவர்களைப் போல நீயும் கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்திருந்தால், உனக்கும் தெரியும், அதனுடைய பலன்! சீமானுக்கு மகனாகப் பிறந்தாய், சுகம் என்ற தொட்டியிலே வளர்ந்தாய், இப்போது ஆனந்தம் என்ற அம்சதூளிகா மஞ்சத்திலே புரள்கிறாய். உனக்கு, ஊரின் கஷ்டம் என்ன தெரியும்? பணம் தேடி அலுப்பவனின் பதைப்பு எப்படிப் புரியும்? பாடுபடுபவனின் தொல்லையை எப்படி நீ தெரிந்துகொள்ளப் போகிறாய்! உன் கவலை பூராவும், விதவிதமான களியாட்டங்களைத் தேடுகிற அளவுதானே!''—பூபதியின் நண்பர்களிலே இவன் ஒரு தனிரகம். பணக்காரனிடம் பணம் இருக்கிறது, மலரிலே மணம் இருப்பதுபோல. நாம் பச்சிலை; நாளாவட்டத்திலே சருகு ஆகிவிடுவோம். மலருக்கு இருக்கும் மணம் தனக்கு இருக்க வேண்டுமென்று பச்சிலை எதிர்பார்க்கலாமா? என்று வாதம் புரிபவன், வக்கீல் அல்ல, வியாபாரி. வியாபாரியிலும், நஷ்டக் கணக்கையே அடிக்கடி கண்டு நொந்தவன்; பூபதியுடன் ஒரு காலத்திலே படித்தவன். என்ற முறையிலே, சந்திப்பு ஏற்படும். அப்போதும், தன் சஞ்சலத்தை மறக்கமாட்டான. பூபதியும் கோடீஸ்வரனும் ஆனந்தமாக விளையாடிவிட்டு வருகிறபோது கண்டான்; நண்பன் என்ற முறையிலே, பூபதியின் சந்தோஷத்தின் சூட்சமத்தைப் பற்றியும், தன சஞ்சலத்தைப் பற்றியும் பேசினான். அதுவும், மற்றப் பணக்காரர்களிடம் பேச முடியாதல்லவா? ''போடா சுடுமூஞ்சி'' என்று கேலி பேசிவிட்டு, முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டு, அவனிடம் பேசுவதற்காக அதுவரை நிறுத்தி வைத்திருந்த மோட்டாரை, ஓட்டலானான் பூபதி. வளமில்லாத வியாபாரம் செய்துவந்த வரதராஜன், தன் 'கூட்டாளி' காதரிடம், பூபதியின் செல்வம், செல்வாக்கு ஆகியவைபற்றி பெருமையாகப் பேசிக்கொண்டே நடந்தான். காதர், பணக்காரர் உயர்ந்தவர்கள்; ஏழை மட்டம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்பவனல்ல. ஆகவே பூபதியைத் தன் நண்பன் புகழ்ந்தது பிடிக்கவில்லை. எவன் தன் சாமர்த்தியத்தால், உழைப்பால், முயற்சியால், வாழ்கிறானோ அவனைத்தான் பாராட்ட வேண்டுமே தவிர

பணத்தை யாரோ, எப்படியோ திரட்டிக் கொடுத்துவிட, அதை வைத்துக் கொண்டு படாடோப வாழ்வு நடத்துபவனைப் புகழ்வது, மதியீனம் என்பது காதர் கொண்டிருந்த கருத்து. ஆகவே பூபதியின் மோட்டார் போகிற வேகத்தைக் கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு, ''கிடக்கிறான் தள்ளப்பா! என்ன புகழ்வது அவனை! மோட்டாரிலே சவாரி செய்கிறானாம்; அதிலே இருக்கிற ஒரு சிறிய ஆணியை விலை கொடுத்து வாங்கத் தேவைப்படும் பணத்தைக்கூட அவன சம்பாதித்ததில்லை—சம்பாதிக்க முடியாது—சம்பாதிக்க வழி கிடையாது. என்னமோ, பணக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறந்துவிட்டான்; அகப்பட்டதை வைத்துக் கொண்டு ஆட்டம் ஆடுகிறான். இது ஒரு பெரிய கீர்த்தியா! இவன தன்னுடைய புத்தி சாதுர்யத்தாலும், உழைப்பினாலும், இந்தச் சொத்து சேர்த்தானா, திறமைசாலி என்று இவனைப் புகழ? அவன் மட்டும், அந்தச் சீமானுக்கு மகனாகப் பிறக்காதிருந்தால், அரை ரூபா சம்பாதிப்பானா அன்றாடம்? விரலை மடக்கு, அவனுக்குப் பிழைக்கும் மார்க்கம் இன்னது தெரியுமென்று! படாடோபத்தோடு சரி. படிப்பு கிடையாது. மிரட்டத் தெரியும்; ஒரு வேலையும் தெரியாது. எப்படிப் பிழைப்பான்? என்ன வேலைக்கு இலாயக்கு? கூலிவேலைகூட செய்ய முடியாதே, உடலிலே அதற்கு வலிவு ஏது? ஒன்றுக்கும் பயனற்றவன, ஏதோ அங்கே பிறந்ததால் ஆடுகிறான் ஆட்டம். இதிலே பெருமை இல்லை. இதற்காக இவனை நான் மதிக்கத் தயாராக இல்லை! என்னைக் கேட்டால், அவன் கையாலாகாதவன்; பிழைக்கத் தெரியாதவன்; அப்பா சேர்த்து வைத்திருப்பதைச் செலவிட்டுக் கொண்டு திரியும் ஒரு வீண் ஜம்பக்காரன் என்றுதான் சொல்லுவேன்.'' என்று வெறுப்பு, அலட்சியம் இரண்டையும் ஏராளமாகக் கலந்து பேசினான். பேசிவிட்டு, 'அக்பர்ஷா' சிகரெட்டைப் பற்ற வைத்தான், ஆனந்தமாக.

''குட் மார்னிங் மிஸ்டர்! உட்காருங்கள். உங்களைப் போன்ற உயர்ந்த அந்தஸ்துக்காரர்கள்தான ஊருக்கே மதிப்புத்தர வேண்டியவர்கள். உங்களுடைய உதவியும், திறமை

யும்தானே ஊருக்கே பொதுச் சொத்து! நீங்களெல்லாம், நினைத்தால் எந்தக் காரியமும் சாத்தியமாகும். நீங்கள்தான் ஊர் ஜனங்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும். ஜனங்கள் நல்வழிப்பட, நாகரிகம் பெற, அறிவு பெற, நீங்கள்தான் வேலை செய்ய வேண்டும்.'' என்றார் டிப்டி கலெக்டர்! ஜே. ஈஸ். பங்களா எதிரே வந்து நின்றது, மிட்டாதாரர் பூபதியின் மோட்டார் என்பதை டபேதார் சொன்னதும், புதிய நாற்காலியைப் போடச் சொன்னார். பூபதி கொஞ்சம் வெட்கத்துடன் உள்ளே வரக்கண்டு, புன்சிரிப்புடன் வரவேற்றார், கை குலுக்கினார். கொஞ்ச நேரம் 'லோக' விஷயம் பேசினார். பிறகு, பூபதி யுத்தநிதி சம்பந்தமாக மேலும் கொஞ்சம் மும்முரமாக வேலை செய்ய வேண்டும் என்பதற்காக, அவனைத் தூண்ட ஆரம்பித்தார். பூபதிக்குக் கொஞ்சம் 'ஸ்துதி' செய்தால்போதும்; சொல்கிற படி ஆடுவான் என்று ஜே. ஈஸ். நினைத்தார். ஆகவேதான், பூபதியின் பெருமையைப் பூபதிக்குக் கவனப்படுத்தினார். பூபதிக்கு ஆனந்தம்! விடை பெற்றுக் கொண்டு வெளியே வரும்போது, தன் வீட்டிலே ஏதோ விசேஷத்துக்குச் சமை யல் செய்த வேதாந்தாச்சாரி வரக்கண்டான் பங்களாவுக் குள். 'ஐயர்! இங்கே என்ன வேலையாக வந்தீர்?'' என்று பூபதி கேட்க, ஐயர் சிரித்துக்கொண்டே, ''வேலையா? இது என் மருமான் மோன்னோ?'' என்றார். ''என்ன என்ன?'' என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டான் பூபதி. 'ஜெமீன் தார்வாள்! டிப்டிக் கலெக்டர் யாருன்னு நினைச்சீர்? அவ ருக்கு என் தமையனாரின் மகளைத்தான் கொடுத்திருக்கு'' என்று கூறிப் பந்துத்வத்தை விளக்கினார் வேதாந்தாச்சாரி. விளங்கவில்லை; கொஞ்சம் பரிதாபமாகவும் இருந்தது அந் தப் பேச்சு, பூபதிக்கு. சூட்சமத்தைத் தெரிந்து கொண்டார் வேதாந்தாச்சாரி. ''ஓ! அதனாலே மிரள்கிறீரா? டிப்டிக் கலெக்டர், எங்களவாதான் ஜெமின்தார்வாள்! பெயர், ஈஸ் என்று இருக்கவே, கிருஸ்தவன்னு எண்ணிண்டீர் போலி ருக்கு. ஈஸ் என்பது, ஜெகதீஸ் என்ற பெயரின் ரத்னச் சுருக்கம். அவர் பெயர் ஜெகதீசாச்சார். சீமையிலே, ஈஸ்னு பெயரை வைச்சுண்டார். உத்தியோகத்துக்கும் அதே பெயர்

ஓட்டிண்டது, அவ்வளவுதான்'' என்று விளக்கம் கூறினார். பூபதி, வேதாந்தாச்சாரியாருக்கு, வழக்கத்தைவிடச் சற்று அதிகமான மரியாதை காட்டிவிட்டு பூபதி மோட்டாரில் புறப்பட்டார் வீடு நோக்கி. கோடீஸ்வரன், வேறு வேலை இருப்பதாகக் கூறிவிட்டுப் போய்விட்டான், ''டாக்சி''யில்.

''பூபதி, பெரிய குடும்பம். நேக்கு அவா குடும்பத்திடம் ரொம்ப நாளாகப் பரிச்சயம்'' என்று கூறிக்கொண்டே வந்தார், வேதாந்தாச்சாரி. டிப்டி கலெக்டர் ஆன பிறகு உனக்கு இப்படிப்பட்ட சீமான்களின் சினேகம் கிடைத்தது. எனக்கு, இவர்களுடைய சினேகிதம் நெடுநாட்களாக உண்டு என்று கூறிக்கொள்வதிலே அவருக்கும் வகையான சந்தோஷம். டிப்டி கலெக்டர் ஆரம்பித்தார் தன் அர்ச்சனையை.

''இடியட்! கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான், கொஞ்சம்கூட மட்டு மரியாதை தெரியாமல். சுத்த ஞானசூன்யம். வைசிராயின பெயர் தெரியவில்லை; இன்னமும் விலிங்டன்தான வைசிராயாக இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். இவனெல்லாம், ஊருக்குத் தலைவர்களாக வேண்டும். இந்த உதவாக்கரைக்கு ராவ்பகதூர் வேண்டுமாம்! எப்படியோ, பணம் சேர்ந்துவிட்டது; ஊரை ஏமாற்றிச் சேர்த்துக் கொண்டான். பணம இருப்பதாலேயே, இவனுக்கு நாமெல்லாம் மதிப்புத் தர வேண்டுமாம். மடையன! ஒரு சாதாரண கிளார்க்குக்குத் தெரிந்த விஷய ஞானம்கூட இவனுக்குஎன்னதெரியும்? மளமளவென்று அளக்கிறான், அந்த ஆபீசர் தெரியும், இந்த கலெக்டர் தெரியுமென்று. தெரிந்து என்ன, தெரியாமல் போனால் என்ன? எழுத்துப் பிழையில்லாமல் இன்னமும், தன் கையெழுத்தைப் போடத் தெரியாது. நாமும் உத்யோகம் செய்கிறோம், தலை நரைக்கிறவரையில். என்ன காண்கிறோம்! அந்த இடியட் 'இன்கம் டாக்ஸ்' நான்தான் இந்த ஜில்லாவிலேயே அதிகம் கட்டுகிறேன் என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறான். இவனுக்கு எஸ்டேட் மானேஜர், பி. ஏ. வாம்! எவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறான் தெரியுமோ? பணம் போய் எப்படியோ மாட்டிக் கொண்டு இப்படிப்பட்ட

இடியட்களை நம்ம வாயினாலேயே புகழ்ந்து பேசவேண்டிய நிலைமையைக்கூட உண்டாக்குகிறது!'' என்று சுடச்சுடப் பேசினார், மிஸ்டர் ஜே ஈஸ்.

''பணம் இருக்கலாம்; நீர் பெரிய பங்களாவிலே வாழலாம்; அதை எல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. உம்மிடம் சொத்து இருப்பதாலேயே, மதிப்புத் தரவேண்டுமென்ற அவசியம் கிடையாது. சட்டம் உம்மையும் சாதாரண மனிதனையும் சமமாக நடத்தும். உளறாமல், கேட்ட கேள்விகளுக்கு ஒழுங்காக, உண்மையை ஒளிக்காமல் பதில் சொல்ல வேண்டும். குடித்துவிட்டு, நிலை தவறி,மோட்டார் ஓட்டிக்கொண்டு போனது, முதல்குற்றம்; மோட்டார் ஓட்ட லைசென்ஸ் வாங்கவில்லை—அது இரண்டாவது குற்றம்;நாலு காலன் பெட்ரோல் டின் உமது மோட்டாரில் இருந்தது. முதலில் அதற்கு ''கோட்டா'' இல்லை; பிளாக்மார்க்கட் பெட்ரோல் அது. அது மூன்றாவது குற்றம், ஏன் உன்னை நான் சார்ஜு செய்யக் கூடாது?''—அன்று மாலைதான், சார்ஜு எடுத்துக் கொண்டார், சப்—இன்ஸ்பெக்டர் சாப்ஜான். அவருக்கு, கனம். ஆகாகான் தூரபாத்யம் ஆகவே அவர் சாதாரணமாக எந்தச் சீமானாக இருந்தாலும், நமக்கென்ன என்று கூறுபவர்; பூபதியின் பூர்வோத்திரம் தெரியாது. தெரிந்தாலும் அதற்காகச் சப் இன்ஸ்பெக்டர் தன் மடக்கைக் குறைத்துக்கொள்ளுகிறவரல்ல. டிப்டி கலெக்டரிடம் கைகுலுக்கிய ஜோரில், மோட்டாரைக் கொஞ்சம் வேகமாக ஓட்டினார் பூபதி. ஒரு சிறுவன், சிக்கிக் கொள்ள இருந்தான்; திடீரென்று, 'பிரேக்' போட்டார். ஜனங்கள் கூவினார்கள்; இவ்வளவும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வெகு சமீபத்திலே நடந்தது. சப்-இன்ஸ்பெக்டர்சேதி என்ன என்று பார்க்கச்சொன்னார் ஜவானை. அவன் மோட்டாரை நிறுத்தச் சொல்லிவிட்டு,'ஐயா கூப்பிடுகிறார்' என்று சொன்னான் பூபதியிடம். பூபதிக்குப் பழைய சப்-இன்ஸ்பெக்டரே அங்கு இருப்பதாக எண்ணம். ஆகவே, ''நாளைக்கு வீட்டண்டை வரச்சொல்'' என்று கூறினார். சப்-இன்ஸ்பெக்டர் சாப்ஜான், இதை ஜவான் சொன்னதும் ஒரு முறைப்பிலே,

ஜவானின் குலையை நடுங்க வைத்தார், வெளியே போனார் தன் கைப்பிரம்பை ஆட்டிக் கூப்பிட்டார் பூபதியை. புதிய ஆசாமியாக இருக்கவே, பூபதி, ஸ்டேஷனை நோக்கிவர வேண்டி இருந்தது. 'உள்ளே போய் இரும்'' என்று கூறி விட்டு, கும்பலை விரட்டும்படி ஜவான்களை அனுப்பிவிட்டு நேரே மோட்டார் இருக்குமிடம் சென்று சோதனை போட்டு, பெட்ரோல் டின்னைக் கண்டுபிடித்து, அதைத் தூக்கிக் கொண்டு வரும்படி வேறோர் கான்ஸ்டெபிளுக்கு உத்திரவு செய்துவிட்டு, கோபமாக உள்ளே நுழைய, அங்கே ''ரைட்டர்'' பூபதி எதிரே நின்று கொண்டிருக்கவும், பூபதி டி. எஸ். பி. போல, உட்கார்ந்திருக்கவும் கண்டு, ஒரு கனைப்பினால், ரைட்டரை, அவருடைய ஆசனத்துக்குத் துரத்திவிட்டு விசாரணையைத் துவக்கினார். பூபதி தன்னுடைய மிட்டாதார் நிலைமையை ஜாடை காட்டவே, சாப்ஜான், கோபம் அதிகரித்தது. பணக்காரர் என்ற பதவி, ஏழைகளை மிரட்ட உதவுமே தவிர, பொறுப்பாகவும், தயவு தாட்சண்யம் பார்க்காமல் நேர்மையாகவும் நடந்து கொள்ளும் அதிகாரியை அடக்கப் பயன்படாது என்பதை விளக்க வேண்டி, காரசாரமாகப் பேசி, சார்ஜும் செய்துவிட்டார்.

கோபம்! ஆனால் யார்மீது காட்டுவது? பூபதி, மோட்டாரை ஓட்டிக்கொண்டு நேரே சப் கலெக்டரிடமே போகலாமா, இந்த சப்—இன்ஸ்பெக்டரைப் பற்றிக் கூறிவிட்டு வருவோமா என்று எண்ணினார். பிறகு, ''பெட்ரோல் டின்'' கவனம் வந்தது! நேரே பங்களா போவது, பிறகு என்ன யோசிப்பது என்று தீர்மானித்து, மோட்டாரைக் கொஞ்சம் குறைந்த வேகத்திலேயே ஓட்டிக் கொண்டு போனார். வழியிலே இரண்டு கூலிக்காரர்கள், மோட்டாரில் போகும் பூபதியைக் கண்டனர். அதிலே ஒருவன், கும்பிட்டான் பூபதியை. மற்றவன், ''ஏன்? யார் அவர்?'' என்று கேட்டான். கும்பிடு போட்டவன் சொன்னான்.

''மனுஷ ஜென்மமெடுத்தா, இப்படி எடுக்க வேண்டும். நாம் இருக்கிறோம் நாய் படாதபாடு பட்டுக்கொண்டு; அதோ பார்டா, போகிறான், மகராஜன்! புண்யசாலி. போன

ஜென்மத்திலெ என்ன பூஜை செய்தானோ! இந்த ஜென் மத்திலே, இவ்வளவு அந்தஸ்தோடு வாழறான்! கடவுள் கடாட்சம்டா'' என்றான். மற்றவன், அதை மறுத்தும் பேச வில்லை;ஆதரித்தும் பேசவில்லை. நிலக்கடலையைக் கொரித் துக் கொண்டே இருந்தான். இன்னும் இரண்டொரு வீதி களே இருந்தன வீடுபோக. வேகத்தைக் குறைத்தார் பூபதி; மறுபடியும் யோசனை வந்தது,யுத்தப் பிரச்சாரகரைப்போய் பார்த்து விஷயத்தைச் சொல்வோமா என்று. போவதா வேண்டாமா என்ற யோசனையிலே ஈடுபட்டு, மோட்டாரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே இருந்தார். இரண்டு ஆலைத் தொழிலாளர்கள், நடுப்பாதையில் சென்று கொண் டிருந்தனர்; மோட்டார் ஊதுகுழலைப் பலமுறை அழுத்த வேண்டி நேரிட்டது, பூபதிக்கு. ஆலைத் தொழிலாளர், நிதானமாக, மோட்டாரை ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டு, பாதை ஓரம் சென்றனர். மோட்டார் பிறகு அவர் களைத் தாண்டிச் சென்றபோது, ஒரு தோழன், மற்றவனி டத்திலே, ''போறான் பார்டா, பொதிமாடு மாதிரி. நாம்ப வேகாத வெயிலிலே பாடுபட்டுவிட்டு, தள்ளாடி நடக்கி றோம். எப்படிப் போறான் பார்த்தாயா, மோட்டார்லே. அந்த மோட்டார் சவாரியிலேகூட அவருக்குக் களைப்பு வந்துட்டுது; கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைக் கிறான்! நாம்ப, உடம்பு பூரா மண், வீட்டிலே போய்க் கழுவ வேணும்; தெருக் கோடியிலே தண்ணி வந்தா...'' என்று சொன்னான். பூபதியின் மாளிகை இருக்கும் தெருக்கோடி யிலே, ஏதோ கூட்டம்; ஒருவன், உரத்த குரலில் பேசிக் கொண்டிருக்கக் கண்டான் பூபதி. ஒரு சமயம் யுத்தநிதி கூட்டமோ என்று எண்ணினான். பிறகு ''செ! யுத்தநிதிக் கூட்டம் இப்படி ஏன் நடுத்தெருவிலே நடக்கப்போகிறது?'' என்று எண்ணினான். எதற்கும் கவனிப்போம் என்றெண்ணி மோட்டாரை மிக மெதுவாக ஓட்டிக் கொண்டு சென்றான். பிரசங்கி ஆவேசமாகப் பேசுவது தெரிந்தது.ஜனங்கள் மோட் டார் வருவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு, பிரசங்கத் தைச் சரியாகக் கவனிக்காமலிருந்தனர். பிரசங்கி, ஒருவிநாடி பேச்சை நிறுத்தினான். மோட்டாரைப் பார்த்தான்; அதிலே

இருந்த பூபதியையும் பார்த்தான்; ஆரம்பித்தான் ஆவேச மாக. ஜனங்களின் கண்ணும் கருத்தும், பேச்சாளி பக்கம் திரும்பிவிட்டது. 'பாடுபடுபவர்களே! மேனி கருத்தவர்களே' என்று வார்த்தைகள் கணீர் கணீரெனக் கிளம்பிற்று. பூபதி யின் முகத்திலே வெறுப்புக்குறி தோன்றிற்று. தொழிலாளி கள் கூட்டம்போலிருக்கு என்று மெள்ளக் கூறிக்கொண்டே, மோட்டாரைச் சற்று வேகமாக ஓட்டலானான். ஆனால் பிரசங்கியின் குரல் வேகமாக, அழுத்தமாக, ஆவேசத்துடன் மோட்டாரைத் துரத்திக் கொண்டு வருவதுபோல் இருந்தது. கூட்டத்திலே ஒலிபெருக்கி இருக்கவே, பூபதியின் செவியில், 'ஒட்டி உடல் உலர்ந்து ஏன் நாம்ப இருக்கிறோம்? பாடு படாமலா இருக்கிறோம்?ஏன் பசியாரச் சாப்பிடக்கூட முடிய லேன்னு கேள்வி கேட்கறயேப்பா! அதோபார், போறான், உழைப்புறிஞ்சி! அதுபோன்ற ஜென்மங்களைக் கொழுக்க வைக்கத்தான் நாம்ப பரம்பரை பரம்பரையாப் பாடுபட்டுப் பாடுபட்டு இந்தக் கதியானோம். தெரியுதா? நாம்ப இப்படி இருக்கக் காரணம், அவனுங்க அப்படி இருக்கிறதாலேதான்'' என்று அந்தப் பிரசங்கி பேசியது தெளிவாகக் கேட்டது. கோபம் அதிகரித்தது பூபதிக்கு! மோட்டாரின் வேகமும் அதிகரித்தது. வேகம், பங்களா வாசற்படிக் கதவைத் தாக் கிற்று. கோபம், தோட்டக்காரன் முதுகிலே சுரீல் எனப் பாய்ந்தது. ஆனால் அன்று இரவு, பூபதியின் தலையணை நனைந்துவிட்டது. வெட்கம், கோபம், துக்கம் யாவும் ஓரே சமயத்திலே தாக்கியதால் மனம் கண் வழியாக நீரைச் சொரிந்தது! தூங்க முயற்சித்தான்; முடியவில்லை.

''உழைப்பை உறுஞ்சுபவன்! போகிறான் பார்! அந்த ஜென் மங்களை நாம் கொழுக்க வைக்கிறோம்'' என்ற சத்தம், அவன் செவியைத் துளைத்துக்கொண்டே இருந்தது. சோடா குறைவாகக் கலந்து, விஸ்கியைச் சாப்பிட்ட பிறகும் அந்தச் சத்தம் கேட்டபடி இருக்கவே, பூபதி, ரேடியோவைத் திருப்பினான்.

''பஞ்சம் பரவி, பட்டினி அதிகரிக்கவே, பாட்டாளிக் கூட்டம் படைபோலத் திரண்டு மாளிகைகளில் நுழைந்து

கொள்ளை அடிக்கவும், தடுத்தவர்களைத் தாக்கவும், கைது செய்யவந்த போலீசாரைப் பார்த்து, 'நீங்களும் ஏழைகள் தானே என்று சொந்தம் கொண்டாடவும் தொடங்கிற்று. சீமான்கள் அலறி ஓடினர். 'சக்திக்கேற்ற உழைப்பு! தேவைக் கேற்ற வசதி' என்ற முழக்கம் எங்கும் கேட்டது...'' என்று ரேடியோவில், யாரோ, பிரெஞ்சுப் புரட்சியையோ, ரஷி யப் புரட்சியையோ பற்றி விளக்கிப் பேசிக்கொண்டிருக்கவே, விஸ்கி பாட்டிலை ரேடியோமீது அடித்துவிட்டு பூபதி பெருங் கூச்சலிட்டான். ஓடோடி வந்த தாயார், ''என்னப்பா பூபதி!'' என்று கதறினார்கள். ''கெட்ட சகவாசம் வேண் டாமென்றால் கேட்கிறானா?'' என்றார் தகப்பனார். டெலி போன் மூலம் சேதி கேட்டு விரைந்து வந்த டாக்டர் தினகர், ''ஒன்றும் இல்லை. ரொம்பக் களைத்திருக்கிறார்; ஒருமாதம் ஊட்டிபோய் இருந்தால் எல்லாம் சரியாகிவிடும்'' என்று மருந்து இருக்குமிடத்தைக் கூறிவிட்டுப் போனார்.

பங்களாத் தோட்டக்காரச் சிறுவன்,

''வடக்கே ருஷிய நாடொன்றிருக்குதாம்! அங்கே...''

என்று பாட்டை பாடினான். விஸ்கியுடன், டாக்டர் கொடுத்த மருந்தும் சேர்ந்து, பூபதிக்கு மயக்கத்தைத் தந் தது. பாட்டு காதிலே பட்டதும் படாததுமாக இருக்கை யிலேயே, படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

# 3
# வழக்கு வாபஸ்

இடம்: ஒரு (நீதிபதியின்) கோர்ட் மண்டபம்.

இருப்: நீதிபதி, வாதி வக்கீல்; சிவநேசன்—குற்றவாளி; மாணிக்கம் செட்டியார்—வழக்கு தொடுத்தவர்; முத்துச்சாமி—ஒரு பூசாரி, சாட்சி; இருளாண்டி—மற்றோர் பூசாரி, சாட்சி; சேவகன், மேலும் பல வக்கீல்கள், ஊர் மக்கள் ஆகியோர்.

நிலைமை: கோர்ட்டிலே, சிவநேசன் குற்றவாளி என்பதை நிரூபிக்க, வாதி மாணிக்கம் செட்டியாரின் வக்கீல், பல கூறிவிட்டுக் கடைசியாகச் சுருக்கமுரைக்கிறார்.

வாதி வக்கீல்: இவன், மாணிக்கவாசகம் செட்டியார் மண்டிக்கடையில் குமாஸ்தா. இவனிடம் செட்டியாருக்கு அபாரமான நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கைக்குப் பாத்திரனான இவன், செட்டியார் கடையிலிருந்து பத்து வீசைக் கற்பூரத்தைக் களவாடிக் கொண்டு போய்விட்டான். இதுவே இவன் செய்த குற்றம்.

[கூண்டில் குற்றவாளி நிற்கிறான்.]

மாஜிஸ்: (குற்றவாளியைப் பார்த்து) உன் பெயர் என்ன?

குற்: சிவநேசன்.

மா: குற்றம் செய்திருப்பதை ஒப்புக் கொள்கிறாயா?

குற்: நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே.

பூ-157-செ-2

மா: வழக்கின் விவரத்தை வக்கீல் கூறினாரே, கேட்டா யல்லவா?

குற்: கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

[வாதி வக்கீல் எழுந்து நின்று, தான் கேள்விகள் போடுவதாகக் குறிப்புக் காட்டிவிட்டு...)

வாதி வக்கீல்: இது கோர்ட்—நீதிமன்றம்.

குற்: நீதி கிடைக்குமென்று நம்பித்தான் நிற்கிறேன்.

வா.வ: வம்பளப்பு வேண்டாம். மண்டி மாணிக்கஞ் செட்டியார் கடையில் நீ குமாஸ்தாதானே?

குற்: இருந்தேன்.

வா.வ: கடந்த வெள்ளிக்கிழமை என்ன நடந்தது?

குற்: தங்கள் வீட்டிலே பாட்டுக் கச்சேரி நடந்ததாகக் கேள்வி.

வா.வ: குறும்பு பேசாதே. என் வீட்டு நடவடிக்கை பற்றி உன்னை யாரும் கேட்கவில்லை; செட்டியார் கடையிலே என்ன நடந்தது?

குற்: அதைக் கேட்கிறீர்களா? முன்னமேயே அப்படிக் கேட்டிருந்தால் நான் ஏன் தங்கள் வீட்டு விஷயம் பேசப் போகிறேன்.

வா.வ: சரி, சரி! கடந்த வெள்ளிக்கிழமை செட்டியார் கடையிலே என்ன நடந்தது?

குற்: வியாபாரம்.

வா.வ: நான்சென்ஸ்! இது கோர்ட்; இங்கே கோமாளி களுக்கு இடம் கிடையாது.

குற்: நீதிபதி அவர்களே! வக்கீலய்யா கேட்கும் கேள்விக் குத்தானே நான் பதில் சொன்னேன். அவர் பிரமாதமாகக் கோபம் செய்து...

மா: (வக்கீலைப் பார்த்து). கம் டு த பாயிண்ட்.

வா.வ: எஸ் யுவர்ஆனர். சிவநேசன்! சென்ற வெள்ளிக் கிழமை நீ செட்டியார் கடையிலிருந்து பத்து வீசை கற்பூரத்தைக் களவாடினாயா?

குற்: களவாடவில்லை. செட்டியார் அந்தப் பத்து வீசை கற்பூரத்தைக் கொடுத்து, எடுத்துக் கொண்டுபோய், மண்டி மாதவ முதலியாரிடம் கொடுத்துவிட்டு, பதிலுக்குக் கொள்ளு வாங்கிக் கொண்டுவரச் சொன்னார்.

வா.வ: விவரத்தைக் கூறுவதிலே நாணயமாகத்தான் இருக்கிறது. செட்டியார் சொன்னபடி கொடுத்தாயா?

குற்: இல்லை.

[வா.வ. உட்கார்ந்து கொள்கிறார்]

மா: உனக்கு வக்கீல் உண்டா?

குற்: இல்லை.

மா: என்ன சொல்கிறாய் இப்போது? பத்து வீசை கற்பூரத்தை நீ,செட்டியார் சொன்ன இடத்தில் கொடுக்காத தால், அதை நீ களவாடிக் கொண்டாய் என்றுதானே அர்த்தம்?

குற்: தங்களைப் போன்ற பெரியவர்கள் தப்பர்த்தப் பட்டால் நான் என்ன செய்வது?

மா: வேஷம் போடாதே. கற்பூரத்தைக் கடையிலிருந்து எடுத்துச் சென்றது உண்மைதானே?

குற்: ஆமாம்.

மா: கொடுக்க வேண்டிய இடத்திலே கொடுக்க வில்லை. அதுவும் உண்மைதானே?

குற்: ஆமாம்.

மா: வேறு என்ன ருஜு வேண்டும், உன்னைத் தண் டிக்க? சரி, என்ன சமாதானம் சொல்கிறாய்?

குற்: இரண்டொரு சாட்சிகள் உள்ளனர்; விசாரிக்க வேண்டுகிறேன்.

மா: யார்? பெயர்?

குற்: முதல் சாட்சி, மூலைக் கோயில் பூஜாரி முத்துச் சாமி.

[கோர்ட் சேவகன் முத்துச்சாமியைக் கூப்பிடுகிறான்]

மா: பெயர்?

முத்· பூசாரி முத்தன்.

குற்: அப்பா முத்து! போன வெள்ளிக்கிழமை சாய ரட்சை, நான் கோயிலுக்கு வந்தேனா?

முத்: வந்திங்க.

குற்: வந்து...?

முத்: பிள்ளையாரைக் கும்பிட்டிங்க.

குற்: வேறே என்ன விசேஷம் நடந்தது?

முத்: ஒரேயடியா பத்துவீசைக் கற்பூரத்தைக் கொளுத் தினிங்க.

குற்: அவ்வளவுதான் அப்பா. (முத்து போகிறான்; வா. வக்கீல் அவனை நிறுத்தி)

வா.வ: பத்து வீசைக் கற்பூரத்தை இந்த ஆசாமி கொளுத்தினாரா?

முத்: இல்லிங்க, அவர் கொடுத்தாரு; நான் கொளுத்தி னேன்.

வா. வ: அது திருட்டுச் சொத்துன்னு உனக்குத் தெரி யுமா?

முத்: எனக்கெப்படித் தெரியுங்க? கோயிலுக்கு வரு கிறவங்க கொண்டு வருகிற காணிக்கை நாணயமானதா, திருட்டுச் சொத்தான்னு எனக்கு எப்படித் தெரியுங்கோ?

வா.வ: நீ தடுக்கலையா இவனை?

பூ: பூஜையைத் தடுப்பது பாவமாச்சிங்களே!

வா.வ: ஏ! இங்கே பாவம், புண்யம் என்ற பேச்செல்லாம் வேண்டாம்.

பூ: பாவம், புண்யம் இதெல்லாம் இங்கே கூடாதுங்களா? எனக்குத் தெரியாதுங்கோ.

[பூஜாரி போகிறான்]

குற்: இரண்டாவது சாட்சி, இருளாண்டி.

[கோர்ட் சேவகன் இருளாண்டியைக் கூப்பிடுகிறான். இருளாண்டி வருகிறான்.]

குற்: அப்பா இருளாண்டி! போன வெள்ளிக்கிழமை, ஆலமரத்தடி சாமியார் உபதேசம் செய்தாரே, நீ இருந்து கேட்டதுண்டா?

இரு: இருந்தேனுங்க. நீங்களும் வந்திருந்திங்களே.

குற்: என்னைப் பார்த்து அவர் என்னப்பா சொன்னார்?

இரு: அடே அஞ்ஞானி! ஏன இன்னமும் சேவையிலே ஈடுபடாமலிருக்கிறாய்? மூலைக் கோயிலானை வணங்கு. அவனுக்குச் சகலத்தையும் சமர்ப்பித்துவிடு, என்று சொன்னார்.

குற்: நான் என்ன செய்தேன்?

இரு: மயக்கம் வந்த மாதிரி ஆயிட்டிங்க; விழுந்து விழுந்து கும்பிட்டிங்க.

குற்: பிறகு?

இரு: சாமியார் விபூதி கொடுத்தாரு, பூசிகிட்டிங்க.

குற்: அதற்குப் பிறகு?

இரு: கூடையைத் தூக்கிட்டு ஓடினிங்க.

குற்: ஓடி...?

இரு: நானும் பின்னாலேயே ஓடி வந்தேன். நேரே மூலைக்கோயில் போய், கூடையிலே இருந்த கற்பூரத்தைக் கொளுத்தினிங்க; பக்தர்களெல்லாம் விழுந்து கும்பிட்டாங்க.

குற்: அவ்வளவுதான் அப்பா.

[இருளாண்டி போகிறான்.]

குற்: செட்டியாரும் ஒரு சாட்சிங்க.

[செட்டியார் வருகிறார்.]

குற்: செட்டியாரே! வியாழக்கிழமை தங்கள் வீட்டிலே, காலட்சேபம் நடந்ததுங்களா?

செட்: ஆமாம்!

குற்: என்ன கதை நடந்ததுங்க?

செட்: பக்த ராமதாஸ்.

குற்: கதை முடிஞ்ச பிறகு, நீங்க என்கிட்டே என்ன சொன்னிங்க?

செட்: ராமதாசுடைய பக்தியே பக்தின்னு பேசினேன்.

குற்: அவரைப்போல நாமெல்லாம் பக்திமான்களா இருக்கணும்னுகூடச் சொன்னிங்களே.

செட்: ஆமாம்...சொன்னேன்.

குற்: அப்ப, பாகவதர் என்ன சொன்னாருங்க?

செட்: என்னமோ சொன்னார்.

குற்: பரவாயில்லை சொல்லுங்க. செட்டியாரே, உங்களுக்கு ஒப்பற்ற ஒரு நாயனார் பெயர் இருக்கிறது, மாணிக்கவாசகரும் மகாபக்திமான் என்று சொல்லலே...?

செட்: சொன்னான், அந்தக் கதையைச் சொல்லச் சொல்லி ஒருநாள் கூப்பிடுவேன் என்ற நினைப்பிலே.

குற்: கதையைச் சுருங்கக்கூடச் சொன்னாரே.

செட்: ஆமாம், சாம்பிள் காட்டினான்.

குற்: அவ்வளவுதானுங்க.

[அவரும் போகிறார்.]

மா: சாட்சிகள் கூறினதாலே, என்ன சாதகம் உனக்கு?

குற்: சாதகம், உண்டோ இல்லையோ—இந்தச் சாட்சிகள் சொன்னவை உண்மை.

மா: ஆமாம், அதனாலே?

குற்: நான் கள்ளனல்ல, பக்தன் என்று ஏற்பட்டிருக்க வேண்டுமே! பக்திக்குக்கூடத் தண்டனை உண்டோ?

மா: எதுடா பக்தி? வேலை செய்கிற இடத்திலே இருந்து பொருளைத் திருடிக் கொண்டு போவது பக்தியா?

குற்: ராமதாசரும், மாணிக்கவாசகரும், ஏறக்குறைய பத்து வீசை தங்கம் திருடினவர்களாயிற்றே!

மா: அவர்கள், பக்தர்கள்!

குற்: நானுந்தான்.

மா: அவர்கள் அவதார புருஷர்கள்.

குற்: நான் மட்டும்?

மா: போக்கிரித்தனமாகப் பேசுகிறாய். ஜாக்கிரதை! இந்தக் குற்றத்தோடு கோர்ட்டை அவமதித்த குற்றமும் ஏற்படும்.

குற்: நீங்கள் பக்தியையே அவமதிக்கும்போது...

மா: நிறுத்து.

குற்: ஐயா! வழக்கிலே என்ன நேரிடுமோ, எனக்குத் தெரியாது. நான் கள்ளனல்ல. எனக்குச் செட்டியார் கடையிலிருந்து கற்பூரத்தை எடுத்துக் கொண்டு போகும்போது, அவர் சொன்னபடி செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான். வழியிலே ஆலமரத்தடி சாமியாரின் பேச்சிலே மயங்கினேன். பிறர் சொத்தாயிற்றே, இதை அவர் சொன்னதற்கன்றி வேறுவிதமாக உபயோகித்தல் நியாயமல்லவே என்று நினைத்தேன். முன்னாள் இரவு, பாகவதர், பாதுஷாவின் வரிப்பணத்தை பக்த இராமதாசர் செலவிட்டது தர்மம், நியாயம், பக்தியின் பெருமை என்றெல்லாம் கூறினதும், அதை என் எஜமானர் ஆமோதித்ததும், அங்கே கூடியிருந்த

37111
MARAIMALAI ADIGAL LIBRARY

ஆயிரக்கணக்கான மக்கள், 'ராமா! ராமா!' என்று உச்சரித்ததும், என் நினைவிலே வந்தது. உடனே கற்பூரம் செட்டியாருடையதாக இருந்தால் என்ன, பக்தியே மேல் என்று உறுதி பிறந்தது. வினாயகருக்குக் கொளுத்தினேன். ராமதாசரும் மாணிக்கவாசகரும் கள்ளர்களானால், நானும் கள்ளன் தான்!

மா: உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? இராமதாஸ் ஆகிவிடுவாயா நீ?

குற்: ஆகாது! ஆனால் குருவியும் பறவைதான்; பருந்து போலவே, இராமதாசும் நானும் பக்தர் இனம்தான்.

மா: இந்தப் பசப்பு வேண்டாம். அந்தப் பழங்கதைகளைப் பேசித் தப்பித்துக் கொள்ள முடியாது.

குற்: அந்தப் பக்திமான்களின் கதைகள் நீதிமன்றத்துக்கு ஏற்றவையல்லவா?

மா: இது கோர்ட்! நீதிமன்றம்! இங்கே சட்டத்தின்படி தான் வழக்குகள் விசாரிக்கப்படும்.

குற்: நீதிக்கும் சட்டத்துக்கும் சம்பந்தம் இல்லையா?

மா: போதும், வாயாடாதே. ராமதாசர் செய்தால் நீயும் செய்ய வேண்டுமோ? ராமதாசருக்கு இருந்த பக்தி எப்படிப்பட்டது! நீ...?

குற்: என் பக்தி அதற்கு எள்ளளவும் குறைந்ததல்ல. நீங்கள் நம்பாததாலேயே என் பக்தி குறைந்துவிடுமா என்ன?

மா: நீ பக்திமானா அல்லவா என்பது பற்றி எனக்கு அக்கரை இல்லை. கோர்ட்டின் முன் நீ ஒரு கள்ளன் என்று நிறுத்தப்பட்டிருக்கிறாய்.

குற்: உண்மைதான்! அந்த நாட்களிலே ராமதாசரும் மாணிக்கவாசகரும் நிறுத்தப்பட்டதுபோல.

மா: மறுபடியும் அந்தப் பழைய கதையைப் பேசாதே. அந்தக் காலம் வேறு; இந்தக் காலம் வேறு. அந்தக் காலத்து நீதி வேறு; இந்தக் காலத்து நீதி வேறு.

குற்: அப்படிச் சொல்வது சரியா? இன்னும ஜன சமுதாயம் அந்தக் காலத்திலே நீதி என்று எவைகளை நம்பினார்களோ அவைகளையேதானே இனறும் நம்புகிறார்கள். அந்தக் காலத்திலே அரசமரத்தைச் சுற்றி வந்தால் கர்ப்பம் தரிக்கும் என்று தாய்மார்கள் எண்ணி வந்தார்கள். இன்றும் சுற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு தினம் தங்கள் மனைவியார் சுற்றுவதை நான் பார்த்தேன்.

[கோர்ட்டில் சிரிப்பு]

பக்தியைக் கேலி செய்யாதீர்கள். நமது நீதிபதி எவ்வளவு அறிவாளி! படித்தவர்! அரசமரத்தைச் சுற்றுவது சிரிப்புக்கிடமானதானால், ஐயா, அம்மாவைத் தடுத்திருப்பார்களல்லவா? நான் எவ்வளவோ, பெரிய பெரிய உத்யோகஸ்தர் வீட்டுத் தாய்மார்களை அந்த அரசமரத்தண்டை பார்த்திருக்கிறேன்.

மா: உன் புராணப் பிரசங்கம் போதும்.

குற்: ஐயா! என் பேச்சை நிறுத்தும்படிக் கட்டளையிடுவது போல நாட்டிலே நடைபெறும் புராணப் பேச்சை நிறுத்தியிருந்தால், நான் இன்று கள்ளன் என்று குற்றம் சாட்டப்பட்டுத் தங்கள் முன் நிறுத்தப்பட்டிருக்க மாட்டேன்.

மா: யார் உன்னைத் திருடச் சொன்னது?

குற்: பக்தி எனும் உணர்ச்சி.

மா: திருடக்கூடச் சொல்கிறதா?

குற்: கற்பூரத்தை ஏழை பக்தனான நான் திருடினேன். வழிப்பறிக் கொள்ளை நடத்தினார் திருமங்கை ஆழ்வார், பக்திக்காக.

வா.வ: இந்தக் காலத்தில் யாராவது செய்தால் 395—வது செக்ஷன்படி தண்டனை!

குற்: அந்தக் காலத்து நீதி இந்தக் காலத்துக்குச் செல்லாது என்றால் நாட்டை ஆளும் நீங்கள், அந்தக் காலத்து நீதியைப் போதிக்கும் பழைய புராணங்களை மக்களுக்குப்

போதிக்கக்கூடாது; போதிப்பது சட்ட விரோதம் என்று தடுத்திருக்க வேண்டும். தங்குதடையின்றி பழைய நீதிகளைப் போதிக்கும் புராணப் பிரசாரம், பாட்டாகவும், கூத்தாகவும் நாட்டிலே நடப்பதால், இதை அனுமதிக்கும் சர்க்காரும், பழையகால நீதியையே இன்றும் போற்றுகிறார்கள் என்று நான் நம்பினேன்.

மா: அது உன்னுடைய பைத்யக்காரத்தனம்.

குற்: இந்த ஒரு விஷயத்துக்காகவே என்னைப் பைத்யக்காரன் என்று கூறுகிறீர். அந்தக் காலத்து வேப்பமரத்துக்கு இன்றும் தங்களுக்குள்ளதைவிட அதிகாரம் அதிகம். அன்று போலவே இன்றும் கருடனும் குரங்கும் தெய்வங்களாக உள்ளன. அப்படியிருக்கத் தாங்கள் அந்தக் காலத்து நீதிவேறு இன்று வேறு என்று எப்படிச் சொல்லலாம்? அந்தக் காலத்து நீதி கூடாது என்றால், அவைகளை நம்பும்படிச் செய்யும் புராணப் பிரசங்கம் நிறுத்தப்பட வேண்டும்.

[கோர்ட்டை நோக்கி]

என்னமோ உளறுகிறேன் என்று நினைக்கிறீர்கள். போன மாதம், என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே குடியிருந்து வந்த பத்மா, ஏழு வருஷக் கடுங்காவல் தண்டனை பெற்றாள். தன் குழந்தையைக் கிணற்றிலே போட்டுக் கொன்றுவிட்டுத் தானும் விழுந்து இறக்கப்போகையில் அவள் பிடிபட்டுக் கோர்ட்டிலே நிறுத்தப்பட்டுத் தண்டனை தரப்பட்டது. பத்மா ஏழை! குழந்தையும் தானும் வாழமுடியாத அளவு வறுமை. பலதடவை அவள் நல்லதங்காள் கதையைக் கேட்டிருக்கிறாள்! கூத்தாகப் பார்த்துமிருக்கிறாள். வறுமையின் கொடுமை அதிகமானதும், அப்படிப்பட்ட நல்லதங்காளே ஏழ்மை நிலை வந்தபோது ஏழு பிள்ளைகளை கிணற்றிலே தள்ளிவிட்டுத் தானும் விழுந்து செத்தாளே, அவள் அல்லவா பத்தினி, உத்தமி! அவளைப் போல நாமும் செய்ய வேண்டியதுதான் என்று தீர்மானித்தாள். ஏழு வருஷம் தண்டித்து விட்டார்கள். ஐயா! தான்பெற்ற குழந்தையைக் கொன்றாள் பத்மா. ஆனால் அந்தக் கொலைக்குத் தூண்டுதல்

செய்தது புராணம். சதி செய்தும் உடந்தையாகவுமிருந்தது சமூகம். அதற்குத் தண்டனைதர, தர்மப் பிரபுக்களுக்குத் தோன்றவில்லை.

மா: சுற்றி வளைத்துப் பேசவேண்டாம். சுருக்கமாகக் கூறிமுடி.

குற்: நான் கள்ளனல்ல; பக்தன்! பக்தியால் தூண்டப் பட்டவர்கள், களவு மட்டுமல்ல, எது செய்தாலும், மன்னிக் கப்படுவார்கள்; மன்னிப்புக் கிடைப்பது மட்டுமல்ல-மேன்மை அடைவார்கள், இகத்திலே மட்டுமல்ல, பரலோகத்திலும் என்று என்னை நம்பும்படிச் செய்த புராணப் பிரசங்கி, சாமியாடி, அந்தப் புராணப் பிரசங்கத்தை ஏற்பாடு செய்த செட்டியார் ஆகியோர் நான் குற்றம் செய்ததற்குத் தூண் டிய குற்றத்துக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கும் எனக்கும் சேர்த்து தண்டனை தாருங்கள்; நீதியின்படி நடக்க வேண்டு மானால் அவர்கள் குற்றமற்றவர்களானால், நானும் நிர பராதியே.

[கோர்ட் இடைவேளைக்குக் கலைகிறது.]

[கோர்ட் கட்டடத்தில், மாஜிஸ்ட்ரேட் அறை.]

[மா. வா. வ.]

மா: சார்! அவன் சொன்னதிலே நியாயம் இருக்கிறது. உண்மையிலேயே, பக்தியின் பெயரால் நடந்திருக்கிற அக் ரமங்கள் ஏராளம். என்ன காரணத்தாலோ அவர்களெல் லாம் பக்திமான்கள் என்று கொண்டாடப்படுகிறார்கள், அவன் சொன்னதுபோல, மாணிக்கவாசகரும் இராமதாசரும் பிறர் சொத்தை எடுத்துத் தமது பக்தியைக் காட்டச் செல விட்டது, எப்படித் தர்மமாகும்? எப்படி நியாயமாகும்? கற்பூரம் திருடியவனுக்கு நாம் செக்ஷன் தேடுகிறோம்!

வா.வ: பழைய காலத்திலே, பக்தியின் பெயரால் ஏதேதோ நடந்தது. என்ன செய்வது?

மா: பழைய காலத்திலே நடந்த அந்தச் சனியன்கள் இன்றும் நமது மக்களைப் பிடித்து ஆட்டுகிறதே. பாருங்கள்

சார்! அவன் சொன்னானே நம் வீட்டிலே அரசமரம் சுற்றி னார்கள் என்று. எனக்கு அவன் அதைச் சொல்லும்போது, வெட்கம் தாங்கமுடியவில்லை. என்ன செய்வது!

வா.வ: அதெல்லாம் இந்தப் பெண்கள் செய்கிற தொல்லை. நாம் என்ன செய்வது?

மா: எப்படியும் சொல்லிவிடுவதற்கில்லை. எங்கள் மாமா தெரியுமே உங்களுக்கு, சர் இராமராஜன். அவரைப் பாருமே இலண்டன் ரிடர்ன்ட், பாரிஸ்டர், மினிஸ்டர் என்று சகலரும் புகழ்ந்து பேசுகிறதுண்டு. அவர் செய்கிற காரியம், நல்ல வேளையா இந்தப் பயலுக்குத் தெரியாது போலிருக்கு. தெரிஞ்சிருந்தா, நம்ம மானத்தை வாங்கிவிட் டிருப்பான்.

வா.வ: என்ன செய்தார் சர். இராமராஜ்?

மா: அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர், போங் கள்? பழனி முருகன் கோயிலுக்குப் போய் வெள்ளி தீவட்டி பிடிக்கிறார் சார், வெள்ளி தீவட்டி! இது பக்தியாம்!

வா.வ: சர். இராமராஜா?

மா: அவர்தான் சார்! அவ்வளவு பெரிய மேதாவி, பக்தியின் பெயரால் இந்தக் காரியம் செய்தா, இவன் கற் பூரத்தைக் கொளுத்தினதிலே தவறு என்ன, பிரமாதமா இருக்கு?

வா.வ: சட்டம் இருக்கே.

மா: அது இருக்கு சார்! அதைத்தான் அங்கே மேஜை மேலே மலைமலையாகக் குவித்து வைத்திருக்கிறோமே. எனக்கென்னமோ, மதத்தின் பெயராலே நாட்டிலே நடை பெறுகிற பல காரியங்களை நினைத்தால் அவன் செய்தது குற்றம்னுகூடத் தோன்றவில்லை. பாருங்கோ, நம்ம சர். இராமராஜுக்கு ஒரு சாமியார் சிநேகிதம்; அவர் புராணம் படிப்பவர். யாரோ ஒரு நாயனாராம்! கடவுளுக்கென்று அவன் வைத்திருந்த புஷ்பத்தை அவனுடைய மனைவி வாசனை பார்த்தாளாம. பார்த்ததும்,ஆஹா! ஆண்டவனுக்

குச் சமர்ப்பிக்க வேண்டிய மலரை, நீ முகர்ந்து பார்ப்பதா என்று கோபித்துக்கொண்டு, அந்தப் பெண்ணுடைய மூக்கையே அறுத்துவிட்டானாம்.

வா.வ: சுத்த மடப்பயல் போலிருக்கே!

மா: மடத்தனம் இருக்கட்டும் சார்! எவ்வளவு போக்கிரித்தனம் பாருங்கள். நம்ம கோர்ட்டுக்கு இந்தக் கேஸ் வந்தால்...

வா. வ: 326 செக்‌ஷன்படி தண்டனை நிச்சயம்!

மா: அப்படிப்பட்ட பித்தன் கதையை எங்கள் சர். ராமராஜ் எவ்வளவு கொண்டாடுகிறார் தெரியுமோ. இதற்கு ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடி படிப்பு ஏன் சார்...?

வா.வ: ஆனா, அந்தக் காலத்திலே, தந்தை மகன், அண்ணன் தம்பி, குரு சீடன் முதலிய விஷயங்களிலே சிலாக்கியமான கருத்து இருந்தது. ஏகலைவன் கதையை எடுத்துக் கொள்ளுங்கோ. துரோணாச்சாரியிடம், நேரடியாக அவன் வில்வித்தை கற்றுக் கொள்ளவில்லை. உருவத்தைச் செய்துவைத்துக் குருவாகப் பாவித்துக் கற்றுக் கொண்டான். இதற்குத் துரோணாச்சாரி, குரு காணிக்கை கேட்டார், அவன் குருபக்திக்காகத் தன் கை கட்டை விரலையே அறுத்துக் கொடுத்தான். குருசீட சம்பந்தம் எவ்வளவு சிலாக்கியமாக அமைந்திருந்தது பாரும்!

மா: (சிரித்துவிட்டு) அது கிடக்கட்டும்! ஒரு விதத்திலே அதுகூடக் கொடுமைக்கு மடைமை பலியானதற்குச் சான்றுதான். குருசீட சம்பந்தத்தின் அற்புதத்தை விளக்க இந்தக் கதையைக் கூறுகிறீரே, குருசீட சம்பந்தத்திலே நேரிட்ட கோணலுக்கும் கதை இருக்கிறதே. பிரகஸ்பதி குரு, சந்திரன் சீடன்! கல்வி கற்கப்போன சீடருடன் காமலீலை ஆடுகிறாள் குருபத்தினி தாரா! இந்தச் சீடனும் இசைந்து இருக்கிறான். ஆபாசமில்லையோ அது!

வா.வ: அது சரி! இப்படியும் ஒன்று;அப்படியும் ஒன்று. அண்ணனுக்குச் சொந்தமான அரசை நான் ஆளமாட்டேன்;

அவருடைய பாதுகைதான் ஆளவேண்டும் என்று சொன்ன பரதன், அண்ணனிடம் தம்பி காட்டவேண்டிய அன்புக்கு உதாரணமாகிறான்.

மா: அதைப் போலவே, இராமனை மறைந்திருந்து அம்பு போடச் செய்து, வாலியைக் கொன்று, அந்த அரசை அனுபவித்த சுக்ரீவனும் அந்தக் காலத்திலே இருந்தான்.

வா.வ: ஆமாம்; அதுவும் உண்மைதான்.

மா: ஆகையாலே அந்தக் காலம், என்னமோ மகா பிரமாதமான புண்யகாலம், அந்தக் காலத்து ஜனங்கள் மகா உத்தமர்கள் என்று பேசுவது, அந்தப் புராணங்களின் படியே பார்த்தால்கூட அவ்வளவு உண்மை என்று தெரிய வில்லை. நமக்குள்ளே பேசிக் கொள்வோம். ஏன் சார்! எப் படிப் பாண்டவர்கள் திரெளபதியைத் தங்கள் ஐவருக்கும் மனைவியாக்கிக் கொண்டு சகித்தார்கள்? அந்த அம்மை தான் எப்படி இந்தக் கோர ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டார் கள்? சேச்சே! வெளியே சொன்னாலே வெட்கக்கேடு. அவன் சொன்னதுபோல, இனி நாட்டிலே அத்தகைய பழைய குப் பைகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதைத் தடுக்கத்தான் வேண்டும்.

வா.வ: நாம் என்ன செய்ய முடியும்?

மா: ஏன் சார் முடியாது? இந்த நாட்டிலே படித்தவர் கள் குறைவு. படிக்காதவர்கள் அதிகம். படிக்காத மக்கள் நம்மைப் போன்ற படித்தவர்களைப் பார்த்து நடப்பது நல்லது என்று எண்ணுகிறார்கள். படித்த நாமும் அந்தப் பழைய சேற்றிலே புரண்டால், படிக்காத கூட்டம், 'அவ் வளவு படித்தவரே புரளுகிறாரே' என்று கும்பலாகக் குட்டை யிலே விழுகின்றன. இந்த மக்களைத் திருத்த வேண்டு மானால் முதலிலே நாம் திருந்த வேண்டும் சார்.

வா. வ: ஆமாம்.

மா: உதாரணமாக, வீணான ஜாதிமதச் சின்னத்தைக் காட்டுகிற விபூதி உபக்கும் தேவையில்லை; எனக்கும் இந்த நாமம் தேவையில்லாருல டங்க!

[இருவரும் குறிகளை அழித்துவிடுகின்றனர்.]

மா: இது மட்டும் போதாது. இந்தப் பழைய ஏற்பாடுகளைக் கண்டித்துப் பேசவேண்டும் நாமெல்லாம்.

வா. வ: கட்டாயம் செய்ய வேண்டியதுதான்.

மா: சரி! ஒரு விஷயம்! அந்தக் கேசை, வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி...

வா.வ: செட்டியாருக்குச் சொல்லிவிடுகிறேன்.

★

# 4
# பேய் ஓடிப் போச்சு

"அண்ணே! பூசாரி பொன்னனை நான் என்னமோன்னு எண்ணிகிட்டுக் கிடந்தேன். இப்பத் தெரியுது அவன் இலேசுப் பட்டவனில்லைங்கற விஷயம்"

"என்னத்தெடாப்பா, கண்டுட்டே இப்ப?"

"என் மவளுக்கு, கொஞ்ச நாளா, மயக்கமா இருந்தது பார் அண்ணே! மாமரத்துப் பிசாசு, பிடிச்சுகிட்டு ஆட்டி வைச்சிதேண்ணே..."

"ஆமா! உம்மவ, சொல்லாயியைத்தானே..."

"ஆமாண்ணே! பூசாரி போட்ட மந்திரத்திலே, பேய் ஓடிப் போச்சண்ணே! இப்ப என் மவ, சௌக்யமா, சிரிச்சிப் பேசிகிட்டுச் சிங்காரிச்சி பூ முடிச்சிகிட்டு இருக்கிறா. என்னமோண்ணே! மாயம் மந்தரம் இதெல்லாம் தப்புன்னு, என் மவன், பட்டணத்து ஆசாமிக பேச்சைக்கேட்டுகிட்டு, சொல்லி வந்தான். நானும், அவன் நம்மப்போல பட்டிக்காட்டிலே இல்லையே, டிராம் வண்டி ஓடற பட்டணத்திலே இருக்கானே! ரொம்பப் படிச்சவங்க பேச்சைக்கேட்டு இதைச்சொல்றான்னு, நம்பிக்கிட்டு இருந்தேன். பைத்யக்காரப் புள்ளே! இப்பல்லவா தெரியுது, மந்தரம்னா பொய்னு சொல்றதுக்கில்லைங்கிற சூச்சமம். நல்லாயிடுத்து செல்லா. முந்தி, சுருண்டு சுருண்டு படுத்துக்குமா? பேசாது சரியா—முகத்தைக் கழுவாது—ஒருவேலையும் செய்யாது—சிடுசிடுன்னு பேசிகிட்டு .."

"பேய் பிடிச்சா அப்பிடித்தான்."

''ஆமாம்! அந்தப் பய, பேயாவது பூதமாவது - அதெல்லாம் தப்புன்னு சொன்னான். மாமரத்துப் பிசாசு இலேசுப் பட்டதா?''

''ஆமா! அந்தப் பய, தூக்குப் போட்டுகிட்டவன்; உசிரோட இருக்கச்சயே ரொம்பப் பொல்லாத பயலாச்சே! பிசாசு ஆனா கேட்கோணுமா சேஷ்டையை! சரி, சுகமாயி டுத்தேல்லோ, போவுது. சொக்கியம்மாவுக்கு அடுத்த வெள்ளிக்கு ஒரு சேவலை அறுத்துப் படையலைப்போட்டுப்போடு. நான் வர்ரேன். அது சரி! உம் மகளுக்குத்தான் இப்ப, பேய் இல்லையே! இனிக் கண்ணால விஷயத்தை முடிச்சிட வேணு மோல்லோ?''

''ஆமாண்ணெ! முடிச்சிடத்தான் வேணும். என் மவன் அதுக்காகத்தானே, இங்கே தங்கி இருக்கான்.''

''இடம் எங்கே பார்த்தே?''

''நம்ம வேலந்தான்.''

''மறந்து போனேன். போன வருஷமே, அவனைத் தானே உன் மவளுக்கு ஏற்பாடு செஞ்சிருந்தே.''

''ஆமாமாம். பய, கண்ணெ காட்டிப் பல்லைக் காட்டி என் மவளுக்கு ஆசை ஊட்டிட்டான்.''

''பரவாயில்லெ. பையன் நல்லவன்.''

''ஆமாம்! நம்ம கொல்லைக்கு அடுத்த கொல்லையை அவன் குத்தகைக்கு எடுக்கறப்பவே எனக்குச் சந்தேகம்—பையன் பக்கத்திலே வர்ரது பயிர் பண்ண இல்லென்னு...''

''குத்தவ பணங்கூட அதிகமால்லா கொடுத்தானாம்.''

''ஆமாண்ணெ! இந்த வருஷத்தோடே, தீந்ததன்னு வையி. குத்தைவத்தான் எடுத்தானே! மடப்பய மவன். ஒரு கத்திரி, முள்ளங்கி ஏதாச்சும் போட்டா நாலு காசு வருமா? அதே உட்டுப் போட்டு, ரோஜா வெச்சிட்டான்.''

''சரித்தான். செல்லாயிக்குத்தான் பூன்னா உசிரு.''

''இந்தக்காலத்துப் பசங்கசாமர்த்தியத்தப்பாரண்ணே! போவுது, பசங்க சந்தோஷமா இருக்கட்டும். நான் பயந்து போயிருந்தேன். பேய் பிடிச்சுட்டுதே,அது கதி என்னாவுதோ ஏதாவதோன்னு.''

''ஒனக்கு ஒரு கொறையும் வராது. போய்வாப்பா.''

ஒரூர் கிராமத்திலே, உழவன் செங்கோடனுக்கும், ஊர்ப் பெரியவர் கரியானுக்கும் நடந்தது இந்த உரையாடல். செங்கோடன், தன் மகள் செல்லாயிக்கு, பேயால் என்ன நேருமோ என்று பயந்து,பதைத்து,செய்யாத பூஜை இல்லை. கடைசியில் பூஜாரி பொன்னனின் தயவால்தான் அவள் பிழைத்தாள். ஊர்ப் பெரியவர், கரியப்பாவிடம், இந்தச் சந்தோஷச் செய்தியைக் கூறிவிட்டு, செங்கோடன், வேறு யார் அகப்படுவார்கள் பேச என்று புறப்பட்டான். அன்று காலையிலிருந்து, இந்தச் சேதியைப் பலரிடம் கூறிக் கொண் டிருப்பதே வேலையாக இருந்தது செங்கோடனுக்கு.

ஒரூர் (அதுவே அந்தக் கிராமத்தின் பெயர்) வாசிகளிலே முக்கால்வாசிப் பேரிடம் கூறியாகிவிட்டது. ஏற்றம் இறைத் துக் கொண்டிருக்கும் எல்லனைத் தேடிக் கொண்டு போகி றான் செங்கோடன். பேய் பிடித்துக் கொண்ட பெண்ணை, எவன் கலியாணம் செய்து கொள்ளப் போகிறான் என்று பயந்தான், பதைத்தான். உயிருக்கே ஆபத்து நேரிட்டு விடுமோ என்றும் பயம். ஒரே பெண், ஒரே பிள்ளை. பிள்ளை ''இரண்டெழுத்து'' படித்தவன். அதனாலே பட்டணத்திலே வேலை. அதிலேயும், பத்திரிகாலயத்திலே! பார்சல் கட்டுகிற வேலைதான். என்றாலும் பத்திரிகை ஆபீஸ் வேலை என்று தான் செங்கோடன், பெருமையாகப் பேசிக் கொள்வான். அதிலே தவறுமில்லை. இரண்டு தலைமுறையாக ஏர் தவிர வேறு தெரியாத குடும்பத்திலே பிறந்த சுப்பு, வெள்ளைச் சொக்காயும், காக்கி நிஜாரும் போட்டுக் கொண்டு, ஆபீசில் வேலைக்குப் போனால், பெருமை இல்லாமலிருக்குமா! லீவ் கிடைத்து வருகிறபோது, சுப்பு, கிராமத்திலே யாரிடம் பேசும்போதும், தனி மனிதனாகவே தென்பட்டான். விவ சாயத்தைப் பற்றியா பேசுவான்? தெரியாதே பேச! உலக

விஷயங்களைப் பற்றி—அவசர அவசரமாக அவன் படித்துத் தெரிந்து கொண்ட அளவு கூறுவான். வாயைப் பிளந்து கொண்டு கேட்பார்கள் கிராமவாசிகள். செங்கோடனுக்குப் பெருமை! தன் மகனிடம் ''சேதி'' கேட்க, கிராமமே திரண்டு வருவது கண்டு. ''சூரியன் இருக்கே, சூரியன்''என்று ஆரம்பிப்பான் சுப்பு.

''சொல்லுப்பா! சூரிய பகவான்தான் கண் கண்டதெய்வம். அவருக்கு என்ன? சொல்லு'' என்று பக்தியைச் செலுத்தியபடி கேட்பான் குட்டி.

''சூரியன், பகவானுமில்லே, மனுஷனுமில்லே! அது பெரிய நெருப்பு உருண்டைப்பா'' என்பான் சுப்பு. குட்டி பக்கத்திலே இருக்கிறவனைப் பார்த்துக் கண் சிமிட்டுவான்.

''அப்படின்னா, அந்த உருண்டை உருளுதோ காலையிலேருந்து சாயரட்செ வரையிலே?'' என்று கேலி பேசுவான் குப்பன். இதை எல்லாம் சமாளித்துக் கொண்டு, அவர்களுக்குப் பல விஷயங்களை விளக்குவான் சுப்பு.

''என்னென்னமோ சொல்றாண்டா நம்ப சுப்பு!'' என்று புகழ்வார்கள். அவன் சொல்வது, சிலருக்கு விஷயம் புரியாவிட்டாலும் 'அது சரியாகத்தான் இருக்கும்; எல்லாம் சுப்புவுக்குத் தெரியும்'என்று கூறிவிடுவார்கள். பத்துக் காணி பூமிக்குச் சொந்தக்காரனானால்கூட, சுப்பு அடைய முடியாத மதிப்பு, ''ஆபீஸ் வேலை'' கொடுத்தது.

அவன் வேலை செய்து வந்த பத்திரிகை 'உலகம்' என்பது. விதவிதமான வண்ணப் படங்கள் நிரம்பியது. சிரமப்பட்டு, அந்தப் படங்களை எல்லாம் கத்தரித்து, ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்திலே ஒட்டி, செல்லாயிக்குத் தந்தான். தன் அண்ணன் கொடுத்த அந்தப் புத்தகத்தை அருமையான பொக்கிஷமாக மதித்தாள் செல்லாயி. உண்மையிலேயே, எப்போது சமயம் கிடைத்தாலும், அவளுக்கு அந்தப் படங்களைப் பார்ப்பதும், தன்னை ஒத்த பெண்களுக்குக் காட்டுவதும்தான் வேலை.

அந்த அரிய பொக்கிஷம் போன்ற புத்தகத்திலேகூட இரண்டோர் ஏடுகளைக் கிழித்துவிட்டாள் செல்லாயி—அவளா செய்தாள் பாவம்! எல்லாம் அந்தப் பேய் செய்த வேலை என்று செங்கோடன், தன் மகனுக்குக் கூறினான். புத்தகம் கிழிந்ததைப் பற்றிக் கவலைப்படவில்லை சுப்பு. தன் தங்கையின் தேக நிலை பற்றித்தான் கவலைப்பட்டான்.

முன் தடவை வந்தபோது செல்லாயி, ஒரு குறையுமின்றித்தான் இருந்தாள். சொல்லப் போனால் ரொம்பச் சந்தோஷமாகவே இருந்தாள்.

''எங்கேம்மா போயிருந்தே?''—செங்கோடன் கேட்பான்.

''கொல்லைப் பக்கம்''—செல்லாயி சொல்வாள்.

''ஏனாம்?''

''சேங்கண்ணு அந்தப் பக்கமா போயிருக்கும்...''—குறும்புக்காரக் குப்பன் சொல்லுவான் அதுபோல.

அது, வசந்த காலம்—மனப்பருவத்தில்—அதாவது, வேலனுக்கும் செல்லாயிக்கும்...ஆசை பொறந்த சமயம்... காதல் என்று பெயர் கூறத் தெரியாதல்லவா. கிராமத்தார்கள்தானே!

வேலன், குடிகாரக் கோவிந்தன் மகன். ''இந்தப் பயலுக்கு அவங்க அப்பன் சுபாவம் கிடையாது. கள்ளுத் தண்ணியைக் காத தூரத்திலே கண்டாலே, வாந்தி எடுப்பான்'' என்று வேலனைப் பற்றிப் பேசுவார்கள் ஊரார். மகன், மீசை கருக்கும் பருவம் வந்ததற்கும்,கோவிந்தனுக்கு முடக்கு நோய் வந்ததற்கும், காலம் ஒத்து இருந்தது. ஆகவே, வேலன், விவசாய காரியத்தைக் கவனித்துக்கொண்டு, ஊருக்கு நல்லவனாக இருந்து வந்தான்.

''ரொம்பப் பொல்லாதும்மா, வேலு'' என்று, அந்த ஊரிலேயே செல்லாயி ஒருவள்தான் சொன்னவள்.

பொல்லாதவனேதான அவன. போகிறபோதும் வருகிறபோதும், ஏன், செல்லாயியை அப்படிப் பார்க்க வேண்டும், விழுங்கி விடுவதுபோல? ஆனால், செல்லாயியை மட்டுந்தான்! கண், மேயும் சுபாவம் கொண்டதல்ல.

''ஏம்பா! வேலு!'' என்று சிலர் தமாஷ் செய்வார்கள்.

''ஒண்ணுமில்லேண்ணே!'' மிகப் பணிவாக, புன்சிரிப்புடன் கூறுவான.

''ஆசைக்கினியவளே! அல்லி ராணி!

அழகான மாதரசி அல்லி ராணி!

அருகினிலே வரலாமோ அல்லி ராணி!''

என்று அவன் பாடினபோதுதான் செல்லாயிக்கே புரிந்துவிட்டது, தனக்கும், வேலன்மீது பிரியம் என்ற உண்மை.

கிராமக்கூத்து— வேலன்தான் அர்ஜுனன். வேறே யாரப்பா ராஜா வேஷத்துக்கு ஆள் இருக்கிறாங்க—என்று கூத்து வாதியார் குமரேசன் சொன்னபோது, வேலனுக்குப் பூரிப்புதான். அர்ஜுனன் பாடுவதற்கு அவர் சொல்லித் தந்த பாட்டை, அன்று அவன் அவ்வளவு உருக்கமாகப் பாடினான். அல்லி வேஷம் போட்டவன் பக்கத்திலேயேதான் நிற்கிறான். வேலனோ, அவனைப் பார்த்துப் பாடவில்லை —நேரே செல்லாயி இருக்கும் திக்கு நோக்கியே பாடினான். பிரபல நடிகன்கூட, அன்று வேலன் பாடியதுபோல் பாடியிருக்க முடியாது. செல்லாயிக்குச் சமர்ப்பித்த பாடலல்லவா அது!

''சூது தெரிஞ்சுப் போச்சு, உன் சூது;

மாது, நான் அறிவேனே உன் சூது!''

என்று அல்லி வேஷக்காரன் பாடினான்— செல்லாயிக்குப் பாடல் தெரியும்— எப்படிப் பாட முடியும்— வெட்கமாக இருக்குமே!

இந்தச் சமயத்திலே செல்லாயியைக் கண்டு, சுப்பன் பெருமைப்பட்டான். காட்டு மல்லிகை என் தங்கை—நாட்டுப்புறத்திலே இருக்கிறாள்—காசம் பிடித்ததும், கண் மங்கினதுகளும் பட்டணத்திலே 'டால்' அடிக்கின்றன என்று எண்ணிப் பெருமைப்படுவான். இலேசாக வேலன் விஷயம் தெரிந்தது.

''செல்லா! நம்ம கொல்லைக் கோடியிலே இருக்கே ஒரு மரம், அது என்னா மரம்?'' சுப்பு கேட்டான் ஓர் நாள்.

''அதுவாண்ணே, எனக்குத் தெரியாதே''—செல்லா வழக்கத்துக்கு மாறாகப் புளுகு பேசினாள். புரியாதவன் போலச் சுப்பு நடித்தான். ''என்னம்மா, தினம் போகிறே வருகிறே, மரம் இன்னதுன்னு கூடவா தெரியாது'' என்று கேட்டான். ''பிசினி மரம் அண்ணே'' என்று பதில் கூறி விட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

செங்கோடன் வயிறு குலுங்கச் சிரித்துக் கொண்டே, ''பாருடாப்பா, சாமர்த்தியத்தை. பிசினி மரமாம். தாலி கழுத்திலே ஏறுவதற்கு முன்னேயே, பேரைச் சொல்லக்கூடா தாம்! பிசினி மரம்! வேல மரம்னு சொன்னா, அவன் பேரு வருதுன்னு, என்னா யோசனை பாருடாப்பா!'' என்று கூறி னான்.

போதையில்லாத நேரமாகப் பார்த்து, கோவிந்தனிடம் பேசினான் செங்கோடன். ''தைமாசம் முடிச்சிடுவோம்'' என்று கோவிந்தன் கூறிவிட்டான். வேலன், கவர்ச்சியான தோற்றமுடையவனாகவும், உயர்ந்த குணமுள்ளவனாகவும், நல்ல உழைப்பாளியாகவும் இருப்பதையும், அவனிடம் செல் லாயி உள்ளன்பு கொண்டிருப்பதையும் கண்டு, சுப்பு, இது பொருத்தமான காதல் கலியாணம் என்றுகூறி மகிழ்ந்தான். போட்டோ எடுத்துப் போடலாம் பத்திரிகையிலே! எத் தனையோ தேய்ந்து போன திருமதிகளின் திருமண பிளாக்கு கள் வெளிவருகின்றன! ஆனால் ஒரூர் உழவன் மகளின், உயர்ந்த அழகும், வேலனின் வீரத் தோற்றமும், பத்திரிகைக் காரருக்கு எப்படிப் பிடிக்கும்? பட்டிக்காட்டானுக படந்

தானே அது! மிராசு வீடா, இல்லெ ஒரு டாக்டரா, படம் போட?ஆகவே சுப்பு அந்த ஆசையை அடக்கிக்கொண்டான். அவன் மனதில் தன் தங்கையும் வேலனும் சந்தோஷமாக இருக்கும் காட்சி, அப்படியே பதிந்து இருந்தது—போட்டோவைவிடத் தெளிவாக.

இந்த நிலையிலே, ''செல்லாயிக்கு உடம்பு சரியில்லை; பிசாசு பிடிச்சுக்கிட்டு இருக்கு. பயப்பட வேணாம். தக்கது செய்து வர்றோம்'' என்று கடிதம் வந்தால், சுப்பு திடுக்கிட்டுத்தேம்பி அழாமல் எப்படி இருக்க முடியும்?லீவ்இல்லை. எனவே, விவரமாகக் கடிதம் எழுதினான் தகப்பனாருக்கு. ''பேயும் கிடையாது; பூதமும் கிடையாது. நோய்தான் அது. நல்ல மருந்து கொடுக்க வேணும்— வீணா மந்திரம்னும், மாயம்னும் செய்து, செல்லா உடம்பைப் பாழ்படுத்திவிடாதீங்க. நான் ஒரு பத்து நாள்லே வர்றேன்.'' என்று. கொஞ்ச நாள், மகன் சொன்னபடித்தான் செங்கோடன் மந்திரக்காரனைக் கூப்பிடவே இல்லை. ஆனால்,செல்லாயிக்கோ,உடம்பு இளைத்தது, ஓரே மயக்கம், தலைவிரி கோலமாகிக் கிடந்தாள்— கிணற்றிலே குட்டையிலேகூட விழுந்து விடுவேன்னு சொல்கிற அளவுக்குப் பேய் முற்றிவிட்டது.

''செல்லா! உடம்பு என்னம்மா செய்யுது?''—அம்மா கேட்பாள் அன்புடன். கண்களிலே மிரட்சியுடன் செல்லாயி மௌனமாக இருப்பாள். தாய் மேலும் மேலும் கேட்டால், செல்லாயீயின் கண்களிலே நீர் பொலபொலவென்று உதிரும்.

சாப்பாடு சரியாகக் கிடையாது. அழுக்குப் புடவை தான்—துவைப்பது கிடையாது—சமையல் செய்கிற இடத்தருகேயோ, புறக்கடை நடைப்பக்கமோ படுத்தபடி இருப்பாள். ''எழுந்திரம்மா செல்லம்'' உஹூம்—'ஏம்மா!''— ''மயக்கமா இருக்கு''—இதேதான் பேச்சு. ''மாமரத்துப் பிசாசு! வேறே ஒண்ணுமில்லே! இது நல்லாத் தெரியுது; நீ என்னப்பா செங்கோடா, நம்ம பூசாரி பொன்னனைக் கூப்பிட்டனுப்பி, மந்திரம் செய்யச் சொல்லு. ஏன் முழிக்கிறே''—பலர் கூறினர் இதுபோல.

''என் மவன் சொல்றான், அதெல்லாம் வேணாம்னு'' —செங்கோடன் கூறுவான் அதற்குப்பதில்—குடிவெறியிலே, கோவிந்தனும் ஒருநாள் கூச்சலிட்டான். ''மாமரத்துப் பிசாசு புடிச்சவளெ, என்மவன் தலையிலே கட்டலாம்னு நினைச்சயடா...டேய்...'' என்று.

செங்கோடன் கண் எதிரேயும், கருத்திலும், செல்லாயி தான்—வேலன்—கோவிந்தன்—திருமணப் பந்தல்—இவை எதுவும் தெரிவது கிடையாது. ''குடிகாரப்பய, ஏதோ கூவி கிட்டுக் கிடக்கட்டும்'' எனறு கூறிவிட்டான். எதற்கும் வேல னையாவது பட்டணத்துக்கு அனுப்பலாமாசுப்புவைப்பார்க்க என்று எண்ணினான். வேலன், ''அப்பாவுக்கு உடம்பு ஒரு வேளைப் போல இல்லெ—நான் எப்படிப் போவ முடியும்?'' என்று நிர்த்தாட்சணியமாகக் கூறிவிட்டான்.

''இவனைப் போய்த் தங்கமான பயல்னு நினைச்சிக் கிட்டு இருந்தேன். தறுதலைப்பய மவன், தாலிக்கயத்தைத் தூக்கிகிட்டுத் திரிஞ்சான்; இப்ப என்னடான்னா தவப்ப னுக்கு உடமபு சரியில்லைன்னு சொல்றான். கொடம் கொட மாக் குடிச்சுப் போட்டுக் கிடக்கிறான் அப்பன்காரன். இவரு உருகுறாரு. அந்த நாய்க சம்பந்தமே நமக்குக் கூடாது போ'' என்று செங்கோடன் சலித்துக் கொண்டான்.

''போவுது, மெதுவாப் பேசுங்க. அது வேறே அவ காதிலே விழப்போவுது'' என்று செங்கோடன் மனைவி, சிவப்பி கூறினாள்.

கொஞ்சநாள் கழித்துத்தான் சுப்பு வந்தான்—நிலை மையைக் கண்டான்—அவனுக்குத் துக்கம் தாங்க முடிய வில்லை. அவன் கேள்விகளுக்கும், ''ஒண்ணுமில்லே—மயக்கம'' இரண்டே வார்த்தைதான் பதில்.

''ஏம்பா, வேலனை...'' என்று ஆரம்பித்தான் சுப்பு. ''அவரு ரொம்பப் பெரியவருடாப்பா, அப்பனைவிட்டு அரை நொடி அப்படி இப்படி போகமாட்டாரு. எல்லாம் சுப்பு! மனுஷாளுங்க சுபாவம், இந்த மாதிரி நேரத்திலேதானே தெரியுது'' என்று துவக்கி, வேலன் நடந்து கொண்ட போக்

கைக் கூறினான் செங்கோடன். சுப்புவுக்கும் கோபந்தான். 'மடையன்! முட்டாள்! காட்டுப்பூச்சி!' என்று முணுமுணுத்தான். ''ஏம்மா! பொழுதுபோக்கா படப் புஸ்தகத்தைப் பாரேன்'' என்று சுப்பு தங்கைக்கு யோசனை கூறினான். செங்கோடன் புத்தகத்தைக் கொண்டுவந்து சுப்புவிடம் காட்டி ''இதெக்கூடக் கிழிச்சி விடுதேப்பா. இதெல்லாமா நோய்? மாமரத்துப் பேயின் வேலைதாம்பா'' என்றார்.

புத்தகத்தை வாங்கிப் புரட்டினான் சுப்பு. இரண்டோர் ஏடுகள் கிழிந்து கிடந்தன—மோட்டார்—ஒரு அலங்கார புருஷன் ஆகிய இரண்டு படங்கள் அவை.

அலங்கார புருஷனின் படம் அலங்கோலமாகக் கிடந்தது. அவன் யார்? கொஞ்சம் ஆராய்ச்சி நடத்தினான். என்ன காரணத்தாலேயோ, செல்லாயி, அந்த ஆளிடமோ அல்லது அதேபோன்ற உருவமமைந்தவனிடமோ, கோபம் கொண்டிருக்கவேண்டும். ஏன்? பட்டிக்காட்டிலே, இப்படிப்பட்டவன், ஏன் வரப் போகிறான்? வந்திருந்தாலும், செல்லாயிக்கு என்ன தொடர்பு இருக்க முடியும்? யோசிக்க யோசிக்க அவனுக்குக் குழப்பம் அதிகரித்ததேயன்றி, விளக்கம் ஏற்படவில்லை. அவளோ, விறைக்கிறாள்—விம்முகிறாள்—விளக்கம தருவதாக இல்லை. வேலனோ, 'யார் கண்டாங்கோ' என்று சுருக்கமாகப் பேசிவிட்டான். சுப்புவோ இந்தச் சிக்கு அறுக்காமல் இருப்பதில்லை என்று முடிவு செய்து கொண்டான்.

படப்புத்தகம், அவன் தயாரித்ததுதானே—'உலகம்' ஏட்டிலிருந்து கத்தரித்து எடுத்த படங்களைக் கொண்டு. எனவே மோட்டாரும், சுந்தரப் புருஷனும், அவன் கத்தரித்த படங்கள்தான். யாரவன்? யோசித்தான நெடுநேரம்; புரியவில்லை. ஆபீசுக்குச்சென்றான். அங்கு கண்டுபிடித்தான் பழைய இதழ்களைப் புரட்டி—அவன் ஒரு சினிமா டைரக்டர்! சிங்—என்பது பெயர்.

கிராமக் காதல் என்ற உன்னதமான கதையை, டைரக்டர் படமாக்கிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியும் இதழில் இருந்தது. ஒரு சமயம், டைரக்டர் கிராமக் காட்சி

யைப் படமெடுக்கப்போயிருந்தாரோ?அப்போது ஒருவேளை, செல்லாயி அவனைக் கண்டிருக்க முடியுமோ—என்னமோ! டைரக்டரைச் சந்தித்துக் கேட்டாலொழியச் சிக்கல் தீராது என்று ஏற்பட்டது. பார்சல் கட்டும் 'பயலை' பிரபல டைரக் டர் சந்திப்பது, எப்படி? எப்படியாவது சந்தித்தாக வேண் டுமே! பலவிதமான முயற்சிகள் எடுத்தபடி இருந்தான். ஒரு நாள், டைரக்டரே, ஆபீசுக்கு வந்தார்—எடிட்டரைப் பார்க்க!

''சார்! கிராமக் காதல், 'ரஷ்' போட்டுக் காட்டு கிறேன் வருகிறீரா?'' என்று கேட்டார் டைரக்டர்.

உள்ளமோ ரஷ்யாவின் போக்கை ஆதரிக்கச் சொல் கிறது; பத்திரிகை முதலாளியோ அமெரிக்கக் கம்பெனிக்கு ஏஜண்டு. ஆகவே அவரோ, அணுகுண்டு, அன்பு மார்க்கத் தின் தூதுவனாக அமையும்படி அமெரிக்கா அபூர்வமாக வேலை செய்கிறது என்று பிரச்சாரம் செய்யச் சொல்கிறார். இந் நிலையிலே என்ன செய்வது என்று குழம்பிக் கிடந்தவ ருக்கு, படம் பார்க்க அழைப்புக் கிடைத்தது. எதிர்பாரா விருந்தாயிற்று.

என்ன காரணத்தாலோ, சுப்புவையும் அழைத்துச் சென்றார் எடிடர்.

அங்கு சென்றபிறகுதான் சுப்பு உண்மையைத் தெரிந்து கொண்டான்.

எடிடர் மிக மிகப் பாராட்டிய ஓர் காட்சி, சுப்புவைத் தூக்கி வாரிப்போட்டது.

எருமை ஒன்று, வழக்கத்துக்கு மாறாக ஓடிவந்தது— அதன் பின்னே ஓடிவருகிறாள் ஒரு பெண்—வேறு யாரு மில்லை—செல்லாயிதான்! செல்லாயியின் கழுத்திலே ஒரு ரோஜா மாலை!!

கொஞ்சம் தொலைவிலே ஓர் ஆலமரம். அதன் அடி யிலே, வேலன், அண்ணாந்து பார்த்தபடி படுத்துக் கொண் டிருக்கிறான்—நாகரிக உடை அணிந்த ஒரு மாது, ஒரு

திராட்சைப் பழக்கொத்தை அவனுடைய வாய்க்கு நேரா கப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்!

இந்த இரு காட்சிகள் போதாதென்று, சுப்புவே பதைக் கும்படியான வேறோர் காட்சியும் காட்டப்பட்டது.

செல்லாயி, ஒரு ஆப்பிளைக் கடித்துக் கொஞ்சம் தின் கிறாள். அதன் இனிப்பிலே இலயிக்கிறாள் போலும்! அத னாலேதான், முகம் அவ்வளவு 'களை'யாக இருக்கிறது என்று, அவன் முதலில் எண்ணிக் கொண்டான். ஆனால் காட்சியின் அடுத்த கட்டம் அவனைத் தூக்கி வாரிப்போட் டது. கடித்த ஆப்பிளை செல்லாயி, ஒரு ஆடவனிடம், (நாக ரிக உடைக்காரன்) தருகிறாள். அவன் சந்தோஷமாக அதை வாங்கிக் கடித்துத் தின்கிறான்.—மீண்டும் அவளிடம் தரு கிறான்—மீண்டும் அவள், ஆப்பிளில் கொஞ்சம் கடித்துத் தின்கிறாள்—மீண்டும் அவனிடம் தருகிறாள்—மறுபடியும் அவன் அதைத் தின்கிறான். சுப்புவுக்கு வந்த கோபம் இவ் வளவு அவ்வளவு இல்லை.

காட்சி மாறிற்று—வேலனும்—செல்லாயியும், ஆத்தி ரத்துடன் சண்டை போடுகிறார்கள்—செல்லாயியின் தலை மயிரைப் பிடித்திழுத்து வேலன் துன்புறுத்துகிறான். செல் லாயி, அவனுடைய கையைக் கடித்து விடுகிறாள். அவன், செல்லாயியை, ஒரு மரத்தின் மீது மோதும்படி தள்ளுகிறான். இப்படிச் சண்டை நடக்கிறது.

எடிடர், படம் முதல் தரம் என்றார்.

டைரக்டர், 'படத்தின் முக்கிய பகுதிகளல்ல இவை. கிராமீயக் காட்சிகள் சில இவை. படம் பூராவும் தயாரா னால், படஉலகுக்கே பெருமை தரும்' என்று கூறினார்.

'இந்தக் காட்சியிலே வரும் காதல் கட்டம், சண்டை, இவைகள் கதையிலே சம்பந்தப்பட்டவைகளல்லவா'' என் றார் எடிடர்.

''சம்பந்தப்படுத்த வேண்டும்'' என்றார் டைரக்டர். ஆனால், இந்தக் காட்சிகள் என் சமார்த்தியத்தின் பரிசு! கூறுகிறேன் கேளும்! இந்தக் காட்சிகளை நான் எப்படிச் சிருஷ்டித்தேன் என்பதை என்ற பீடிகையுடன், டைரக்டர், தன் திறமையை விளக்கலானார்.

''கிராமக் காட்சியைப் படம் பிடிக்க, ஒரூர் என்ற கிராமம் சென்றேன்—கதாநாயகி ஒய்யாரியும், கதாநாயகன் ஓங்காரமும வந்திருந்தனர். 'எடிடர் சார்! உங்கள் மன தோடு வைத்துக் கொள்ளுங்கள். ஒய்யாரியின் உண்மைப் பெயர் குப்பி! சிங்காரம் என்பவனைத்தான் ஓங்காரம் என்று புதுப் பெயரிட்டேன்.'

கிராமம் அழகாக இருந்தது. கதாநாயகனிடம் கோபித்துக் கொண்டு கதாநாயகி ஊடல் செய்வதாகக் கதை.

இதற்காக, கதாநாயகிக்கு ஒரு கிராமத்தானிடம் காதல் ஏற்பட்டதாக ஒரு கற்பனை செய்தேன்—கதாசிரியருக்கு நான் கூறிய பிறகுதான் விஷயம் தெரியும்.

கிராமத்தான் ஒருவனைக் கண்டேன்—ஒருவாரம் என்னிடம் வேலைக்கு அமர்த்திக் கொண்டேன். ஒய்யாரியும், ஒரு பெண்ணை வேலைக்கு அமர்த்திக் கொண்டாள். அந்த இருவருந்தான் இவ்வளவு பிரமாதமாக நடித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியாது நடித்ததாக! எல்லாம் டிரிக்ஷாட்.

மரத்தடியிலே அவனைப் படுக்கச் செய்து, படம் பிடித்தேன் முதலில்.

பிறகு, ஒய்யாரி கையிலே திராட்சையைக் கொடுத்து, அதை அவள், யாருக்கோ தருகிற பாவனையுடன் ஒருபடம் பிடித்தேன். இரண்டையும் இணைத்தவுடன் கதை உருவாயிற்று! கட்டழகு வாய்ந்த ஒரு கிராமத்தானிடம், மையல் கொண்ட நாகரிக நங்கை, அவனுக்குத் தன் இருதயத்தைக் காணிக்கையாக்கி, அவனுடன் காதல் விளையாட்டு நடத்துகிறாள்—திராட்சை தருகிறாள்—என்று கதை வளர்ந்தது.

கிராமப் பெண்ணிடம் ஒரு ஆப்பிள் கொடுத்து, விட்டு விட்டுக் கடிக்கச் சொல்லிக் காட்சிகள் எடுத்தேன். நம்ம கதாநாயகனிடம் வேறோர் ஆப்பிள் கொடுத்து,அதேபோலச் செய்யச் சொல்லிப் படம் பிடித்தேன். இரண்டையும் பக்குவமாக ஒட்டினேன்—அதன் விளைவுதான்—கிராமப் பெண் நாகரிக புருஷனுடன் நடத்தும் 'பழக்கடி' விளையாட்டு.

இது மட்டுமா? இந்த இரண்டு காட்சிகளையும் அவசர அவசரமாகச் சரிசெய்து, பெண்ணுக்கு அவன் சம்பந்தப் பட்ட காட்சியும், அவனுக்கு அவள் சம்பந்தப்பட்ட காட்சியும் போட்டுக் காட்டினேன். அதன் விளைவுதான். அந்த அற்புதமான சண்டை!''

ஓங்கி அறைந்தான் சுப்பு, டைரக்டரை! அடுத்த விநாடி அவர் காலைப் பிடித்துக் கொண்டான். பயந்து விட்டார் டைரக்டர். பிறகு பரிதாபப்பட்டார், செல்லாயி — வேலன் விஷயத்தைச் சுப்பு விளக்கியதும்.

மோட்டார் கிளம்பிற்று ஒருருக்கு. வேலனைத் தேடிப் பிடித்து, டைரக்டர் விஷயத்தை விளக்கினார்.

''அப்படிங்களா? ஐயையோ! நான், என் பத்தரைமாத்துத் தங்கத்தைச் சந்தேகித்துப் பதைக்கப் பதைக்கப் பேசி விட்டேனுங்களே'' என்று குளறினான வேலன்.

செல்லாயிக்கும் விஷயம் விளக்கப்பட்டது. அவளும் வேலனை வீணாகச் சந்தேகித்ததற்காக வருந்தினாள். இருவருக்கும் இடையே ஒரு டைரக்டரின் 'வேலை' மூட்டிவிட்ட சந்தேகம், நாளாவட்டத்திலே 'பிசாசு' ஆயிற்று என்பதை வேலனும், சுப்புவும் புரிந்து கொண்டனர்— ஆனால் செங்கோடனுக்கு முடியாதல்லவா? அவன், பூசாரி பொன்னனை வேண்டிக்கொண்டான்— அவன் தன் வழக்கமான வேப்பிலை வீச்சை நடத்தினான்— இதற்குள் உண்மை விளங்கி, சந்தேகம் நீங்கிவிட்டதால், செல்லாயிக்கு இருந்துவந்த சஞ்சலம் அதன் விளைவாக ஏற்பட்ட மனக்குழப்பம், மயக்கம், ஏக்கம்

திகில், யாவும் மறைந்துவிடவே, அவள், 'பழையபடி' சிரிப்புக் காரியானாள். செங்கோடன், பூசாரி பொன்னனுடைய மந்திரபலத்தாலே, தன் பெண்ணைப் பிடித்துக் கொண்டிருந்த மாமரத்துப் பிசாசு விலகிவிட்டது என்றே நம்பினான்—அதையே கிராமம் பூராவும் கூறினான். அவன் அறிவானா, பாவம், இவ்வளவு அலைச்சலும், ஆலமரத்துப் பிசாசின் வேலை என்பதை!

★

# 5
# சோணாசலம்

**சோ**ணாசலம், சொன்ன சொல் தவறாதவன் என்ற நற்பெயர் எடுத்தவன். பலருக்கு உபகாரம் செய்தவன். தன்னால் முடிந்த உதவியைச் செய்ய அவன் எப்போதுமே தவறுவதில்லை. பலர் அவனைப் பாராட்டியுமிருக்கிறார்கள். ஓரிரு காரியவாதிகள் மட்டும், சோணாசலத்தின், ''பைத்தியக்கார'' சுபாவத்தைப் பற்றிக் கேலியாகப் பேசுவதுண்டு.

''இந்தச் சோணாசலம் இருக்கிறானே, தன்னால் எவ்வளவு தாங்க முடியும் என்ற கணக்கே தெரியாதவன். எதற்கும் முன்னாலே நிற்கிறான். பணம் நிறைய வைத்துக் கொண்டிருப்பவர்கள், பத்து ரூபாய் தருவதற்கு யோசிக்கிறார்கள்; இவன் தாராளமாகக் கொடுத்துவிடுகிறான். 'பசி' என்று எவனாவது கூறிவிட்டால் போதும்; மடியிலே எட்டணா இருந்தாலும், ஒரு ரூபாய் இருந்தாலும் சரி, எடுத்துக் கொடுத்து விடுகிறான். பைத்யக்காரன்! இப்படிக் கைக்காசைச் செலவழித்துவிட்டு, இவன் 'ஓட்டாண்டி'யாகி விட்டா, பிறகு, இவனுக்கு உதவி செய்ய யார் வருவார்கள்? கஷ்டப்படும்போது தெரியும் இதெல்லாம்''—என்று பேசினார்கள்.

சோணாசலம் ''ஓட்டாண்டி''யாகிவிட்டான்—ஒரு குற்றமும் அவன் செய்யவில்லை. அவன் செய்து வந்தது, ''லுங்கி'' வியாபாரம். கைலித்துணியை, வெளி நாடுகளுக்கு அனுப்பி வந்தான். காசும் கொஞ்சம் சேர்ந்தது. என்ன குறைந்தாலும், உருப்படிக்கு மூணு ரூபாய் இலாபம் வந்தது —எனவே, உற்சவம் என்றால் 50, பஜனைக்குப் பத்து,

பசித்தவனுக்குக் கால், அரை—இப்படிப் பலருக்கும் உதவி செய்து வந்தான். தன் மகளுக்கும் பத்துச் சவரனில் கழுத்துக்குச் செயின், எட்டுச் சவரனில் புதுமோஸ்தர் கைவளையல்—இப்படி நகைகளும் செய்தான். கையிலே பணமும், ஊரிலே பெயரும இருப்பதைக் கண்டு பூரிக்க, பெரிய நாயகி தான் இல்லை—அது ஒரு பெரிய மனக்குறை சோணாசலத்துக்கு. அடிக்கடி தன் மகளிடம் சொல்லுவான். ''உங்க அம்மா, பெரியநாயகி இருந்தா, உனக்குச் செயின் செய்ததைக் கண்டு பூரிச்சுப் போயிருப்பா'' என்று கூறி ஆயாசப்படுவான்.

பெரியநாயகி, அந்தச் செயின் செய்ததையும் காணவில்லை. பிறகு, அது, மார்வாடிக கடையில் விற்கப்பட்ட காட்சியையும காணவில்லை!

கைலி வியாபாரத்துக்கு நெருக்கடி வந்தது; சோணாசலததின் சொத்தும் கரையலாயிற்று. வியாபாரந்தானே! குவிகிறபோது இருக்கிற வேகத்தைவிட, அதிக வேகமாகத தானே கரையும? உருப்படி ஒன்று இருபத்து நாலுக்குக் கொள்முதல்—மார்க்கெட் மளமளவென்று இறங்கி, பனிரெண்டு, பதினொன்றுக்கு வந்துவிட்டது. சோணாசலம், ''ஒட்டாண்டி''யாக நேரிட்டது அதே வருஷந்தான், மகளுக்கும் கலியாணம்.

அடுத்த வருஷம் நிலைமை சீர்படும் என்று பார்த்தான்—இல்லை! அதற்கு அடுத்த வருஷம், நிலைமை அதைவிட மோசமாகிவிட்டது. உருப்படிகள் ஒவ்வொன்றும், அவனைப் பிடித்துக் கடிக்கும் பாம்புகளாயின! சோணாசலம், நொடித்துப் போய்விட்டான்.

பிரபல கைலி வியாபாரி சோணாசலத்தின் ஒரே மகளைக் கலியாணம் செய்து கொண்ட தீனதயாளன், தீப்பொறி பறக்கும் கண்களுடன் மாமனாரைப் பார்த்துச் சொன்னான்.

''வருஷம் ஏழானாலும் சரி, சீர் சரியாகச் செய்தா லொழிய உன் மகளை நான் வீட்டுக்கு அழைத்துச் செல்ல முடியாது. என்னால் அந்த அவமானத்தைத் தாங்கவே முடி யாது'' என்று.

உன் மகள்! என் மனைவி என்றுகூடச் சொல்ல அவ னுக்கு மனம் இல்லை! அவ்வளவு கோபம்!

சோணாசலம், ஏதேதோ முயற்சி செய்தான். யாரா ருடைய உதவியையோ கோரினான். பலன் இல்லை.

அதோ, தள்ளாடிக் கொண்டு போகும் அந்த ஆளைப் பாரும். அவன்தான் சோணாசலம்.

நோயோ?

ஆமாம்! வறுமை நோய்! மருந்து, மலைமலையாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவனுக்குத் தர மாட்டார்கள். இவன் வறுமை நோயினாலேயே நொந்து, நொறுங்கி, நசித்துப் போக வேண்டியதுதான். இவனிடம் இரக்கம் காட்டுபவர் யாரும் இல்லை.

இவனிடம் இரக்கம் காட்ட ஒருவராவது இருந்தால், அவன் முகத்திலே அவ்வளவு கவலை தோன்றாது—கண் களிலே கப்பிக் கொண்டிருக்கும் சோகத்தைக் கவனித்து மருந் திட யாரும் முன்வரவில்லை; என்னமோ பேசுகிறான்; கேட் போம்.

சோணாசலம் சோகக் குரலிலே பேசுகிறான்:—

சித்திரவதை செய்கிறானே, எப்படி நான் அதைத் தாங்குவேன்.

கலியாணமாகி மூன்று வருஷமாகிறது—காதலன் ஆயி ரம் ரூபாயாவது சீர் செய்தால்தான் பெண்ணை வீட்டிற்கு அழைத்துச்செல்ல முடியும் என்கிறான். அடே அப்பா! நான் நொந்து போயிருக்கிறேன்—வியாபாரத்திலே நொடித் துப் போய்விட்டேன்—கொஞ்சம் இரக்கம் காட்டு என்று கெஞ்சுகிறேன்—முடியாது என்கிறான்.

பொண்ணோ! வீட்டிலே தேம்புகிறாள்.

மற்றவர் வீடுகளிலே எல்லாம், கொண்டாட்டம்! மருமகப் பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். என் மகளின் மனம் என்ன பாடுபடும்?

சோணாசலத்தின் சோகத்துக்காக அந்த ஊரிலே, வழக்கமாக நடைபெறும் எந்தக் காரியமும் நின்று விடவில்லை. பஜனை, பாட்டு, ஆடல், தேர், திருவிழா, எலக்ஷன், சகலமும் சிறப்பாக நடந்து கொண்டே இருந்தன. சோணாசலம் 'டல்லாகி'விட்டான்; ஆகவே அவனிடம் 'உதவி' பெற, யாரும் வருவதில்லை.

''சித்திரவதை செய்கிறானே பாவி!'' என்று சோணாசலம் கூறிக்கொண்டு, பாதை ஓரத்திலே நின்றுகொண்டு, யாருடைய வரவுக்காகவோ, எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பாராத ஒருவன், ஆனால் சற்றுப் பழக்கமுள்ளவன், அவ்வழி வந்தான். சோணாசலத்தைக் கண்டு, 'லோகாசாரப்படி' பேசினான்.

*[வழியே ஒருவர் வருகிறார்]*

ஒருவர்: சோணாசலம்! ஏம்பா, என்ன இந்த வருஷமாவது, மாப்பிள்ளைக்கும் உனக்கும் இருக்கிற மனஸ்தாபம் தீர்ந்து வந்திருக்கிறானா வீட்டுக்கு?

சோ: வருவதாகத்தான் சொல்லி அனுப்பி இருக்கிறார்.

ஒருவர்: என்னமோ போ! கல்யாணம் செய்தும் சுகமில்லை. அவனுக்கு இந்த மூணு வருஷமா, கலியாணத்தைச் செய்த கையோடு கையா அவனுக்குச் செய்ய வேண்டிய சீர் வரிசையைச் செய்து முடிச்சுவிட்டா, அவன் நிம்மதியாக இருந்திருப்பான். வீணாக அவனையும் அலைய வைத்து விடவே, உன் மகளுக்கும்தான் மனதுக்கு விசாரம்; என்னமோ போ, இந்த வருஷமாச்சும், சுகப்படட்டும் மாப்பிள்ளை.

*[போகிறான்.]*

சோ: மடையன்! என் கஷ்டத்தை உணரவில்லை, நான் மாப்பிள்ளை மனதை நோகச் செய்ததாகச் சொல்கிறான். துளியாவது ஈவு இரக்கம் இருந்தா இப்படிச் சொல்ல மனம் வருமா? எங்கே போறது, பணத்துக்கு. வந்து ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறான். வாய்க்கொழுப்பு, சொல்லியும் விட்டேன், வாப்பான்னு. வீட்டிலே வந்து, அந்தப் பெண் எதிரே என் மானத்தை வாங்குவானேன்னுதான் வருகிற பாதையிலே காத்துக்கிட்டு இருக்கறேன்—காலிலே விழுந்தாவது கெஞ்சிக் கேட்டுக் கொள்வோம்னு. என்ன சொல்கிறானோ!

*[அவ்வழியே ஒரு வாலிபன் வருகிறான். அவனைக் கண்டதும் சோணாசலம் மரியாதையுடன் பேசுகிறான்.]*

சோ: தம்பி! வாப்பா, வா!

வா: இதென்ன, நடுத்தெருவிலேயே உபசாரம; வீட்டுக்குப் போகலாமே!

சோ: போகலாம்பா, போகலாம்.

வா: புறப்படுங்க! ஏன், யாருக்காகப் பார்த்துக்கிட்டு இருக்கிறிங்க? வண்டியா? வேண்டாம். நான் ரயிலை விட்டு இறங்கி, சாமான்களை எல்லாம் ஓட்டலிலே ஒரு அறை வாடகைக்குப் பேசி வைத்துவிட்டு, நடந்து வந்தேன். எப்படி இருக்கிறீங்க, என்னை நிலைமைன்னு பார்த்து விட்டுப் போக.

சோ: என்னைப் பார்த்தா தெரியலையாப்பா உனக்கு. நீ நல்ல குணமுடையவன்—படிச்சவன்—என் மனதைத் திறந்து உன்னிடம் பேசுகிறேன். நானும் மூன்று வருஷமா, எவ்வளவோ முயற்சி செய்துதான் வர்ரேன்.

வா: அதுக்கென்ன செய்யறது. அதததுக்குக் காலம் கூடி வரவேணுமில்லே. போவுது, இப்ப எல்லாம் சரியாகப் போவுது. என்னென்ன சீர் செய்யறதா உத்தேசம்?

சோ: அதைப் பத்தித்தாம்பா பேசணும்னு நிற்கறேன். வீட்டிலே கொழந்தையின் முகத்தைப் பார்க்கச் சகிக்கலை. ஊரார் ஏசறதையும் கேக்கப் பொறுக்கலை. பெண்ணை ஏன் இன்னும் அனுப்பலே—மாப்பிள்ளை ஏன் இன்னமும் வரலைன்னு கேட்டுக் கேட்டு, என்னைக் கொத்திவிடறாங்க. கேள்வி கேட்க ஆள் இருக்கே தவிர, இரக்கப்பட்டு, இந் தாப்பா கடனாக இந்தத் தொகையை வைச்சிக்கோ, பிறகு கொடுன்னு உபகாரம் செய்கிறவங்க இல்லை.

வா: ஆமாம்! இதென்ன நீங்க பழைய கதையையே பேசறிங்க.

சோ: நிலைமை, மாறலையேப்பா.

வா: அதுக்கு ஏன் மருமகப்பிள்ளையை வரச்சொன் னிங்க. சரிதான், அவன் சொன்னது சரியாகப் போச்சு.

சோ: எவன்?

வா: உம் மருமகன்தான். டே! எங்க மாமனாரு சீர் செய்யறதாச் சொல்லி வரவழைத்து, ஏமாற்றி எப்படியா வது பெண்ணைத் தலையிலே கட்டிவிடத் தந்திரம் செய் வாரு. ஆகையாலே நீ முதலிலேபோயி,என்னென்ன சாமான் வாங்கி வைச்சிருக்குன்னு பார்த்துவிட்டு வான்னு, ஓட்ட லிலே தங்கிவிட்டு என்னை அனுப்பினான்.

சோ: உனக்குக் கோடி புண்யம்பா! இந்த ஏழைகிட்ட இரக்கம் காட்டி, எப்படியாவது என் மருமகனுக்கு நல்ல பேச்சு சொல்லி...

வா: ஐயையோ! நம்மாலே முடியாதுங்க. அவன், ரொம்ப கண்டிப்பான பேர்வழி; யார் சொன்னாலும் கேட்க மாட்டான்.

சோ: என்னைப் பாரப்பா! என் மக கதறுகிறதைப் பார்த்தாத் தெரியும். கொஞ்சம் இரக்கம் காட்டப்பா.

வா: நான் காட்டி என்னாங்க செய்யறது. அவன் பிடிவாதக்காரன். எப்படியாவது, ஆயிரம் என்பதை ஐந்நூறு, நானூறு, அடெ, ஒரு இருநூறு ரூபாய்க்காவது சீர் செய்து விடுங்க. வேறுவழி இல்லை. எங்கேயாவது கடன் கிடன் வாங்கித்தான் தீரணும்—நான் போய் 'சேதி'யை 'நைசா' சொல்லி, உங்க மாப்பிள்ளையை, அழைச்சிகிட்டு வாரேன்—நீங்க, சாயந்தரத்துக்குள்ளே எப்படியாவது சரிப்படுத்துங்க, நான் வரட்டுமா?

சோ: செய்யப்பா!

[வாலிபன் திரும்பிப் போய்விடுகிறான்]

சோ: படுபாவிப் பய! இவனுக்கும் துளிகூட இரக்கம் இல்லை. ஆண்டவனுக்காவது இரக்கமிருந்தா எனக்குச் சாவாவது வரவேணும்—அதுவும் இல்லை. எங்கேன்னு போய்த் தேடறது பணத்தை. எவன் கொடுப்பான் கடன்? திருடவும் தெரியாது.

[தள்ளாடி நடந்து செல்கிறான்.]

சகிக்க முடியவில்லையல்லவா? சரி, அவன் நிலைமை என்ன ஆகிறது என்று பார்ப்போம்.

கண்றாவிக் காட்சியைப் பார்க்க என்னால் முடியாதப்பா என்று கூறிவிட வேண்டாம்.

இந்த மாதிரி சமயத்திலே கண்களை இறுக மூடிக்கொள்வதால்தான் உலகிலே பஞ்சமாபாதகம் நடைபெறுகிறது. கண்களையும் மூடக்கூடாது, ஊமையாகவும் இருக்கக் கூடாது. அதோ போகிறானே, இரக்கத்தைத் தேடித்தேடிப் பார்த்து, கிடைக்காததால் கதிகலங்கி அவன் இப்போது எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறான். கொலை—களவு—பொய்-சூது-வஞ்சனை இவை எதுவும் முடியாவிட்டால், தற்கொலை. இவ்வளவுக்கும் அவன் தயார்! அவன் மட்டுமல்ல, உலகிலே அனேகர். இரக்கம் தேடினான் அல்லவா இவன்? இவனே இப்போது இரக்கத்தைக் கைவிட்டு விடுவான்.

[சின்னக் குழந்தையை வண்டியிலே வைத்துத் தள்ளிக்கொண்டு ஆயா ஒருவள் வருகிறாள்.]

[திடீரென்று அவளுக்குக் காக்காய் வலிப்பு.]

[கீழே வீழ்கிறாள்—வண்டி கவிழ இருக்கிறது.]

[சோணாசலம், பார்த்துவிட்டுப் பதைத்தோடி வந்து, வண்டியைப் பிடித்துக் கொண்டு, அவளையும் காப்பாற்றுகிறான்.]

[அவள் கொஞ்சம் மூர்ச்சை தெளிந்ததும் கும்பிடு கிறாள்.]

ஆயா: குலதெய்வம் போல வந்திங்கய்யா! கோடி புண்யம் உங்களுக்கு.

சோ: ஏம்மா, உனக்கு இது மாதிரி வலி....

ஆயா: கொஞ்சநாளா இந்தச் சனியன் என்னைப் பிடிச்சிகிட்டு வாட்டுது—மந்தரம் மருந்து எல்லாம் செய் தாச்சி—

சோ: மயக்கம் இன்னும் தெளியலே போலிருக்கே.

ஆயா: ஆமாம்—ஆனா, குழந்தையைப் பொழுதோடே கொண்டு போய்ச் சேர்க்கோணும்—

சோ: ஐயோ, பாவம்!

ஆயா: இரக்கமான மனசய்யா உங்களுக்கு. உங்களாலே தான், புள்ளே புழைச்சுது. வண்டி கவிழ்ந்து போயிருந்தா, என்ன கதியாவும் குழந்தை!

சோ: குழந்தை, ரொம்ப அழகா இருக்கும்மா! யாரு வீடு?

ஆயா: கலெக்டரய்யா வீட்டுக் குழந்தை.

சோ: இலட்சணமா இருக்கு.

ஆ: அதுக்கு என்னங்க குறை. கலெக்டரய்யா சம்சாரம், ஒரு பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணு. குழந்தை மேலே தாத்தாவுக்கு உசிரு. அவர்தான், நேத்து செய்து போட்டாரு, அந்தப் புதுசெயின். ஆறு சவரன்.

[மறுபடி மயக்கம்.]

[கீழே சாய்த்துவிட்டு ஓடுகிறான், தண்ணீர் கொண்டு வர. சட்டி ஓட்டில் தண்ணீர் கொண்டுவந்து தெளிக்கப் போகும்போது, செயின் தெரிகிறது—புத்தி மாறுகிறது—செயினைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடுகிறான்]

[அவ்வழியே ஒரு வாலிபன் வருகிறான்—கீழே வாயில் நுரை தள்ளியபடி விழுந்து கிடப்பவளைக் கண்டு, பச்சாதாபப்பட்டு]

அடடா! ஏழை படும்பாடு, எப்படி எப்படி எல்லாம் இருக்கிறதப்பா, இந்த உலகிலே.

அம்மா! அம்மா!

[மெதுவாகக் கண்திறந்து மிரள மிரள விழிக்கிறாள்.]

ஆயா: மறுபடியும் வந்துவிட்டுது பாத்திங்களா, அந்த மயக்கம்—நல்ல வேளை, நீங்க இருந்து, காப்பாத்தினீங்க.

வா: மறுபடியும் மயக்கமா? இதற்கு முன்னே ஒரு தடவை மயக்கம் வந்ததா உனக்கு?

ஆயா: என்னய்யா இது, இப்படிக் கேட்கறே! நீதானே முன்னே என்னைக் காப்பாத்தினே!

வா: நானா?

[குழந்தையைப் பார்த்து]

ஆயா: ஐயோ! செயின்! அடபாவி! செயினைத் திருடிக்கிட்டானே.

[கூச்சலிடுகிறாள்.]

[சிலர் ஓடி வருகிறார்கள்.]

ஆயா: ஐயா, இந்த அநியாயத்தைக் கேளுங்க. எனக்கு காக்காவலி வந்துவிட்டது. இந்த ஐயாதான் காப்பாத்தினாரு—மயக்கம் தெளியறதுக்குள்ளேயே மறுபடியும் வலி வந்துடுச்சி; நான் கீழே விழுந்துவிட்டேன்—என்னிடம் ரொம்பப் பரிதாபம் காட்டி,பசப்பினான் இந்தப் பாவி—படுபாவி! குழந்தே கழுத்திலே இருந்த செயினை—

வா: செ! ராஸ்கல்! யாரைப் பார்த்துத் திருடன்னு சொல்கிறே.ஆளைப்பார்த்தா கூடவா,மனுஷாளுடைய தராதரம் தெரியலே?

கும்பலில் ஒருவன்: அடடே! மகா, தராதரம் கண்டவருடா இவரு. ஏண்டா! திருட்டுப்பயன்னா அவன் என்ன, சதாரம் டிராமாவிலே வருகிற திருடன் மாதிரியாகத்தான் இருப்பானா? உனக்கு என்னவாம்? இவரு உருவைப் பார்த்தாலே, யோக்யருன்னு தெரியுதாம்.

வேறொருவன்: நெத்தியிலே எழுதி ஒட்டி இருக்குது.

வாலி: டே! உளறாதிங்க. அம்மா! சரியாகப் பார்த்துச் சொல்லு. நானா,இதற்கு முன்பு மயக்கம் வந்தபோது இருந்தேன்.

ஆயா: ஆமாம். ஐயோ! செயின் போயிடுத்தே. நீதான் இருந்தே இங்கே. எனக்கு மயக்கமா இருந்தது. சரியாகப் புரியலையே. வேறே ஆள் இருந்தானோ என்னமோ! அதுவும் தெரியலே.

கும்பலில் ஒருவன்: அந்த மாதிரியும் திருடறது உண்டு. இரண்டு ராஸ்கலா வந்திருப்பானுங்க. ஒருத்தன் தூக்கிவிட்டு ஓடி விட்டிருப்பான்—இவன் அதை மறைக்க இங்கே நின்னுக்கிட்டு—ஜாலம் காட்டுகிறான்—டே! யாரு அவன், உன் பங்காளி—(அடிக்கிறார்கள்.)

[கான்ஸ்டபிள் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகிறான்.]

✱

# 6
# பலாபலன்

''சூரியனுடைய பார்வை, மட்டாகப் பதினைந்து நாள் பிடிக்கும். அப்போதுதான் இந்தக் காய்ச்சல் குறை யும்.''

''நெருப்பு வீசுதுங்க, அவர் பக்கத்திலே உட்கார்ந் தாலே.''

''வீசும், வீசும்! தீட்சணியமாகத்தான் இருக்கும்; சூரிய னுடைய பார்வை அப்படிப்பட்டது. அதற்கென்ன செய்வது? ஆனாலும் பாதகமில்லையே; உயிருக்குப் பயமில்லை—சனி, இப்போது இருக்கிற இடத்திலே இராமல், வேறு இடம், அஷ்டமத்துக்குப் போயிருந்தா...அடடா...''

''என்னாங்க, பெருமூச்சு விடறிங்க?''

''கமலம்மா! உன் புருஷனுடைய ஜாதகத்தை முத லிலே பார்த்ததும், சத்யமாச் சொல்றேன், நான் பயந்து தான் போனேன்—ஏன்—சூரியனுடைய பார்வை அப்படி இருந்தது. பிறகு, சனி, எங்கே இருக்கிறான்—அதுதானே முக்கியம்—அதனாலே, சனியைக் கவனிச்சேன்—அவன், நல்லவேளை—உன் மாங்கலிய பலத்தாலே அஷ்டமத்திலே இல்லை—அப்பா—பரவாயில்லை—உயிருக்கு ஆபத்து இராது என்று மனசு நிம்மதியாச்சு.''

''என்னமோ போங்க, அந்த வெங்கடேசப் பெருமாள் வாயிலே இருந்து வந்த சொல் மாதிரி, இருக்குதுங்க உங்க பேச்சு.''

''நானா பேசுகிறேன். பைத்யமே! கிரஹம் பேசுவதை நான் சொல்கிறேன். ஒவ்வொரு கிரஹமும், சஞ்சாரம் செய்றெபோது ஏற்படுகிற பலாபலன்களைக் கண்டறிவதுதானே முக்கியம். இந்தக் காலத்திலே, கிரஹ சஞ்சாரத்தைப் பற்றிய ஞானமே இல்லாதவாளெல்லாம், 'பலகரை'யை வைத்துப் பார்ப்பது, குருவியைக் கேட்பது என்று, ஏதேதோ பொய்யும் புரட்டும் செய்து, பணத்தைத் தேடுவதிலே ஈடுபடுவா. நான் அப்படியா! சனி, எந்த இடத்திலே இருக்கிறான், அங்காரகன் என்ன செய்கிறான், புதன் என்ன சொல்றான், வியாழன் என்ன பண்ணுவான் என்று இப்படி, அந்தந்த கிரஹத்துடைய நிலையைப் பார்த்து, கணித்து, சரி, மூணும் மூணும் ஆறு, ஆறுடன் நாலு சேர்ந்தா பத்து—என்பது போல, திட்டமாகச் சொல்லுவேன். அதுபோலத்தான், உன் புருஷன் ஜாதகத்தை நன்றாகப் பார்த்துச் சொல்கிறேன், சூரியனுடைய பார்வை தீட்சணியத்தாலே காய்ச்சல் அதிகமாக இருந்தாலும், சனி இப்போது இருக்கிற இடம், அவ்வளவு கெட்ட இடமல்ல; ஆகையாலே, உயிருக்கு ஆபத்து நிச்சயமாக இராது; படிப்படியாக ஜுரம் குறையும். பயப்பட வேண்டாம்; எதற்கும் சூரியனுக்கும் சனி பகவானுக்கும் ஒரு மண்டல விளக்கு ஏற்று, நல்லது. எல்லாம் கணக்குத் தானே. காரணமில்லாத விவகாரமா! மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்ந்தா, இரத்த நிறமாகிறது போலத்தான், கிரஹங்கள் ஒன்றோடொன்று கொள்கிற சம்பந்தா சம்பந்தத்தாலேயே பலாபலன் உண்டாகும்.''

சம்பந்தா சம்பந்தம்—பலா பலன்—பார்வை தீட்சண்யம்—கிரஹ சஞ்சாரம் இவைகளை எல்லாம் விளக்கிவிட்டு, கமலம்மாள் கொடுத்த 'சில்லறை'யைக் கணக்குப் பார்த்து, முடிந்து கொண்டு, ஜோதிடர் குப்பய்யர் வீடு போனார். கமலம்மாள் ஐயர் சொன்ன கணக்கு, பொய்யாகாது; அவர் தான் பலகையிலே இப்படியும் அப்படியுமாக ஏதேதோ கோடு போட்டு, கட்டங்கள் அமைத்து, ஒவ்வொரு கட்டத்துக்குள்ளேயும், ஒவ்வொரு கிரஹத்தை அடைத்துக் கணக்குப் பார்த்துச் சொன்னாரே என்று எண்ணாமலிருக்க்

முடியுமா? மேலும் அவளுக்கு அஷ்டமத்தில் சனி; அங்காரக நிலை; சூரியனுடைய பார்வை என்பன போன்றவைகள் விளங்கவில்லை என்றாலும், மூணும் மூணும் ஆறுபோல, மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்ந்தால் இரத்த நிறம் என்பது போல, என்று புரியக்கூடியதைச் சொன்னாரே, ஐயர். அதனால் அவருடைய வாக்கு, பொய்யாகாது என்ற திடமான நம்பிக்கை ஏற்பட்டது. ஏனோ எப்படியோ, அவளுக்குத் தெரியாது—குருவி எடுத்துக் கொடுத்த ஏடு, ஐயர் சொன்னதற்கு நேர் மாறாக இருந்தது. அதுபற்றி அவளுக்குச் சற்றுக் கவலைதான்—பயமுங்கூட. குருவி எடுத்துக் கொடுத்த காகிதத்தில்.

''சனியவன் கோபத்தாலே மேலிடம் சென்றதாலே சளி ஜுரம் ஏறும், மாறும்-சூரியன் ஆணையாலே.'' என்று இருந்தது.

குருவி சனிமீது குற்றம் சாட்டிற்று; குப்பய்யர் சூரியன் மீது பழியைப் போட்டார். ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, 'கமலம்மாள்' தன் கணவனின் 'கால்மாட்டில்' உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

சின்னப்பனுக்கு, முறைஜுரம் — ஒரு சமயம், 'இப்பவோ பின்னையோ' என்று எண்ணக்கூடியபடி இருந்தது. வேறு சில சமயத்திலே, 'பரவாயில்லை, முகத்திலே தெளிவு வந்துவிட்டது—வாய்க்கசப்பும் சற்றுக் குறைவுதான்' என்று கூறக்கூடிய விதத்திலே இருந்தது. என்றாலும், சின்னப்பனுக்கு என்னமோ, நண்பர்கள் சொன்ன நல்வாக்கு, குப்பய்யர் சொன்ன கிரஹக்கணக்கு எதுவும் திருப்தியோ நம்பிக்கையோ தரவில்லை. ஜோதிடத்திலே, அவனுக்கு நம்பிக்கை இல்லை; சு. ம., என்பதல்ல பொருள். நோன்பு பூஜைகளைத் துளியும் தவறாதபடி செய்பவன்தான். ஆனால், குப்பய்யர் போட்டுக் காட்டிய கணக்குச் சரியல்ல என்பது அவன் எண்ணம். அந்தக் கணக்கு மட்டுந்தானா! இதோ மற்றொன்று!!

| | |
|---|---|
| மாலையிலே ஆறு மணிக்கு | 101 |
| இரவு எட்டுக்கு | 103 |
| இரவு பத்து மணிக்கு | 102 |
| காலையிலே எட்டு மணிக்கு | 101 |
| காலையிலே பனிரண்டுக்கு | 104 |
| பிற்பகல் மூன்று மணிக்கு | 103 |
| பிற்பகல் நாலு மணிக்கு | 102 |

டாக்டர் சுதர்சன், இப்படி ஒவ்வொரு தினமும் கணக்கெடுக்கச் செய்து, பார்த்து வந்தார். ஜுரம் எந்தெந்த நேரத்தில், எவ்வளவு எவ்வளவு 'டிகிரி' அதிகமாகிறது, எப்போது குறைகிறது என்று பார்க்க. இந்தக் கணக்கை ஆதாரமாகக் கொண்டு, டாக்டர் சுதர்சன், ஜுரம் காலையிலே தொடங்கி, பகலெல்லாம் வளர்ந்து, மாலையிலே குறைவதுபோல் காட்டி, இரவு ஜுரம் ஏறி, பிறகு படிப்படியாகக் குறைகிறது என்று கூறினார். இந்த விவரத்தை, ஏதோ ஒரு பெயருக்குள் அடக்கி, வைத்ய சாஸ்திர முறைப்படி கூறினார். அவருடைய கணக்கு முறையும் தவறல்ல. ஆனால் சின்னப்பனுக்கு, அவர் கூறிய கணக்கும் சரியல்ல என்று தோன்றிற்று. டாக்டர் சுதர்சனுக்கு ஊரிலே மிக நல்ல பெயர்!

சின்னப்பன், ஜோதிடக் கணக்கு, வைத்தியக் கணக்கு இரண்டையும், தன்னுடைய நோய்க்கு விளக்கம் தரக்கூடியன அல்ல என்று தீர்மானமாகக் கருதி, அடிக்கடி, மெல்லிய குரலில் ''இதனால் எல்லாம் என்ன ஆகும்! சூரியனும் சனியனும் ஒரே கூண்டிலே வந்தால் என்ன, ஒன்றை ஒன்று விழுங்கினால் என்ன! காலையிலே ஜுரம் ஏறி மாலையிலே குறைந்தால் என்ன! என் வியாதிக்கும், இந்தக் கணக்குகளுக்கும் என்ன சம்பந்தம்? இதனாலெல்லாம் ஒன்றும் இல்லை'' என்று கூறுவான்.

''நிலத்தின் விலை குறைகிறதாமே? உண்மைதான்''— சேட்ராம்லால் தன் கடை மானேஜரைக் கேட்டார்.

மானேஜர் மதுசூனர், ''ஆமாம்,'' என்று சுருக்கமாகப் பதிலளித்தார்.

''சின்னப்பன் சேரவேண்டிய தொகை எவ்வளவு?''— சேட் கேட்கிறார்.

சேட்டிடம், மானேஜர், சின்னப்பன் சேரவேண்டிய பாக்கித் தொகையைக் குறித்துத் தருகிறார்.

சேட், அந்தக் கணக்கை வாங்கிப் பார்த்துவிட்டு,

''ஏக்கர், அயன், என்ன விலைதான் விற்கிறது இப்போது?'' என்று கேட்க, மானேஜர்,''இரண்டாயிரத்துக்கும் குறைவுதான்'' என்று பதிலளிக்கிறார்.

''இரண்டாயிரம் என்று வைத்துக் கொண்டாலும், அவனுக்கு இருப்பது நாலரை ஏக்கர்!''-சேட் ஆயாசத்தோடு பேசுகிறார். 'ஆமாம்; பத்தாயிரத்துக்கும் போகாது' என்று பயம் காட்டுகிறார் மானேஜர். சேட்,மறுபடியும் ஒரு முறை, மானேஜர் தந்த கணக்குக் குறிப்பைப் பார்க்கிறார்—துண்டுக் கடிதத்திலே இருக்கிறது சூரியனுடைய பார்வை, சனியின் இடமாற்றம், தெர்மா மீட்டர் சகலமும். ஆனால் விவரமாக அல்ல, சுருக்கமாக 16000! சேட், மானேஜரைப் பார்க்கிறார்—மானேஜர் சேட்டைப் பார்க்கிறார்! இந்தக் கணக்கை, ஜோதிடரோ, வைத்தியரோ, பார்க்கவில்லை. சின்னப்பன் கண்முன் சதா இந்தக் கணக்குத்தான் தெரிகிறது. ஐயர், சூரியனிடம் வம்புக்குப் போகிறார். காய் கதிரோன் என்ன செய்வான். கடன் பட்ட நெஞ்சம் கனலைக் கொண்டுவிட்டது!

கடன் கணக்கு கொடுத்த கவலையே, சின்னப்பனின் காய்ச்சலுக்குக் காரணம். இதனை அவன் அறிவான்— ஆனால் காரணம் என்ன என்பதைக் கண்டறியப் பணிபுரிந்த ஜோதிடரும், வைத்தியரும் இதை அறியவில்லை— அவர்கள் சூரியனிடமும் தெர்மா மீட்டரிடமும், காரணம் காட்டும்படி கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஜோதிடர் சொன்னபடி ஒரு மண்டலம் விளக்கு வைக்க வேண்டுமெனக் கமலம்மாள் கூறினாள். ''பைத்யம், கமலு! இதனாலே எல்லாம் ஒண்ணுமில்லே!'' என்று கூறினான், சின்னப்பன்—விளக்கு ஏற்றவிடவில்லை.

''இந்த ஜுரத்துக்கு முக்கியமான மருந்து, 'சாத்துக்குடி ஜூஸ்—அதை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகச் சாப்பிடு கிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது''—டாக்டர் கூறி னார். ''பைத்யம் கமலு உனக்கு! அநத டாக்டர், அதற்கு மேல் ஒரு பைத்யம்! இதனாலே எல்லாம் ஒன்றுமில்லை. விஷயம் தெரியாமல், நீங்கள் ஆளுக்கொரு தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு கிடக்கிறீர்கள். சூரியன் பார்க்கிறானாம்; சனியன் மாறுகிறானாம்—பைத்யம்! இதனாலே எல்லாம் என்ன வரப் போகுது!'' என்று சின்னப்பன் கூறினான்; பழ ரசம் சாப்பிட மறுத்தான்.

ஜுரம், திடீரென்று ஒரு நாள் குறையலாயிற்று. வேக வேகமாகக் குறைந்து, அடியோடு காய்ச்சல் நின்றுவிட்டது. வாய் கசப்பு ஆச்சரியகரமான முறையிலே மாறி விட்டது. சின்னப்பன் முகத்திலே நோய்க் குறியே போய்விட்டது.

குப்பய்யர் சூரியனுடைய தீட்சணியப் பார்வை குறை யப் பதினைந்து நாட்கள் பிடிக்கும் என்றாரே, அந்தக் காலத் துக்கு முன்னதாகவே!! டாக்டர் கூறிய 'சாத்துக்குடி ஜூஸ் சாப்பிடாமலிருக்கும்போதே!

ஒரு புதிய ஜோதிடர், ஒரு புதிய வைத்தியர், இந்த ஆச்சரியமான மாறுதலுக்குக் காரணம்.

''சுட்டுப்பட்டி ஜெமீன்தார், நம்ம ஊர் பக்கத்திலே நிலம் பார்க்கிறார்.''—நோய் நிலை அறிய வந்த நண்பன் கூறினான் சின்னப்பனிடம்.

''சுட்டுப்பட்டியாரா!''—சற்று ஆயாசத்தோடுதான் கேட்டான் சின்னப்பன்.

''ஏக்கர் ஐந்து, ஆறு ஆயிரம் என்றாலும், முடித்துக் கொள்ள உத்தேசமாம்,'' நண்பன் சொன்னான்.

''நம்ம நாலரையைத் தள்ளிவிட்டு விடுங்களேன்''—நோயாளி கூறினான்.

''ஒரே சதுரந்தானே!''—நண்பன் கேட்டான்.

''ஆமாம்—ஒரே சதுரம்—நல்ல பாய்ச்சல்—ஆத்துக் கால்—இருபோகம்—தங்கம் விளையும்.'' சின்னப்பன் வர்ணித்தான்.

''இதுக்கென்ன, கசக்குதோ சுட்டுப்பட்டியாருக்கு. நீ சும்மா இரு. நான், முப்பதுக்கு முடித்துவிடுகிறேன்.''—என்று நண்பன் வாக்களித்தான். அதன்படியே செய்தும் முடித்தான். சேட்டின் கடனைத் தீர்த்துவிட்டு, மற்றதைப் பாங்கியில் போட்டான் சின்னப்பன். பாங்கிப் 'ப்யூன்' கொண்டு வந்த ரசீது புத்தகத்திலே, சின்னப்பன், கரண்ட் அக்கவுண்ட் 14000—0—0—என்று கணக்குக் குறிக்கப்பட்டிருந்தது. புதிய கணக்கு. சாத்துக்குடிச்சாறு செய்யக் கூடியதைவிட அதிக பலனைச் செய்து காட்டிற்று! சூரியன் தீட்சணியமும், சனியின் இடபேதமும் இதற்குச் சாந்தி செய்ய, விளக்கு வைப்பதுமான சகல காரியமும், அந்த ஒரே ஒரு வரிமூலம் பூர்த்தியாகிவிட்டது.

''குப்பய்யர் அப்போதே பார்த்துச் சொன்னாராம்!'' என்று ஊரார் பேசிக் கொள்கிறார்கள்.

''டாக்டர் சுதர்சன், மணிக்கு மணி, ஜுரத்திலே வேக அளவைக் கணக்கெடுத்து, கண்ணுங் கருத்துமாக இருந்து மருந்து கொடுத்தார்—சொஸ்தமாகிவிட்டது—சின்னப்பன் பழையபடி கொழுக்கட்டை போலாகிவிட்டான்'' என்றும் ஊர் பேசுகிறது.

''சூரியனுடைய பார்வை எவ்வளவு கெடுதல் செய்தாலும், சனி மட்டும், அஷ்டமத்துக்குப் போகாமலிருந்தால், ஆபத்து வரவே வராது. நம்ம சின்னப்பன் விஷயம் தெரியு

மல்லவா!''-குப்பய்யர், பெருமையாகத்தான் பேசிக் கொள்கிறார். சின்னப்பன், இவர்களை மறுத்துப் பேசுவதில்லை —ஆனால் அடிக்கடி மனைவியிடம் மட்டும் ''இதனாலே எல்லாம் ஒண்ணுமில்லை கமலம்'' என்று கூறுகிறான். அவன் அறிவான், சூரியன் பார்வையால் பலாபலன் ஏதும் ஏற்படவில்லை—சேட்டின் பார்வை ஜுரத்தை ஏறச் செய்தது—சுட்டுப் பட்டியார் பார்வை, ஜுரத்தைக் குறைத்து விட்டது என்ற உண்மையை.

★

# 7
# ராஜபார்ட் ரங்கதுரை

"அச்சாபீஸ் மானேஜரைப் போய்க் கேளுடா, இப்படித்தான் போஸ்ட்டர் போடுவதா என்று. போஸ்டர் போடுகிறார்களாம், போஸ்ட்டர்! இது என்ன, வாடகை சீன் போட்டாடும் வக்கற்ற கம்பெனி என்று எண்ணிக் கொண்டாரா? நான்தான், செலவு பற்றி யோசிக்கிற கம்பெனி அல்ல இது; போஸ்ட்டர் பிரமாதமான முறையில் இருக்க வேண்டும் என்று பன்னிப்பன்னிச் சொன்னேனே. ராஜபார்ட் என்ற எழுத்தை, இப்படியா கடுகு சைசில் போடுவது? போ! இந்தப் போஸ்டர் வேண்டாம். பெரிய எழுத்தில் ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் என்று போடச் சொல்லு. (சற்று யோசித்து) டே! ராஜபார்ட் என்று மட்டும் அல்லடா, ராஜபார்ட் ராக ஆலாபன ரங்கதுரை பாகவதர் என்று போடச் சொல்லு"—என்று உற்சாகத்துடன் கூறி, கேட் கந்தசாமியை, டிராமா கம்பெனி முதலாளி குருமூர்த்தி அனுப்பிவிட்டு, கம்பெனி மானேஜரைக் கூப்பிட்டனுப்பி விட்டு, 'முருகா! கந்தா!' என்று கூறியவண்ணம் திண்டின் மீது சாய்ந்தார். அவர் சாய்ந்த அதிர்ச்சியால், பக்கத்திலிருந்த வெள்ளித்தாம்பாளம் ஆடி, அதிலே இருந்த வாசனைப் பாக்குத்தூள், ஜமக்காளத்தின்மீது சிதறிற்று. வேலைக்காரன் வந்ததும், அதைச் சுத்தப் படுத்தச் சொல்லலாம் என்று எண்ணி, அவர் வேறு சில முக்கியமான யோசனையில் ஈடுபட்டார்.

கம்பெனிக்கு நல்ல பேர்—புகழ்—வருவாய், பத்திரிகைகளில் பாராட்டுகள்—போட்டோக்கள். இந்த நிலைமை வெறும் எழுத்து வடிவோடு இல்லை—வெள்ளித் தாம்பாள

மாக, வெல்வெட்டு மெத்தையாக, இரும்புப் பெட்டியாக உருவெடுத்துக் காட்டிற்று. நடிகர்கள் மட்டும் நூறு பேர்! எடுபிடிகள், எக்ஸ்ட்ராக்கள் முதலியவர்களைச் சேர்த்தால், ஒரு ஐம்பது தேறும். விருந்தாளிகள் ஒரு ஐம்பது பேர் இருக்கும்—ஆகமொத்தம், பகல் ஒரு மணிக்கு, சாப்பாட்டுக்கு, பந்தி உட்காருவதைப் பார்த்தால், குருமூர்த்திக்கு பரமானந்தமாக இருக்கும். உள்ளூர் பெரிய மனிதர் யாராவது இரண்டு பேரை அழைத்து வருவார், இதைப் பார்க்கட்டும் என்பதற்காகவே.

திண்டின்மீது சாய்ந்த குருமூர்த்தியின் மனக்கண்முன், நாலு நல்ல நடிகர்களே கிடையாது. இருந்த நாட்கள், வசூலான பணம் கொட்டகை வாடகைக்கும், பிட் நோட்டீசுக்குமே போதுமானதாக இல்லாத காலம்; இன்னும் அதற்கும் முன்பு, கம்பெனியே இல்லாமல், அவ்வப்போது ஊருக்கு ஊர், சிற்சிலரைப் பிடித்து, ஸ்பெஷல் கற்றுக் கொடுத்து 'கூத்து' ஆடிவந்த காலம்—இவைகளெல்லாம் கவனத்திற்கு வந்தன. ''கூத்தாடி குருமூர்த்தி'' என்ற பெயர் மறைந்து, ''பாரதமாதா நாடகக் கம்பெனி முதலாளி குருமூர்த்தி'' என்ற பெயர் வருவதற்கு இடையில், அவர் பட்ட கஷ்டங்கள் பலப்பல. அவைகளை எல்லாம் எண்ணினார்— அவருடைய முகத்திலே வெற்றிக்களை தாண்டவமாடிற்று.

ஒரு கட்டு 'ரவேஸ்' வெற்றிலையுடன், மானேஜர் வந்து சேர்ந்தார்.

''நேற்று வசூல் எவ்வளவு?''

''நேற்று கொஞ்சம் மட்டம். சிறு தூறல்.''

''தொகை என்னய்யா?''

''எழுநூற்று அறுபது!''

''இவ்வளவுதானா?''

''இவ்வளவுதானா!—'' என்று அவர் கேட்டபோது, உள்ளூர அவருக்கே சிரிப்பு! ஏனெனில், அவர் 'அறுபது' ரூபா வசூலையே, 'அதிர்ஷ்டம்' என்று எண்ணி வந்த நாட்

கள் உண்டு!! கம்பெனி மானேஜரிடம், அவர் பேசி வந்த பல விஷயங்களிலே முக்கியமானது ரங்கதுரையின் போட்டோவைப் பற்றியது. மானேஜர் அவசரமாகச் சென்று, அழகான சட்டம் போடப்பட்டிருந்த போட்டோவைக் கொண்டுவந்து, குருமூர்த்தியின் எதிரில் வைக்க, அவர், ரவி வர்மா தீட்டிய லட்சுமி படத்தின் பக்கத்திலே, துரையின் போட்டோவை மாட்டி வைக்கும்படிக் கூறினார். மானேஜர், லட்சுமி, சரஸ்வதி படங்களுக்கு நடுவில் இதைத் தொங்க விட்டார். இந்த மூன்று படங்களுக்கு மேலே, கம்பெனி முதலாளி குருமூர்த்தியின் பெரிய படம் ஒன்று இருந்தது. குருமூர்த்தி படங்களை மாறிமாறிப் பார்த்து மகிழ்ச்சி யடைந்து, மானேஜரைப் பார்த்து, ''நம்ம துரையுடைய முகத்திலே இருக்கிற களை இருக்கு பார், அடடா, அற்புத மானது; அதுதான் 'லட்சுமிகளை'ன்னு சொல்வது'' என்று பாராட்டினார். மானேஜர், அதைத் தொடர்ந்து, துரையின் கண்ணொளி, குரலின் இனிமை, சங்கீத ஞானம், நடிப்புத் திறமை, இவைகளைப் பற்றி, ஊரார் உயர்வாகப் பாராட்டு வது என்பவை பற்றிச் சரமாரியாகப் பேசிவிட்டு, ''தப்பித் தவறி, ரங்கதுரை மோட்டாரில் கடைவீதிப் பக்கம் போய் விட்டால் போதும்; ஒரே கூட்டம்! 'அதோ பார், ராஜ பார்ட் ரங்கதுரை பாகவதர்' என்று கூவிக்கொண்டே கூட்டம் ஓடிவரும்!'' என்று முத்தாய்ப்பு வைத்தார். ''ஆமாம்! இப்போது நம்ம துரையின் பெயர் பிரபல்யமாகி இருக்கிறது. எப்படி ஆகாமல் போகும்? டபுள்ராயல் ஆறு ஆயிரம், சிங்கிள் ராயல் ஒரு பத்து, ஆறு ராயல் ஒரு ஏழு ஆயிரம், இப்படி அல்லவா, 'பப்ளிசிடி' ஏறி இருக்கு! ஊரிலே ஒரு மூலை முடுக்குக்கூட பாக்கி கிடை யாதே! போஸ்ட்டர் எங்கேயும் ஒட்டியிருக்கிறோம். அவ் வளவு விளம்பரமும், ரங்கதுரைக்குத்தானே! ஊர்ஜனங்கள், ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் என்று புகழ்கிறார்கள் என் றால், இதிலே ஆச்சரியமென்ன?'' என்று விளக்கத்தை விவர மாகக் கூறினார் குருமூர்த்தி. அவருக்கு, ரங்கதுரையிடம், கோபமோ, பொறாமையோ இல்லை. ஆனால், மனம் எனும்

கழனியில், இந்த விதையைத் தூவினால், பலன் தரும் அள வுக்குப் பலர், ஏர் உழுது இருந்த நேரம் அது!

''ரங்கதுரையின் மனம் சுத்தமானது, அவனுடைய சாரீரத்தைப் போலவே!''

''அதனாலேதான், அவன் முன்னுக்கு வருகிறான்— நாமும் பணம் என்று பார்க்காமல், அவனுடைய பேரும் புகழும் வளர வேண்டும் என்று பாடுபடுகிறோம்.''

''இட்டார்க்கு இட்ட பலன்தானுங்களே.''

''அதுசரி. நல்லவர்களின் போக்கு அது. வேறு சிலது கள் இல்லையா? உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்து கொண்டு!''

''ஆனால் நம்ம ரங்குவின் சுபாவம் அப்படிப்பட்ட தல்ல. உங்களிடத்திலே அளவு கடந்த அன்பு. நேற்றுக்கூட, 'நாடகம்' பத்திரிகை ஆசிரியர் ரங்கதுரையிடம், உமது ஆசிரி யர் யார், எத்தனை வருஷமாக இந்த நாடகத் தொழிலில் இருக்கிறீர், நீங்கள் முதன்முதலா எந்த நாடகத்தில் நடித்தீர் என்றெல்லாம் கேட்டார். நம்ம ரங்குவின் பெருங்குணத் தைப் பாருங்கள், ''என் ஆசிரியர் கலாகேசரி குருமூர்த் தியார்-நான் நாடகத் தொழிலிலே ஈடுபட்டதே அவருடைய சகாயத்தாலேயும், ஆசீர்வாதத்தாலேயும், சிட்சையாலே யுந்தான்'' என்று கூறினான்.

''நல்ல பிள்ளை, நம்ம ரங்கு! நல்ல மனம்— குணம்! கலாகேசரின்னு நமக்கு டைடிலே கொடுத்துவிட்டானா! நம்மிடம் அவனுக்கு உள்ளபடியே அவ்வளவு ஆசை. பாவம்! அவன் ஆசையை நாம் கெடுப்பானேன். இனி, போஸ்ட்டர், பிட்நோட்டீஸ், விளம்பரங்களிலே, நம்ப பேர் போடும் போது, கலாகேசரி குருமூர்த்தி என்றே போடு. ரங்குவுக்குத் திருப்தியாக இருக்கும்.''

இவ்விதமான உரையாடலுக்குப் பிறகு, குருமூர்த்தி, வளரும் வசூலின் காரணமாக முகம் மலர்ந்து, அந்த வசூ

லுக்கு முக்கிய காரணமாக இருந்துவந்த ரங்குவுக்கு, ''பாதாம் கலந்த பால் கொடு, பத்து ரூபாய் கை செலவுக்கு கொடு, படுக்கையிலே இன்னும் இரண்டு தலையணை தைத்துப்போடு, ஆர்ட் அட்டையிலே அவன் போட்டோ ஒரு பத்தாயிரம் அச்சிட்டு, அட்டை இரண்டணா விதம், தியேட்டரிலே விற்பனை செய்ய ஏற்பாடு செய், ரங்குவின் புகழ் பரவட்டும்'' என்று கனிவுடன் புதிய புதிய கட்டளைகள் பிறப்பித்துவிட்டுக் கண் அயர்ந்தார். கம்பெனியில் அப்போது 'கந்தலீலா' நாடகம்—பிரமாதமான வசூல்! ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர்தான் முருகன்! மற்றப் பாகங்கள் வேறு பல நடிகர்கள்!! அவர்களின் பெயர், வெளியேகூடத் தெரியாது. தெரிவிக்கும் வழக்கம் கிடையாது.

குருமூர்த்தியின் குதூகலத்தைவிட ஒருபடி அதிகமாகவே இருந்தது, ரங்குவின் களிப்பு நாடகத் தொழிலிலே கிடைத்த நற்பெயர், செல்வாக்கு, ரங்குவின் இளம் உள்ளத்துக்குத் தேன் ஊற்றாக இருந்தது. குருமூர்த்தி, தன்னிடம் காட்டும் அன்பும், அக்கரையும், அவன் மனதை நெகிழச் செய்தது. மற்ற நடிகர்கள் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு, தனக்கு அவர் சலுகைகள் காட்டுவது, ரங்குவின் மனதிலே, அவர் மீது ஒரு பாசமே ஏற்படும்படிச் செய்துவிட்டது. குருமூர்த்தி, ரங்குவைப் பாகவதராக்கி, ராஜபார்ட்டாக்கி, ராக ஆலாபனராக்கி மகிழ்ந்தார். குருமூர்த்தியை கலாகேசரியாக்கி, ரங்கு மகிழ்ந்தான். ராஜபார்ட்டான 'ஆலாபன ரங்கபாகவதரின் நடிப்பு மிகமிக அருமையாக இருந்தது— அவர், சாரீரத்தின் இனிமையும், சங்கீத ஞானமும், எப்படி இருந்தல் என்று, பொருத்தமான உபமானம் கூறவேண்டுமானாது, நவயுகக் கலாகேசரி குருமூர்த்தியார் கம்பெனியை நடத்தும் விசேஷத் திறமையும், திறமையுள்ள நடிகர்களைக் கண்டுபிடித்து அவர்களின் திறமைக் கேற்ற இடமளித்து, அவர்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரும் ''பக்குவமான முறை'' இருக்கிறதே, அதுபோன்று இருந்தது என்றுதான் கூறவேண்டும்—என்று ரசிகர்கள் பேசினர்; எழுதினர். அதாவது இருவரிடமும் நட்பும், அதனால் சிறுசிறு

பலனும் பெற்றவர்கள்! வேறு சிலர்—அவர்கள் தொகை குறைவு—இருந்தனர். குருமூர்த்தியிடம் பேசும்போது ''ரங்கதுரையுடைய நல்லகாலம், அதிர்ஷ்டம், உங்களுடைய ஆதரவு கிடைத்தது.

இப்போது அதனாலே, ராஜபார்ட் ஆனான்—பாகவதர் ஆனான்— நீங்கள் அவனுக்கு இவ்வளவு அன்பு காட்டியிரா விட்டால், அவன் சாரீரம் கட்டையாகி, சீந்துவாரற்று, எங்காவது பஜனை மடத்திலே போய், 'ராம நன்னுப் ரோவரா' பாடிக் கொண்டிருப்பான். அவனுடைய ஜாதக பலன், உங்களுடைய தயவு அவனுக்குக் கிடைத்தது'' என்று பேசுவர்.

அப்போது குருமூர்த்திக்கு அறுபது ரூபாய் வசூலு டன் அல்லற்பட்ட காலம், நாலு நல்ல நடிகர்கள் கிடைக் காமல் கம்பெனி கஷ்டப்பட்ட நாட்கள், இவை மறந்து போகும்—டபுள் ராயல், சிங்கிள் ராயல்—ரங்கதுரைக்காகச் செய்த விளம்பரச் செலவு, இவை கவனத்திலிருக்கும். பெருமையுடன், ''போகிறான் பாபம்! நமக்கு நாலு காசு செலவானாலும் பரவாயில்லை. அவன் முன்னுக்கு வந்தால் போதும்; அவன் அதை எண்ணினாலும் சரி, மறந்து மண் டைக் கர்வம் ஏறிவிட்டாலும் சரி, நாம் செய்ய வேண்டிய தைச் செய்கிறோம'' என்று கூறுவார். விஷ விதையை அப் போது தூவுவர், ''அவனுக்கு மண்டைக் கர்வம் பிடித்ததோ, ஒழிந்தான் அதோடு என்று வைத்துக் கொள்ளுங்கள். உங் களுடைய உதவி இல்லை என்றால், ராஜபார்ட்டுமில்லை; ராக ஆலாபனமும் இல்லை. பிறகு, அவன்பாடு திண்டாட் டந்தான்'' என்று கூறுவர். குருமூர்த்தியின் புன்னகை, ''ஆமாம்'' என்று கூறும். அதுபோலவே, ரங்கதுரையிடம் சென்று பேசுவர், ''முன்பெல்லாம் உங்களுக்குத் தெரியாது - கொட்டகை இருக்கிற தெருவழியாகவே ஜனங்கள் நடமாட மாட்டார்கள். ராத்திரி பதினோருமணி வரைக்கும் பாண்டு வாசிப்பார்கள். வெளியே—டிக்கட் முப்பது நாற்பதுக்குக் கூட விற்பனையாகாது. சதா சர்வகாலமும், சாப்பாட்டுக் கஷ்டந்தான் கம்பெனியில். நடிகர் ஏது—டிரஸ் ஏது—சீன்

ஏது! நீங்கள் வந்து சேர்ந்த பிறகுதான் குருமூர்த்திக்கு 'சான்ஸ்'. ஆயிரம், எழுநூறு என்று வசூல் ஏறிற்று. உங்களுடைய சாரீரம், அவருக்குச் சம்பத்தாக முடிந்தது.'' என்பார்கள். ரங்கதுரை ''அவருக்கு, கலையிலே ரொம்பப் பிரியம். இதுபோலக் கம்பெனி வைத்து நடத்த ஆரம்பித்து இருபது வருஷங்களுக்குமேல் இருக்குமாமே'' என்று புகழ்ச்சியாகத்தான் பேசுவான். விஷ விதையைத் தூவுபவரோ, ''நடந்தது இருபது ஆண்டுகளாக—ஆனால் கம்பெனியில் நல்லவர்களே நுழையமாட்டார்கள்; நாகரிகமான இரண்டு பாட்டுப்பாட ஒரு நடிகன் கிடையாது—மதுரை வீரன் கதையும், மாடசாமி காமிக்கும் நடக்கும். கேட்பாரற்றுக் கிடந்தது. நீங்கள் வந்து சேர்ந்த பிறகுதான், கந்தலீலாவும் காதம்பரியும், டபுள்ராயலும், சினிமா ஸ்லைடும், கப்பும் கேடயமும், பாலையும், மரியாதையும், மதிப்பும் பணமும்! பெருமையாக இப்போது பேசிக் கொள்கிறார், 'நம்ம கம்பெனியைச் சாமான்யமாகக் கருதாதே! ராஜபார்ட்டாக ஆலாபன ரங்கதுரை பாகவதர் இருக்கிற கம்பெனி என்றால், அதிலிருந்து, கம்பெனி எப்படிப்பட்டது என்று தெரிந்துகொள்ள வேண்டும்; குண்டு மல்லிப்பூ, குரோடென்ஸ் செடியிலே பூக்காது' என்று கதை அளக்கிறார்'' என்று பேசுவர்.

''அவர் சொல்வது உண்மைதானே. குரோடன்ஸ் செடியிலே, குண்டு மல்லிகை பூக்குமா? ஒரு உபயோகமற்ற கம்பெனியிலே, விஷயம் தெரியாத முதலாளியிடம் சிக்கியிருந்தால் நமது நடிப்பும், சங்கீதமும் விருத்தியாகி இருக்க முடியுமா?'' என்று வாதாடுவான் ரங்கதுரை. விஷப்பூண்டை விவசாயம் செய்து பழக்கமானவர்கள், 'உபமானம், எதற்கும் எப்படியும் சொல்லலாம். குண்டு மல்லி குரோடன்சிலே பூக்குமோ? என்று கூறிவிட்டால் தீர்ந்து போச்சா! நத்தையிலே முத்தில்லையா? சேற்றிலே செந்தாமரை இல்லையா! அதுபோல, குருமூர்த்தியிடம் ஒரு ரங்கபாகவதர் இருக்கிறார் என்று நாங்கள் கூடத்தான் உபமானம் கூறமுடியும்'' என்பார்கள். ரங்கதுரையின் முகத்திலேயும் புன்னகை தவழும். கம்பெனிக்குச் சிறப்பளிக்கும் அளவுக்குத் தனது சங்கீதம்

வளர்ந்திருக்கிறது; குருமூர்த்திக்கு இலாபம் கிடைக்கும் அளவுக்கு தன் நடிப்புத் தொழிலிலே நற்பெயர் கிடைத்திருக்கிறது என்று அந்தப் புன்னகை கூறும்.

உண்மை நிலையோ, இருவர் உள்ளங்களில் தவழ்ந்த எண்ணங்களுக்கும் விஷவித்திடுவோர் (மனதிலே இருந்ததோ இல்லையோ) உதட்டிலே தவழ்ந்து வந்ததுமான எண்ணங்களுக்கும் வெகுவெகு தொலைவிலே இருந்தது. இருவரில் யாரால் யாருக்கு இலாபம், யாருடைய உதவியால் யார் சிறந்தனர் என்பதல்ல, முக்கியமானது.

அது, நீர்மேல் குமிழி போன்ற விஷயம். குருமூர்த்தி-ரங்கதுரை கூட்டுறவால் ஏற்பட்ட உண்மையான பலன் என்னவென்றால், நாடகக்கலை நாட்டிலே பரவ, ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தக் கலைத் துறைக்கே, இந்தக் கூட்டுறவின் பெரும்பலன் போய்ச் சேர்ந்தது—கலைத் துறைக்குப் போய்ச் சேர்ந்ததென்றால், கலை உள்ளம் படைத்த அனைவருக்கும் போய்ச் சேர்ந்தது என்றுதானே பொருள்! உண்மையில் பலன், குருமூர்த்திக்கும், ரங்குவுக்கும் கிடைத்ததைவிட நாடகக்கலைக்கே அதிகம்கிடைத்தது. ஒரு நல்ல நடிகனைக் காணவும், சுகமான சங்கீதத்தை அனுபவிக்கவும், நாகரிகமான நாடகங்களைப் பார்க்கவும், காசு செலவிட்டு கண் அரிப்பும், காது குடைச்சலும் பெற்று வந்த மக்களுக்கு, கண்ணுக்கும், காதுக்கும் கருத்துக்கும் விருந்தும் கிடைத்து வந்தது. குருமூர்த்தி—ரங்கு கூட்டுறவு, கலைத் துறைக்கு, ஒரு புதிய, சிறந்த, தேவையான உதவியாக இருந்தது. இந்த உண்மையை மறைக்குமளவுக்கு, டபுள் ராயல், சிங்கிள் ராயல் போஸ்ட்டர் பற்றிய பேச்சும், அறுவது வசூலான இடத்தில் ஆயிரம் வசூலாகிறது என்ற பேச்சும் வளர்ந்தது. ''கம்பெனியினால்தான் ரங்கதுரை, பாகவதரானார்''—ஒரு கட்சி; ''ரங்குவால்தான் கம்பெனி உருவாயிற்று''—மற்றோர் கட்சி. இப்படி ஒரு ஆபத்தான நிலைமை வளரலாயிற்று—குருமூர்த்தி, ரங்கதுரை இருவருமே, அந்த நிலைமைக்குப் பலியானார்கள்—இருவரும் அறியாமலேயே.

ஊருக்கு விடுமுறை பெற்றுப் போயிருந்த ரங்கு, கடிதம் எழுதியிருந்தான் குருமூர்த்திக்கு. 'இங்கு தாயாருக்கு இன்னும் நோய் குணமில்லை. அங்கு கம்பெனி வசூல் எப்படி? வசூல், ரொம்பக் குறைந்துவிடுமோ என்று கவலையாக இருக்கிறது. கூடிய சீக்கிரம் வந்துவிடுகிறேன். நான் வந்த பிறகு ''கந்தலீலா'' துவக்கி ஒரு மாதம் நடத்தினால், இப்போது கம்பெனிக்கு நஷ்டம் வந்திருந்தாலும் சரிப் படுத்திவிடலாம்—'' என்று எழுதியிருந்தான்.

''வருஷம் பத்தானால்கூட, நம்ம ரங்கதுரைக்குக் கம் பெனியிடம் உள்ள அக்கரையிலே, நூற்றிலே ஒரு பாகம்கூட, மற்ற நடிகர்களுக்கு வருவதில்லை. தாயாருக்கு உடம்பு சரி யில்லை என்று ஊருக்குப் போயிருக்கிறான்; அந்த இடத் திலேகூட அவனுக்குக் கம்பெனியைப் பற்றிய கவலைதான்:— வசூல் எப்படி இருக்கிறது—கந்த லீலா போடலாம்—நான் வந்துவிடுகிறேன் சீக்கிரம் என்று கடிதம் எழுதுகிறான். இப் படிப்பட்ட குணசாலிகள் இருந்தால்தானே, கம்பெனி உருப் படும்'' என்று பெருமையுடனும், பூரிப்புடனும் பேசிவிட்டு, டானிக் பாட்டிலும், சாத்துக்குடியும் வாங்கி அனுப்பி வைப் பார் குருமூர்த்தி என்றுதான், ரங்கு எண்ணினான். முன் பெல்லாம் அவ்விதந்தான் நடைபெறுவது வழக்கம். விஷப் பூண்டு முளைத்துவிட்ட நேரத்திலே இந்தக் கடிதம் வந்தது. எனவே விளைவு வேறாகிவிட்டது. ''மண்டைக் கர்வத்தைப் பார்த்தாயா, இந்த துரைக்கு? இவன் இல்லாததாலே வசூல் 'டல்'லாகிவிட்டதாம்! கிண்டலாகக் கடிதம் எழுதியிருக்கி றான். கவலைப்படாதே. நான்வந்த பிறகு, கந்தலீலாபோட லாம்; நஷ்டத்தை அப்போது சரிப்படுத்திவிடலாம் என்று கடிதம் போடுகிறான். இவன் இல்லாவிட்டால், நம்ம கம் பெனியே நடக்காது—நமக்கு வேறு நாதியே இல்லை என்று எண்ணுகிறான். இவனை நாம் பாகவதராக்கி, ராஜபார்ட் ஆக்கி, தோடிக்கும் தாளத்துக்கும் வித்தியாசம் தெரியாத அபசுரத்தை, ராக ஆலாபனராக்கி வைத்த பலன், இவன், நான் இல்லாவிட்டால் கம்பெனி எப்படி நடக்கும் என்று மறைமுகமாக, நம்மையே கேள்வி கேட்கும் நிலைமையை

உண்டாக்கிவிட்டது'' என்று கடுமையாகப் பேசி, மானேஜரைக் கூப்பிட்டு, நாளையோடு 'நல்லதங்காளை' முடித்துக் கொண்டு, இரண்டு நாள் லீவ் விட்டு கந்தலீலா ஆரம்பிக்கச் சொல்லு—போஸ்ட்டரும் போடு'' என்றார். கடிதத்தின் விளைவாக இதைக்கூறுகிறார்என்பதறியாதமானேஜர், ''ரங்கதுரை வருவதற்கு, இன்னும் இரண்டு வாரம் ஆகுமாமே, கந்தலீலா எப்படி?'' என்று கேட்க, குருமூர்த்தி, ''யாரய்யா சுத்த மடையனா இருக்கறே! கோழி கூவியா பொழுது விடியுது. கந்தலீலா, ரங்கன் வராமே நடக்காதா—நடக்கக்கூடாதா—நடந்ததில்லையா? ரங்கதுரைதானா கம்பெனி? ஏன் உன் கண்ணிலே தாமு, சோமு, இவனுங்களெல்லாம் படவில்லையா? சோமு, முருகன்—தாமு, வள்ளி—ஆமாம், டபுள் ராயல் போடு—சுகசாரீர சம்பன்ன சோமுன்னு போஸ்ட்டர் அடி; கலர் போஸ்ட்டர்'' என்று உத்தரவிட்டார். பத்திரிகையிலே இதுபோல விளம்பரம் வருவதற்கும், ஊரிலே ரங்கதுரையின் தாயாருக்கு 'க்ஷயம்' என்று டாக்டர் கண்டுபிடித்து, ரங்கனுக்குக் கூறுவதற்கும், நேரம் சரியாக இருந்தது. ரங்கதுரையின் மனம் புண்பட்டது. எவ்வளவு உள்ளன்போடு உழைத்தும், கம்பெனியிடம் அக்கரைவைத்தும், முதலாளி கடைசியில் சமயத்தில் நம்மைக் காலை வாரிவிடத்தானே செய்கிறார். சோமுவை வைத்துக் கம்பெனி நடத்துவேன், தாமுவாலே நடக்கும். நீ அவசியமில்லை என்று மறைமுகமாக நமக்குக் கூறத்தானே, நாமாகக் கடிதம் எழுதியும்கூட, இப்படி, நாடகத்தை, சோமுவைக் கொண்டு நடத்துகிறார். நன்றியை மறந்து நடந்து கொள்கிறார். எவ்வளவு பேர் நமக்குச் சொன்னார்கள், ''நீ வராத முன்பு, கம்பெனி இப்படி இல்லை'' என்று தூண்டினவர்கள், தூபமிட்டவர்கள் பேச்சை எல்லாம் அலட்சியப்படுத்தி, ஒரு நல்ல கம்பெனி நடக்க வேண்டும்—ஒரு நல்ல அனுபவமுள்ளவரால்தான் அதை நடத்த முடியும், குருமூர்த்தியார்தான் அதற்கு ஏற்றவர், என்று மனதார நம்பித்தானே உழைத்து வந்தேன்—அதற்குப் பலன், இதுதானா!'' என்று எண்ணி வருத்தப்பட்டான்.

'முதல் போகம் ஆயிற்று; அறுவடை முடிந்தது; இனி இரண்டாம் போகத்துக்கு விதை தூவ வேண்டியதுதான்' என்று, விஷ விவசாயிகள் எண்ணினர்—மும்முரமாக அதிலே ஈடுபட்டனர்—பயிர் செழித்தது!

''பாகவதர், 'ஆக்ட்' செய்யக் காணோமே, ஏன்?'' குருமூர்த்தியைக் கேட்பர் சிலர்—கலைரசம் தேடுவோர்.

குருமூர்த்தி, அவர் கூறுவதன் பொருள் விளங்காதது போல இருந்துவிட்டு, ''அடடே! ரங்கனைச் சொல்கிறீர்களா? நான் பாகவதர், பாகவதர் என்று சொன்னதும், யாரைச் சொல்கிறார்களென்பது தெரியாமல் திணறினேன்'' என்று கூறிவிட்டு, மானேஜரைப் பேச வைப்பார்; ''நம்ம ரங்கன் விஷயத்தைக் கேட்கிறார்'' என்று ஆரம்பிப்பார். மானேஜர், மளமளவென்று கொட்டுவார். ''ரங்கபாகவதரா! அவர் நிலை இப்போது ரொம்ப உயர்ந்து போயிட்டுது சார். அவர் கம்பெனிக்கு வந்து நடிக்கமாட்டார்—கம்பெனி அவர் ஊருக்கு வந்து நடிக்க வேண்டுமாம். நன்றிகெட்ட பயல்கள் சார்! நான் ரொம்ப நாளாகச் சொல்லி வருகிறேன் இவருக்கு—வேண்டாம், நீங்கள் அவனைத் தூக்கித் தூக்கி விடுகிறீர்கள்—ஆபத்து—ஆபத்து என்று சொன்னேன்—இவர் கேட்கவே இல்லை—கந்தலீலா போட்டால் அவன்தான் முருகன்—ராம லீலா போட்டால் அவன்தான் ராமன்—ராமதாஸ் போட்டால் அவன்தான் நவாபு, பவளக்கொடி நடத்தினால் அவன்தான் அர்ஜுனன்—இப்படி அவனுக்கே 'சான்ஸ்' கொடுத்தபடி இருந்தார்—இப்போது அவன் கோபுரத்தின் மீது ஏறிக்கொண்டான்'' என்பார். குருமூர்த்தியோ, அதைப் பற்றிக் கவலைப் படாதவர் போல, ''கோபுரத்தின் மேலே குரங்குகூடத் தாண்டா ஏறிக் கொள்ளும்; போடா போ! நம்ம கம்பெனியிலே, எத்தனையோ ரங்கு வந்தான்— சோமு வந்தான்—போனான்'' என்று கூறுவார். இவ்வளவுக்கும், ரங்கனுக்கும் கம்பெனிக்கும், கணக்குப் பைசல் ஆகிவிடவுமில்லை—ரங்கதுரை வேறு கம்பெனிக்குப் போகவுமில்லை—ஸ்பெஷலுக்குக்கூடப் போகவில்லை.

கம்பெனி நின்றுவிடவில்லை! ரங்குவும் பட்டினியாக இல்லை!!

கம்பெனியில் இல்லாதது ரங்கதுரைக்கு ஒருவகை நிம்மதிதரவே ஆரம்பித்தது.

ரங்கு இருப்பதும் இல்லாது போவதும் கம்பெனியை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதை நிரூபித்தாக வேண்டிய பெரும் பொறுப்பு குருமூர்த்திக்கு ஏற்பட்டது. முதலிலே அவருக்குத் தோன்றிய யோசனை, சோமுவையோ, தாமுவையோ, 'தூக்கிவிட்டு' விளம்பரம் செய்து, இடத்தை அடைக்க வேண்டும் என்பதுதான். பிறகு, அதனால் ஏற்படும் சிரமமும், அதன் விளைவும் எப்படியாகுமோ என்ற கவலையும் ஏற்படவே, அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டு, கம்பெனியில், கண்கவரும் சீன்கள், புதிய உடைகள், கலர் லைட்டுகள்—டர்னிங் சீன்கள் இவைகள் உண்டு என்பதையே அதிகமாக விளம்பரப்படுத்தி, யார் வேண்டுமானாலும் எந்த வேஷம் வேண்டுமானாலும், போடக் கூடிய விதமான, 'தசாவதாரம்' நாடகத்தைத் தயாரித்து கம்பெனியின் வலிவையும், வனப்பையும் வளர்க்கலானார். சோமு ஒரு நாளைக்கு மகா விஷ்ணுவாக வருவான்—ஒரு நாளைக்கு துவாரபாலகனாவான்—ஒரு நாளைக்கு தாமு கிருஷ்ணனாவான். மறுநாள் அவனே ருக்மணி வேஷம் போடுவான்; கம்சன் வேஷத்துக்கு கேட் கந்தனே பொருத்தம்—அவனுக்குப் பேசத் தெரியாது—ஆகவே அவன் வாய் அசைக்கட்டும்—'மைக்கிலே' சொக்கன் பேசிவிடட்டும்—என்று, இப்படிப்பட்ட ஏற்பாடுகளுடன் 'தசாவதாரம்' நடைபெற்று வந்தது. ரங்கதுரை இல்லாமல் கம்பெனி நடைபெற முடியும் என்பதை நிரூபித்துவிட்டார், குருமூர்த்தி. ரங்கதுரையால், கம்பெனியில் இல்லாமல் நான் இருக்க முடியும், என்று மட்டுந்தானே காட்ட முடியும்? அவன் வேறு கம்பெனியில் சேர முடியாது; மற்ற எந்தக் கம்பெனியிலும் அவன் விரும்பும் நிலைமை கிடையாது—அவனாகப் புதிய கம்பெனி வைக்கவும் முடியாது—அவனுக்கு அதற்கு வேண்டிய ஆற்றல் கிடையாது; அவசியமும் ஏற்படவில்லை. இந்த நிலைமை

யிலேதான், ரங்கதுரையின் பூர்வோத்திரத்தைப் பற்றிக் குருமூர்த்தி காலட்சேபம் செய்யலானார். அதற்கு ரசமான பக்கவாத்தியக்காரர்களும் சேர்ந்தனர்.

''கம்பெனி, காட்பாடியில் நடந்து கொண்டிருந்தது. வசூல் கொஞ்சம் குறைவுதான். ஆனால் வசூலுக்காக அங்கு தங்கி இருக்கவில்லை. 'கண்டிராஜா' தயாராகிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலே, குருமூர்த்தி ஒருநாள் உலாவப் போனார் (உலாவப் போனார் என்பதற்கு முழுப்பொருள், மளிகைக் கடைக்காரருக்குத் தரவேண்டிய கடனுக்குச் சமாதானம் சொல்லி ஜப்திக்கு வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் போனார் என்பது.) உலாவப் போன இடத்தில், நீதிநாதன் கோயிலில், உட்கார்ந்து கொண்டு, ரங்கு பாடிக் கொண்டிருந்தான். சாரீரம் சுகமாக இருந்தது—அவனிடம் பேசினதில், குணமும் நல்லதென்பது குருமூர்த்திக்குத் தெரிந்தது. தெரியவே, 'தம்பி, இப்படிப்பட்ட சாரீர சம்பத்தை வைத்துக் கொண்டு, ஏன் இங்கு இருக்கிறாய்? இந்த நீதிநாதன் கோயிலிலே பெருச்சாளிகள் உலாவுமே தவிர, ஜனக்கூட்டமே அதிகம் இராதே—ஏன் நீ இங்கே இருக்கிறாய்—நம்ம கம்பெனிக்கு வந்துவிடு'' என்று கூற, ''எனக்குச் சங்கீதத்தில் பிரியம். கலைக்குப் பணி புரிய வேண்டும் என்பதிலே ஆர்வம்—ஆகவே அதை இங்கிருந்தே செய்ய முடியுமே'' என்று வாதிட, ''பைத்யக்காரா! இடத்துக்கு ஏற்றபடிதானே இயல்பு அமையும். நீதிநாதன் கோயிலிலே இருந்தால், உன் சாரீரம், கொஞ்ச நாளில் 'தர்பார்' இராகம் பாட மட்டும்தான் பயன்படும். இந்த இடம் உனக்கு ஏற்றதல்ல. வா, நமது கம்பெனிக்கு'' என்று அழைத்து வந்தார். வந்த ரங்கன், கைகட்டி வாய்பொத்தி நின்று, குருமூர்த்தி குளிக்கப் போனால் செம்பு எடுத்துக் கொடுத்து, படுத்துக்கொண்டால், கை-கால் பிடித்து, சாப்பிட உட்கார்ந்தால் விசிறி கொண்டு வீசி, கம்பெனிக்குக் கிளம்பினால், கால் செருப்பும் கைக்குடையும் எடுத்துக் கொடுத்து, அடக்க ஒடுக்கமாக இருந்து பாகவதரானான்; ராஜபார்ட்டானான். இவ்வளவு பெரிய நிலைமைக்கு வந்த பிறகு, கம்பெனி

நடப்பதே தன்னாலேதான் என்று எண்ணிக் கொண்டான். குருமூர்த்தி அவன் தலையில் ஒரு குட்டுக்குட்டி மூலையில் உட்கார வைத்துவிட்டு, ''அடே, முட்டாளே! பாரடா, நீ இல்லாமல் கம்பெனி, ஜாம் ஜாமென நடக்கிறது. நமது கம்பெனி முறை, அடிப்படையே அப்படிப்பட்டது—யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கம்பெனி நடக்கும்'' என்று நிரூபித்துக் காட்டுகிறார். ரங்கதுரை, வெட்கமும் துக்கமும் தாங்காததாலே வெளியே தலை நீட்டுவதே இல்லை—என்று குருமூர்த்திக்காக வா தா டு வ தா க எண்ணிக் கொண்டு சிலர் பேசினர்—ஏசினர். இதற்கிடையில், திடீர் திடீரென்று புதிய புதிய நடிகர்கள் தோன்றுவர் கம்பெனியில்—பிறகு, தோன்றிய வேகத்தைவிட அதிக வேகத்தில் மறைவர்.

''ஒருநாள் எனக்குச் சரியாகத் தாளம் போட வராது'' என்று ரங்கன் கிண்டல் செய்தான்.

''பலராமனாக நான் வேஷம் போட்டபோது, கிருஷ்ணனாக ரங்கு நடித்தான்—நான்அதுதான்சரியான 'சான்ஸ்' என்று, நல்ல 'டோஸ்' கொடுத்தேன், பாடத்தில் இல்லாததை எல்லாம் சேர்த்துக் கொண்டு.''

''இந்தக் கம்பெனியில் புகுந்து கொண்டு, அவன், ஏக போகம் அல்லவா எதிர்பார்த்தான்.''

கம்பெனியின் ''மற்றவர்கள்'' பேசலாயினர் இது போல.

ரங்கதுரை கிராமத்தைவிட்டு நகரவில்லை. அவன் தாய்க்கு நோய் குணமாகவுமில்லை. அவன் சாரீரம் வெளியே கேட்கவில்லை—இராக ஆலாபனர்—இராஜபார்ட் என்ற போஸ்ட்டர்கள்—விளம்பரம் எதுவும் கிடையாது.

''இருட்டில் தள்ளப்பட்டுவிட்டான்''—சற்றுக் குதூகலத்தோடு பேசினர்—அவன் குணமறியாதார்.

''இப்போதுதான், கொஞ்சம் தாராளமாக உலாவ, உலக விஷயத்தை உணர, நிம்மதியும் வசதியும் கிடைத்தது'' —அவன் எண்ணினான் அதுபோல்.

கம்பெனியும் நடைபெற்று வந்தது—ரங்கனின் காலமும் ஓடிக்கொண்டே இருந்தது.

இந்த 'மெழுகு' நிலையை விட்டுவைக்கும் விருப்பம் இல்லாத சிலர், கொஞ்சம் 'அனல்' காட்ட வேண்டும் என்று கிளம்பினர்.

''கேள்விப்பட்டீர்களா விஷயத்தை? ரங்கதுரைக்கு ஒரு சான்ஸ் அடித்ததாமே. கிராமபோன் ரிகார்டு கொடுத்திருக்கிறானாம்—ஆயிரம் ரூபாயாம், பிளேட் ஒன்றுக்கு'' என்று கூறினர், குருமூர்த்தியிடம். அவருக்குக் கோபம் வராமலா இருக்கும்! அவருடைய கோபத்தைக் குறைப்பதாக எண்ணிக் கொண்டும், ரங்குவின் குணம் மாறவில்லை என்பதை அவருக்குக் கூறவேண்டுமென்று நினைத்துக் கொண்டும், சில நற்குணம் படைத்தவர்கள், ''பிளேட்டில்கூட, ரங்கதுரை உங்களைப் பற்றிய புகழ்தான் பாடியிருக்கிறார்'' என்றனர். அவர் மனம் குளிரும் என்று எண்ணினர். விஷப் பயிரிடுவோர், ''வேறு எதை அவன் பாடமுடியும்? அதைப் பாடினால்தானே ''சான்ஸ்''—என்றனர். குருமூர்த்தி இதை ஆமோதித்தார். எனவே இதனையே, அனலாக்கி ''ரங்கன் பிளேட் கொடுக்கப் போய்விட்டபன்—அதிலே பணம் திரட்டப் பார்க்கிறான்'' என்று பேசலாயினர். ''பத்துப் பிளேட் கொடுத்தானாம். அதற்கு அவனுக்கு ஒரு தங்கப் பிளேட் பரிசு தந்தார்களாமே''—ஒரு வதந்திப் பிரியர் கூறினார். ''அந்தப் பிளேட்டிலே வைரம் ஏழு புதைத்துத் தந்தார்கள்!'' —என்றார், பிளேட்டின் எடை, விலை, சகலமும் தெரிந்தவர் போல நடித்த ஒருவர்.

''தங்கப் பிளேட்! அதிலே வைரம் இழைத்திருக்கிறது!! பயல், மண்டைக் கர்வியாகாமல் எப்படி இருக்க முடியும்'' —குருமூர்த்தி எண்ணினார்.

''இவ்வளவும் தங்களால்''—தூபமிடுவோர் கூறினர்.

''இதை வெளிப்படுத்த வேண்டும்'' தூண்டிவிடுவோர் பேசினர்.

''நான் இதையேதான் சொல்லிக்கொண்டு வருகிறேன். இதைச் சொன்ன உடனே, ரங்கதுரைமீது கோபம் பிறக்கிறது—பலபேர் ஏசுகிறார்கள். இப்படிப்பட்ட 'அந்தஸ்து' யாராலடா கிடைத்தது—அவரை மறந்துவிட்டாயே—கம்பெனியை விட்டுப் போய்விடுகிறாயே'' என்றுகூடக் கேட்டனர் என்றார், ஒரு வெற்றி காணாதார்.

பிளேட் கிடைத்ததோ வெள்ளி! முலாம் தங்கம்! கிராமபோனில் ரங்கு பாடும்போதுகூட, கம்பெனியில் இருந்தால் செய்யக்கூடிய கலைத்தொண்டிலே ஒரு பகுதியாவது பிளேட் கொடுப்பதன் மூலம் செய்வோம் என்று எண்ணிக்கொண்டு தானிருந்தான். அந்தச் செயலே துரோகச் செயலாகக் கூறப்பட்டது!

கம்பெனி நடந்து கொண்டிருந்தது—ரங்கதுரை தனி உலகில் சஞ்சரிக்கலானான்.

''ரங்கதுரை, இப்போதெல்லாம், நந்தவனத்திலேதான் இருக்கிறான்''—ஒருவர் ஆரம்பிப்பார்.

''மலரின் மணத்தை ரசிக்கிறான் போலும்''—இன்னொருவர், கிண்டல் செய்வார்.

''மரகதம் என்று ஒரு குட்டி உண்டு...'' என்று குறும்பை இன்னொருவர் துவக்குவார்.

''ஏனய்யா மறைக்கிறீர்? அவளுடன் கூடிக்கொண்டு குஷாலாகக் காலந்தள்ளுகிறான்—சொல்லேன்''-வேறொருவர், சம்பூர்ணமாக்குவார்!

மரகதம், மாளிகையில் மன்னார்சாமியுடன், மலர் தூவி விளையாடிக் கொண்டிருப்பாள்!

ரங்கதுரை ராக ஆராய்ச்சியிலோ, பிளேட் கம்பெனிக் காரரிடம் சொல்லி, கலை உயர்வுக்காக இதைச் செய்தால்

நல்லது; அதைச் செய்தால் நல்லது என்று கூறுவதிலேயே காலங்கழித்து வந்தான்.

''அதோ பார், போகிறான்—ராஜபார்ட் ரங்கதுரை''— வீதியிலே ஒருவர் சொல்லுவார். வேறொருவர், ''ரங்கன் என்று சொல்லேண்டா!ராஜபார்ட்டாம்,ராஜபார்ட்!அதெல் லாம் போய் ரொம்பக் காலமாகிவிட்டதடா!'' என்பார்— ரங்கதுரையின் காதிலே, அந்தப் பேச்சு விழும்—ஆனால் அதேபோது, அதே ஆசாமிதான், ''ரங்குவிடம் மற்றவர்கள் இராகம் பிச்சை கேட்க வேண்டும்—ராஜபார்ட்டுக்கு, ரங் குவை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்—ரங்குவின் ராக ஆலாபனத்தாலேதான் கம்பெனியே ஓடுகிறது—வேறு கம்பெனியிலே மட்டும் ரங்கதுரை இருந்தால், இந்நேரம் எவ்வளவோ 'பெரிய' வித்வானாகியிருப்பார்'' என்றெல் லாம் புகழ்ந்தவர். உள்ளன்புடன் என்பது கவனத்துக்கு வரும்—வந்ததும், முதலில் கிளம்பிய பெருமூச்சை, ஒரு புன்னகை கிளம்பித் தோற்கடித்துவிடும்.

ராஜபார்ட் ரங்கதுரை பாகவதரின் மனப்போக்கு, கமபெனி முதலாளியின் போக்கினால் தாக்கப்பட்டதிலிருந்து படிப்படியாச மாறி மாறி, கம்பெனியில் நடிப்பதே மனக்கஷ்டத்தையும், வீண் சிரமத்தையுந்தான் தருகிறது என்ற எண்ணத்தை உண்டாக்கிற்று. இத்துடனும் நிற்க வில்லை. மனம்தானே! 'ரங்கதுரை இல்லாவிட்டால் கம் பெனி நடைபெறாதா?'என்ற பேச்சு, 'கம்பெனியில் இல்லா விட்டால், ரங்கு நடமாடவே முடியாதா' என்ற பதிலொலி யைத்தானே கிளப்பும்! ரங்கனின் பேச்சல்ல, அவன் நட வடிக்கை, அந்தப் பதிலைத்தான் தந்தது.

''கம்பெனி மூலம்' பெரும் புகழும் பணமும் பெற்றுக் கொண்டு ஓடிவிட்டான். ரங்கன் பணம் திரட்ட, சுகம் அனுபவிக்க'' என்று பேசினர்—ரங்கனை ஏச! ஆனால் அவர்களே,''கம்பெனியில் அவனுக்கு எவ்வளவு செல்வாக்கு, புகழ், வசதி, சுகம் தந்தார்கள்! அவைகளைப் பெற்றுக்

கொண்டு, பெரும் புகழுடன் இருந்தவன் இப்படியானானே! இப்போது அவன் விலாசம் என்ன! அவனுக்கு ஏது செல்வாக்கு?'' என்றும் பேசினர்—அதுவும் அவனை ஏசுவதாக எண்ணிக்கொண்டு. கம்பெனியில் பெரும் புகழும் பணமும் இருந்தும், ஏன் அதை இழக்க ரங்கன் துணிந்தான்?—இதை எண்ணுபவர்கள் இல்லை. 'சுகம், பணம்தேட கம்பெனியை விட்டு வெளியேறினான் என்று பேசுகிறோமே! அந்தச் சுகமும், பணமும் அவனுக்குக் கம்பெனியில் கிடைத்ததே! கிடைத்ததை விட்டுவிட்டு, வேறிடம் செல்வானேன்?'—என்றும் அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை; எண்ணம் வரவில்லை.

''ராஜபார்ட் ரங்கதுரை, வாழ்க்கையை நடத்துவது என்ற அளவுக்குத்தான் வந்துவிட்டான். அவன் ஏதேதோ செய்வான்—செய்யப் போகிறான் என்றெல்லாம் எண்ணினோம்—கடைசியில் அவன் வெறும் ஆளாகிவிட்டான்! பைத்யக்காரன். ஒரு விதத்திலே பார்த்தால் பரிதாபமாகக்கூட இருக்கிறது''—என்றனர் சிலர்.

''என்னமோ சூது செய்கிறான்! ஏதோ சதி!'' என்று பேசினர் சிலர்.

''ரங்கதுரை, என்ன சதி செய்தாலும் நம்ம குருமூர்த்தியிடம் ஒன்றும் பலிக்காது'' என்றனர் சிலர்.

''அவர் சும்மா இருந்தாலும், நாங்கள் சும்மா இருக்க மாட்டோம்'' என்றனர் வேறு சிலர்.

ரங்கதுரையோ, உள்ளூரில், வெற்றிலை பாக்குக்கடை வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.

ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் வெற்றிலை பாக்குக் கடை என்று போர்டு கிடையாது—ஆனால், ஊரிலே பேச்சு அவ்விதம்தான்.

வெற்றிலை பாக்குக் கடையின் மூலம் டபுள்ராயல், சிங்கள் ராயல் விளம்பரம் கிடையாது ரங்கதுரைக்கு! எப்படிக் கிடைக்கும்? ஆனால் அதேபோது கரகரப்பிரியாவுக்

கான சாதகம், புன்னாகவராளிக்கான சாதகம், இவைகளும் அவனுக்கு இல்லை. இலாப நஷ்டக் கணக்குப் பார்த்தான்— சீராகத்தான் இருந்தது.

கம்பெனியின் நிலைமையைக் குருமூர்த்தி கணக்கிட்டுப் பார்த்தார்—அதுவும் சரியாகத்தான் இருந்தது.

''குருமூர்த்தி மிகவும் திறமைசாலி. ரங்கதுரை பாகவதர் என்று ஒருவனை ராஜபார்ட்டுக்குத் தயார் செய்தார், எவ்வளவு அருமையாக இருந்தது தெரியுமா? என்னமோ பேதப்பட்டு ரங்கதுரை பாகவதர் விலகிவிட்டார். கம்பெனிக்கும் கொஞ்சம் நஷ்டந்தான்—ஆனால் பார்த்துக் கொண்டேயிருக்கிறார் நல்ல ஆளாகவும், சமயமாகவும் கிடைக்கட்டுமென்று; கிடைத்தால், மற்றோர் ரங்கனைப் பாகவதராக்குவார்— அவரால் முடியும்'' என்று பேசினர். நாடகம் பார்த்தோர், உண்மையிலே, அவரால் முடியும், ரங்கதுரைகளைப் பாகவதராக்க!

தன்னை ஏன் பாகவதராக்கவில்லை என்ற வருத்தம், சோமுவுக்கும் தாமுவுக்கும் உண்டு.

ஆனால் குருமூர்த்தி என்ன செய்வார்? மோரிலிருந்துதான் வெண்ணெய் எடுக்க முடியுமே தவிர, பன்னீரிலிருந்து கூட எப்படி எடுக்க முடியும்? அதுபோலத்தான்! ரங்கன் கிடைத்தால் பாகவதராக்க முடியும்—சோமுவை அப்படி ஆக்கமுடியாதே! அது அவருக்குத் தெரியும்—சோமுவுக்குத் தெரியாது.

ரங்கதுரை பாகவதர்—பழையபடி—சாதாரண ரங்கன் ஆனான். முன்பு பலபேர், அனைக் கேட்டதுண்டு, ''ஏண்டாப்பா ரங்கா! இவ்வளவு நல்ல சாரீரம் இருக்கும்போது ஏன் இப்படி மங்கிக் கிடக்கிறாய்—ஏதாவது கம்பெனியில் சேர்ந்தால், பிரமாதமான பேர் வருமே''என்று. அதேபோல மீண்டும் கேட்கலாயினர். ''ரங்கு! ஏன் இப்படி உன் திறமை பாழாகும்படி விட்டு வைக்கிறாய். ராஜபார்ட்டாக இருந்தாய்; இப்போது வெற்றிலை பாக்குக் கடை வைத்துக் கொண்டாயே! நீ தோடி பாடினால்,கவலை ஓடிப்போகுமே!

காவடிச் சிந்து நீ பாடும்போது, வைஷ்ணவன்கூட சைவனாகி விடலாமா என்று எண்ணுவானே! இவ்வளவு திறமையையும் பாழாக்கிக் கொண்டு, சிசர் வேண்டுமா, வில்ஸ் வேண்டுமா, அசோகா பாக்குத்தூளா, சுகந்த தூளா என்று கேட்டுக் கொண்டு, வெற்றிலைக் கடையிலே இருக்கிறாயே. இது சரியா?'' என்று கேட்கலாயினர்.

''அது சரிங்க; விஷயம் பெரிது. விளக்கமாகக் கூற, நேரமில்லைங்க! உங்களுக்கு சோடா ஐஸ் போட்டு தரட்டுங்களா? வெறும் சோடாவே போதுமா?'' என்று கேட்டுக் கொண்டே, கடையிலே உட்கார்ந்து கொண்டிருந்தான் ரங்கன்.

வெற்றிலை பாக்குக் கடையிலே, முருகன் வேஷத்திலே எடுத்த போட்டோ, தொங்கிக் கொண்டிருந்தது. கம்பெனியில் ரங்கதுரை பாகவதரின் படம் இல்லை. சோமு, அந்தக் காலி இடத்தில் எந்தப் படம் புகுமோ என்று எண்ணிக் கொண்டிருந்தான். விநாயகர் படத்தைத் தொங்கவிட்டார் மானேஜர்.

கம்பெனிக்கும் நஷ்டமில்லை—குருமூர்த்தியார் கணக்குப்படி.

ரங்கனுக்கும் நஷ்டமில்லை—அவனுடைய நோக்கத்தின்படி.

இடையிலிருந்தோர், ரங்க பாகவதரை, வெற்றிலைக் கடை வைக்கச் செய்து விட்டோம் என்று பூரித்தனர்.

ரங்கனோ, வெற்றிலைக் கடையை நடத்தினால், அதனாலே என்ன? நான் கம்பெனியில் உழைத்தேன். அதனால் அங்கு உயர்ந்தேன். கம்பெனி முதலாளியிடம் மரியாதையும், அன்பும் காட்டினேன்; அதனால் அவர் என்னை ஆதரித்தார்; பாராட்டினார். இப்போது அதே முறையில் நடந்து கொள்கிறேன் இங்கு. அதனால் கடைவீதியில், நாலு பேர் என்னை நல்லவன் என்றுதான் சொல்லுகிறார்கள். இங்கு இருக்க வேண்டிய முறைப்படி, வெற்றிலை வாடாதபடி

பார்த்துக் கொள்கிறேன்; பாக்குக் கெடாதபடி பார்த்துக் கொள்கிறேன்; சோடா கேட்டால், ஐஸ் கலந்து தரட்டுமா என்று கேட்கிறேன்—கடையைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கொள்கிறேன்—இதிலே புதிய சிரமமோ, கவலையோ காணோமே! பாகவதராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடை நடத்தினாலும், நாடகமாடினாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும், நல்லவனுக்கு, திறமைசாலிக்கு, உண்மை உழைப்பாளிக்கு, அவன் எந்த வேலையைச் செய்தாலும், அதிலே அவன் ஒரு குறிப்பிடத்தக்கவனாவான்—இது இயற்கை; நீதி! இதை, பொறாமை, பொச்சரிப்பு, கலகம் எதுவும் மாற்றாது! நாடகக் கம்பெனியில், ராஜபார்ட்டாக இருந்தேன்; இப்போது கடை வீதியில், என்னை வெற்றிலை பாக்குக் கடைக்காரர் சங்கத்துக்குக் காரியதரிசியாக்கித்தான் இருக்கிறார்கள்'' என்றான்.

அவன் நிலை மாறியிருந்தது—அதை அவன் நிம்மதி என்றான்.

அவன் நிலை மாறியிருந்தது கண்டு, நிந்திப்பவர்கள், 'பார்! ஆசாமி என்ன கதியானான்! வெற்றிலைக் கடை வைத்திருக்கிறானையா, ராஜபார்ட்!!' என்று ஏளனம் செய்தனர்.

ஆனால் ஒருவராவது, ரங்கன் ராஜபார்ட் நிலையை இழந்தும், குருமூர்த்தி கம்பெனி ரங்கனை இழந்தும், அந்த இருவருக்கும் நஷ்டம் அல்ல என்றபோதிலும், நாடகக் கலைக்கு ஒரு நஷ்டம்; அதை ஈடுகட்டவும் முடியவில்லை என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்கவே இல்லை. கலைநுட்பம் உணர்ந்த மிகமிகச் சிறிய தொகையினருக்கு மட்டுந்தான், இந்த நஷ்டம் தெரிந்தது. அவர்கள் ரங்கனைப் பார்க்கும் போது, அதிகம் பேசுவதில்லை; எதுவும் வாதாடுவதில்லை. அவர்கள் குருமூர்த்தியிடமும் எதுவும் பேசுவதில்லை.

குருமூர்த்தி—ரங்கதுரை கூட்டுறவு, கம்பெனிக்கு இலாபமா, நஷ்டமா என்பதல்ல முக்கியமான பிரச்னை. கலைத்துறைக்கு, அவ்விதமான கூட்டுறவு நிச்சயம் தேவையா

யிற்றே! அது எக் காரணத்தாலோ கெட்டுவிட்டதே! அதனால் கலைத்துறைக்கு நஷ்டந்தானே என்பதை அந்தச் சிறு தொகையினர் மட்டும் உணர்ந்து உருகினர். ஆனால் அவர்கள் சிறுதொகை! என்றைக்கேனும் ஒருநாள் சுரஸ்தானம் தவறி, யாராவது நடிகன் பாடும்போது, குருமூர்த்தியின் கண்களிலே நீர் தளும்பும். ''குருமூர்த்தி கம்பெனிக்கு நேற்று போயிருந்தேனப்பா! இப்போது நீ இல்லாததால் சோபிக்கவே இல்லை நாடகம்'' என்று என்றேனும் யாரேனும் கூறும்போது, ரங்கதுரையின் கண்களில் நீர் தளும்பும். அவர்களின் கூட்டுறவின் கடைசிப்பலன், அந்தக் கண்ணீர்த் துளிகள்தான் போலும்!

★

# 8
# சமூக சேவகி சாருபாலா

**ச**மூக சேவகி சாருபாலாவுக்கு சளி, ஜுரம்—'சாந்தி பவனம்' அல்லோலகல்லோலப்பட்டது—இன்கம்டாக்ஸ் ஆபீசர் கோதண்டராம ஐயருடைய ஏக புத்திரி சாருபாலா; அமர்க்களமாகத்தானே இருக்கும். அதிலும் சாருபாலா, சமூக சேவை செய்து பிரபல்யமடைந்து கொண்டிருந்த குமாரி. முகிலுக்கிணையான குழல்; அது தழுவியிருந்த வட்ட நிலவு முகம்; பிறை நெற்றி, பேசும் கண்கள், துடிக்கும் அதரம், அங்கம் தங்கம், நடை நாட்டியம், பேச்சோ கீதம் —வயது இருபத்திரண்டு; படிப்பு இன்டர்.

அலங்கார மூக்குக் கண்ணாடி, அலங்காரப் பை, அதிய லங்கார பூட்ஸ், வைரத்தோடு, கையில் ரிஸ்ட்வாட்சு, கழுத்தில் மெல்லிய சங்கிலி—எப்போதும் புன்னகை; எவரிடமும் இன்முகம்—சாருபாலா அந்த நகரில் ஒரு காட்சியாகிவிடாம லிருக்க முடியுமா!

''வருமானம் மிகவும் குறைவு. இந்த வருஷம் மிகுந்த நஷ்டம்'' என்று குறையைக் கொட்டிக் கொண்டு, ஆபீசருடைய கருணையைப் பெற்றுக் கொண்டு வருவோம் என்று சகுணம் பார்த்துக் கொண்டு கிளம்பிய கஞ்சனெல்லாம், அந்த கனகப்பதுமையைக் கண்டதும், தன் வியாபாரப் பெருமையைக் கூறிவிட்டு வருவர் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன், அந்தச் சுந்தரி கிளப்பிய சூறாவளியின் தன்மையை.

கோதண்டராம ஐயர், எப்போதும் தன் 'பார்யாள்' கீறிய கோட்டினைத் தாண்டாதவர், அந்த அம்மாளுடைய இராசியால்தான், தனக்குப் பெரிய பதவி கிடைத்தது என்

பதிலே, அவருக்கு அபாரமான நம்பிக்கை. சாருபாலா ஒரே மகள். எனவே, ஐயர் தன் சகதர்மிணியின் விருப்பத்தின்படி, சாருவுக்குச் சர்வ சுதந்திரம் கொடுத்திருந்தார்.

''கோந்தை, வெளியே போகணுமானா, நீங்க ஆபீசிலே இருந்து வருகிற வரை காத்திண்டிருக்கா காருக்காக! சிறுசா ஒரு கார், ஆஸ்டினோ, வாக்சாலோ வாங்கிக் கொடுத்திடுங்கோ—அது சாயந்திரமானா கிளப்புக்குப் போய்வரச் சௌகரியமாக இருக்கும்'' என்று அம்மையார் கூறுவார்; அடுத்த வாரம், ஆஸ்ட்டின் வந்து நிற்கும், 'சாந்திபவனில்' அவ்வளவு செல்லமாக வளர்த்து வந்தார்கள் சாருபாலாவை! தங்கக் கொடி, அதற்கு வைரத்தில் பாத்தி என்று வைத்துக் கொள்ளுங்களேன்! தங்கமும் வைரமும் ஜொலிக்கும்—சாருவைப் போல பார்க்குமா, பேசுமா, சிரிக்குமா!!

சாருபாலாவுக்கு, சளி ஜுரம் என்றவுடன் சாந்தி பவனம் அல்லோலகல்லோலப்பட்டது.

சமையற்காரர் விசாரணைக்கு ஆளானார்!

''கோந்தைக்குச் சளி இருப்பது தெரிந்தும், ஏன் வெண்டைக்காய் சாம்பார் செய்தாய்? சுத்த மண்டுடா, நீ''—என்றார் ஆபீசர்.

தோட்டக்காரன் கேள்வித் தாக்குதலில் சிக்குண்டு தவித்தான். 'ஆறு மணிக்குமேல், சாரு தோட்டம் வந்தபோது, ஜில்லென்று பணிவாடை அடித்ததே, ஏன் அதைச் சொல்லி உள்ளே போகச் செய்யவில்லை' என்று கேட்டனர்.

வேலைக்காரிகள் கண்டிக்கப்பட்டனர்—மோட்டார் டிரைவர் எச்சரிக்கப்பட்டான்—இவ்வளவும், சாருவுக்கு 101—இருந்தபோது!

'ஏண்டி, இப்படி வீணா உடம்பைப் போட்டு அலட்டிக்கறே, அப்பாவோட மனதுக்கும் சங்கடம் உண்டாக்கறே! நான் இப்பத்தான் தர்மாமீடர் வைத்துப் பார்த்தேன்; 101 தான் இருக்கிறது''—என்று சாரு சொன்னாள்—மனது கேட்கிறதா, கடைமட்டும் சிவந்திருக்கும், கண்கள் இப்போது

முழுவதும் இலேசாகச் சிவந்து காணப்பட்டது. முகம் எப்போதும் பளபளப்புதான். இப்போது புது மினுமினுப்புத் தெரிந்தது. பேசும்போது நாலைந்து தடவை இருமலும் இருந்தது— கவலைப்படாதே என்று சொன்னால், மனம் கேட்கிறதா? டாக்டர் வரவழைக்கப்பட்டார்.

டாக்டர் இரகுராமன், அரும்பு மீசைக்காரன்— ஐயர் தான்— ஆனால் ஏதோ இந்த மீசை வைத்துக் கொள்ளத் தங்களுக்குத்தான் தெரியும் என்று பார்ப்பனரல்லாதார் பெருமை பேசிக் கொள்கிறார்களே, என்னால் மட்டும் முடியாதா பார் என்று 'சவால்' விட்டுவிட்டு, மெடிகல் காலேஜில் ஆரம்பித்தார் மீசை வளர்க்க! மீசையும் அழகாக அமைந்திருந்தது.

டாக்டர் இரகுராமனுக்கு எந்த மங்கையையும் மயக்கும் அலாதியான அழகு தன்னிடமிருப்பதாக, பல ஆண்டுகளாக நம்பிக்கை. பெண்களிடம் பல்லிளிப்பதும், அவர்களின் அழகைக் கண்டு வாயைப் பிளப்பதும், அவர்கள் பேசினால் மெய் மறந்து போவதும், அவர்களிடம் பேசினால் குளறிக் கொட்டுவதும் ஆடவரில் அசடரின் செயல். ஒரு அலட்சியமான பார்வை, ஒரு சிறு புன்னகை, ஒரு விநாடியில் அதுவும் மறைந்துவிட வேண்டும்— பெண்களிடம் இவ்விதம் நடந்து கொண்டால்தான் அவர்களுக்கும் கர்வபங்கம் ஏற்படும் என்பது டாக்டரின் மருத்துவமுறை— கல்லூரி நண்பர்களிடம் அடிக்கடி கூறிவந்திருக்கிறான்.

நூக்கமரக் கட்டிலில், டபேடா உறை போட்ட மெத்தை தலையணை போட்டு வைக்கப்பட்டிருந்தது. ஐந்தாண்டுத் திட்டத்தில் அனைவருக்கும் பங்கு உண்டு என்று எழுதப் பட்டு, நேரு பண்டிதருடைய படம்—பாரதமாதா படம், சுவரிலே! மேஜைமீது, பாரதியார், சரத்சந்திரர், ஷெல்லி, ஷேக்ஸ்பியர்! ஜன்னலில், ஒரு புத்தர் சிலை சிறிய மூளியாகிப் போன நிலையில். பக்கத்தில் சாயிபாபா சிலை, புத்தம் புதியது. கட்டிலின் மீது அந்தக் கட்டழகி கண்களை மூடிக் கொண்டிருக்கும் நிலை! ஆனால் கன்னத்தில் ''அழகுக்குழி'' காணப்பட்டது - ஏதோ உள்ளூர ஒருவகையான சந்தோஷம்;

முகத்திலே பாண்ட்ஸ் ஸ்நோவும் பவுடரும், ஊதுவத்தி மணம் அறையில் கமழ்ந்தது, இலைப்பச்சை ஜார்ஜட் சேலை, அதற்குப் பொருத்தமான 'ஜாக்கட்'—சாருபாலாவை அந்தக் கோலத்தில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கடுந்தவம் புரிந்துவரும் முனிவர்கள் கண்டாலே போதும், விசுவாமித்திரர் ஆகிவிடுவர்—பாபம், டாக்டர் இரகுராமன் கண்டால் என்ன ஆவான்? குளறினான். தெர்மாமீட்டரைத் தலைகீழாக வைத்து சாருவின் கிண்டலால் தாக்குண்டான்—எவ்வளவு காலமாக இருக்கிறது என்று கேட்கிறான்; அவள் சிரிக்கிறாள்; மெல்லிய குரலில் 'பைத்யம்' என்று கேலி செய்கிறாள்; வந்ததற்கு எதையாவது தரவேண்டுமே—அதற்காக காட் லீவர் ஆயில் மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு, மருந்து அனுப்பிவைப்பதாகச் சொல்கிறான்.

''எனக்கு, இந்த ஜுரம் ஒன்றும் பிரமாதமில்லை. ஆனால், டாக்டர்! இராத்திரி வேளையிலே, நல்ல தூக்கம் வரமாட்டேனென்கிறது.''

''காற்று நன்றாக வருகிறதல்லவா! இல்லையானால் மாடியில் படுத்துக் கொள்ளலாம்...''

''மாடிதானே இது...''

''ஆமாம்...மாடியில் என்றால் வெளியில்...ரூமில் அல்ல; வெளியில் படுக்கலாமே என்று சொன்னேன்...''

''வெட்ட வெளியிலா! ப்ளூ வந்துவிடுமே...''

''ஆமாம், ப்ளூ வந்துவிடும்; ரொம்பக் கெட்டது...''

''டாக்டர்! இங்கு நல்ல காற்றோட்டம் இருக்கிறது... எனக்குத் தூக்கம் வராததற்குக் காரணம் அதுவல்ல...''

''ஏதாவது வலி எடுக்கிறதா...தலையில், கைகால்..''

''நானென்ன நோயாளின்னே தீர்மானமா டாக்டா..''

''நோ! நோ! ரொம்ப ஹெல்த்தியாத்தான் இருக்கிறீர்கள்...''

''என் சினேகிதிகளெல்லாம் என்னைக் கேலி செய்யறா! உனக்கென்னடி சாரு, நல்ல ஆப்பிள் போல இருக்கறேன்னு''

''கோல்டன் ஆப்பிள்...கோல்டன் ஆப்பிள்...! அதாவது...அதாவது...''

''அதாவது இதாவது! கேலி பேசறதுக்காகவா உம்மை இங்கே வரச்சொன்னா?...''

''நோ! நோ! மன்னிச்சுடுங்கோ ...ஏதோ ஒருமாதிரியா இருக்கு...எனக்குக் கொஞ்சம் தேர்த்தம்...''

''வெந்நீரா...''

''ஆமாம்...எப்பவும் நான் சோடா...இல்லாவிட்டால் வெந்நீர்தான் சாப்பிடுவது வாடிக்கை...இராத்திரியிலே மட்டும் ஐஸ்வாட்டர் சாப்பிடுவேன்...''

''இப்போ, வெந்நீர்தானே வேணும்...''

''இருந்தா ...கொடுக்கச் சொல்லுங்க...''

''இருந்தா கொடுங்களா ...சத்திரம் சாவடியானால் கூட வெந்நீர் கிடைக்குமே, எங்க ஆத்தைப் பத்தி ரொம்ப மட்டமான அபிப்பிராயம்போல இருக்கே உங்களுக்கு...''

''ஐயையோ...தப்பா எடுத்துண்டிங்களே...''

''இதோ ஒரு விநாடியில் கொண்டு வரேன்...சித்தை உட்காருங்கோ... வந்ததிலே இருந்து நின்னிண்டே இருக்கறிங்களே...''

''பரவாயில்லே...பரவாயில்லே...கிளாசிலேயே எனக்குப் பழக்கம்...அதாவது, எப்பவும் வாக்கிங், டென்னிஸ், இப்படி...''

உள்ளே சென்றாள் சாருபாலா, டாக்டருக்கு வெந்நீர் கொண்டுவர!

டாக்டர், திகைத்துப் போய் நாற்காலியில் உட்கார்ந்தார்; ஜுரம் வரும் போலிருந்தது.

''சாரு! உனக்கு உடம்பு இருக்கிற இலட்சணத்துக்கு நீ எழுந்து வரலாமா...டாக்டர் கையலம்பத் தண்ணீர் கேட்டா, நாங்கள் கொண்டு போய்க் கொடுக்கிறோம்... நீ உடம்பை அலட்டிக் கொள்ளாதே'' என்று புத்திகூறிக் கொண்டே, உள்ளேவந்த பர்வதம்,''டாக்டர், கோந்தைக்கு எப்படி இருக்கு உடம்புக்கு? பயப்படறமாதிரி ஒண்ணுமில் லையே''என்று கேட்டபடி, பீதி படிந்த டாக்டரின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, ''உங்களுக்கு என்ன உடம்புக்கு?' என்று கேட்க வேண்டியிருந்தது. டாக்டருக்கு மேலும் சங்க டம் ஏற்படாதபடி சாருவின் பிரவேசம் இருந்தது. தேன்—பால்—பழரசம்...எல்லாம்..தேவாமிருதம் என்கிறார்களே, அதை அல்லவா சாப்பிடுகிறார் டாக்டர்.

''தாங்க்ஸ்...! நோ...போதும்...நீங்கள் உட்காருங் கள்...இல்லை இல்லை...படுத்துக் கொள்ளுங்கள்...''

''டாக்டர்! கால்ஷியம் இன்ஜக்ஷன் நல்லதா ...''

''ஓயெஸ்! கால்ஷியம் ரொம்ப நல்லது...நாளைக்குப் போடலாம்...''

''ஒரு கோர்ஸ், எத்தனை இன்ஜக்ஷன்.''

''ஆறு போடலாம்...உங்க உடம்புக்கு எட்டுகூட நல் லது...''

''நாளைக்கு அதுதான் செய்து கொள்ளவேணும்... இப்ப சாப்பிட...''

''எது வேணுமானாலும் சாப்பிடலாம்...கொஞ்சம் கொஞ்சம்...''

''கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடாமல், படிப்படியா சாப்பிடுவேன்? என்னை என்ன பத்ரகாளிபோல எண்ணிண்டு பேசறீள்...என் சினேகிதிகள் என்னை பாரிஸ் ப்யூடின்னு கேலி செய்வா...''

''கேலியா...செச்சே! பாரிஸில் இப்ப ஏது ப்யூடீஸ்... சரி...உங்களுக்குச் சளி ஏன் பிடிச்சது...''

''அதைக் கேட்கறிங்களா டாக்டர்! கேளுங்கோ, நன்னாக் கேளுங்கோ...ஆனா வாயைத் திறந்து பதில் சொல்ல மாட்டா! இவ இருக்கிறா நாரும் நரம்புமா! இவ என்ன செய்யறா தெரியுமோ...''

''போடி அம்மா! அதை எல்லாம் அவரண்டை சொல்லணுமா...''

''வேறே யாரண்டை சொல்றது, உன்னோட சேஷ்டையை? இப்ப படுத்துண்டயே, என் மனசு கேட்கறதா... எட்டு ஊசின்னா போடணும் என்கிறார் டாக்டர். இவ இருக்கிறா டாக்டர் ஒத்தை நாடி..சமூக சேவை'ன்னு சொல்லிண்டு கிராமம் கிராமமா, சோறு தண்ணீ இல்லாமல் சுத்தறது! சேறு கூட்டறதாம், சுண்ணாம்பு அரைக்கறதாம், கேட்டேளா, தோட்ட வேலை செய்யறதாம்...காத்தாலே இருந்து சாயரட்சை இருட்டுறவரையில் இது...ஜுரம் வராமலிருக்குமோ...இவ உடம்புக்கு ஆகுமோ? சுண்ணாம்பிலே கைபட்டா நல்லதோ, சொல்லுங்கோ...''

''ரொம்பத் தப்பு! ரொம்பத் தப்பு!''

''எது தப்பு டாக்டர்! ஏதோ ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்யறது தப்பா?''

''அதை யார் தப்புன்னு சொல்வா! நம்ம ஜவஹர் லால்கூடச் சொல்லியிருக்காரே,சமூக சேவை சிலாக்கியமானதுன்னு ...''

''சமூக சேவைன்னு சொல்லிண்டு சேறு கூட்டறதும், சுண்ணாம்பு அரைக்கறதும்தான் வேலையா ...ஏன் டாக்டர்! அந்த வேலைக்கு இவதானா ஆப்ட்டா! அதெல்லாம் வாட்டம் சாட்டமா, கட்டையா உள்ளவா செய்யவேண்டிய காரியம்...''

''ஆமா, இவங்க உடம்புக்கு ஒத்து வராது... சளி அதனாலேதான் பிடிச்சுது; ஆனாலும் பரவாயில்லை. கால்ஷியம் கொடுத்தா'ல் போதும்...''

நீண்ட நேரமாகிவிட்டதை பர்வதம் கவனப்படுத்தியான பிறகு, ஸ்டெதஸ்கோப்பை மறதியாக அங்கேயே வைத்துவிட்டு, டாக்டர் இரகுராமன், தன் நர்சிங் ஹோம் போய்ச் சேர்ந்தார்.

ஆறாவது இன்ஜக்ஷனுக்குப் பிறகுதான் டாக்டர் ஆராவமுதன், இது,'பாரடைபாயிட்'ஜாக்ரதையாகக் கவனித்துக் கொள்ளவேணும் என்று சொன்னார்— சுந்தரம்பாளிடம்— டாக்டர் இரகுராமனின் தாயாரிடம்! சாருபாலா வீட்டிலிருந்து வந்ததும் 102! பிறகு ஏறுகிறது இறங்குகிறது;நெருப்பாகக் காய்கிறது; மறுபடி வியர்க்கிறது; மீண்டும் ஏறுகிறது; இப்படி இரகுராமனுக்கு! கடைசியில் இது 'பாரடைபாயிட்' என்று டாக்டர் ஆராவமுதம் கூறினார்...நர்சிங் வேளையில் சாருபாலாவுக்குப் பழக்கமில்லை. ஆனால் அந்தப் பதினாறு நாட்களில், அவள் திறமையான 'நர்ஸ்' ஆகிவிட முடிந்தது. காதல் டோஸ் டோஸாகத் தரப்பட்டது— பார்வை, புன்னகை, பேச்சு, நெற்றியில் தைலம் தடவுதல், போர்வையை எடுத்துப் போர்த்துவிடுவது, ஜன்னலை இலேசாகத் திறப்பது, வேளா வேளைக்கு மருந்து தருவது, பிடிவாதமாக வாயைத் திறந்திட மறுத்தால், கன்னத்தைத் தடவி சிரிக்க வைத்து கஞ்சி கொடுப்பது—இப்படி, பாரடைபாயிட், மருத்துக் கணக்கில் இருக்கக் கூடாதா? இப்படிப்பட்ட மதுரமான வாழ்க்கைக்காகவாவது என்றுகூட டாக்டர் இரகுராமன் கருதினான்.

சமூகசேவகி சாருபாலாவுக்குத் தகுந்த வரன் பார்ப்பதையே முக்கியமான வேலையாகக் கொண்டிருந்த வேதாந்தாச்சாரி, சலியாணமாகாதிருந்த ஐ. ஏ. எஸ். அவ்வளவு பேருக்கும் கண்ணி வைத்தபடி இருந்தார்— எல்லாப் பறவைகளும் எப்படியோ தப்பிப் பறந்தபடி இருந்தன. சாருபாலா அவரைக் காண நேரிடும்போதெல்லாம் வேடிக்கையாகக் கேலியும் செய்வாள்.

''ஏண்டி, சாரு! உனக்கு நேவி'யில் ஒரு ஆளைப் பார்க்க வா...நேவியில்!''

''ஏன்! ஐ. ஏ. எஸ். பிடிக்கிற வேலை நடக்கவில்லை போலிருக்கு!''

''உன்னோட ஜாதகப்பலன் அப்படி இருக்கு, சாரு! நான் என்ன செய்ய...நானும் என்னென்னமோ 'பிளான்' போட்டுப் போட்டுப் பார்க்கிறேன்; பலிக்கல்லே. ஆசாமி என்னமோ அழகாகத்தான் இருக்கே? எனக்கோ வயசாயி டுத்து.

''ஆனா என்னவாம்! தசரத மகாராஜன் கைகேயியைக் கலியாணம் செய்து கொண்டது அவருடைய வயோதிகப் பருவத்தில்தானே...''

''ஏண்டி சாரு! அவனைக் கைகேயி ஆட்டிப் படைச் சதுபோல என்னை நீ ஆட்டிப் படைக்க எண்ணமிட்டு விட்டாயோ...''

''ஆசையைப் பாரு, ஆசையை!''

இப்படியெல்லாம் இருவருக்கும் சரளமான பேச்சு நடக் கும். 'கோந்தை'யின் சமர்த்துக் கண்டு தாய் மகிழ்வதும், 'தோப்பனார்' சபாஷ் போடுவதும் அந்தக் குடும்பத்தின் அலாதியான முறையாக இருந்து வந்தது.

''சாருவுக்கு அடிக்கடி ஏன் சளி ஜுரம் வர்ரது பாட்டி! நோக்கு என்னென்னமோ வைத்தியமெல்லாம் தெரியுமே. ஏன், சாருவுக்கு ஜுரம் வராமப்படிக்குச் செய்யல்லே...'' என்று அடுத்தாத்து ஆண்டாள் கேட்பதுண்டு.

''ஏண்டி வராது சளி ஜுரம்! ஜுரத்தோடா போகும்? கை கால் பிடிப்பு, கண்ணிலே மஞ்சள், குடல் வாதம், எல் லாம்தான் வரும். காலா காலத்திலே ஆக வேண்டிய காரியத் தைச் செய்யாமப் போனா, இதுதான் கதி. நேக்கு இவ வயதிலே, இரண்டு குழந்தைகள்! இவ, பாரேன், ஆட்டக் குதிரை மாதிரி ஆடிண்டு, என்னமோ சேவை செய்யப் போறேன்னு சொல்லிண்டு திரியறா! உடம்புக்கு வராமப் போகுமோ'' என்று அனுபவ வைத்யசிந்தாமணியானபாட்டி சொல்லிவிட்டு, ''இவ மட்டுமா! இந்தக் காலத்துப் பெண்

களே இப்படித்தான் இருக்கா...'' என்று அங்கலாய்த்துக் கொள்வது வாடிக்கை.

சாரு, பல பேருக்குப் பெரும் பிரச்னையாகி இருந்து வந்த திருமண விஷயத்தைத் தானே தீர்த்துவிடத் தீர்மானித்துவிட்டதாகக் காட்டுவதுபோல, டாக்டர் இரகுராமன் போட்டோவைத் தன் மேஜைமீது வைத்து 'ஜரிகை' மாலை போட்டு மகிழ்ந்தாள்.

ஆறு கிராமங்களிலே அரிய சேவை! பதினெட்டுத் திருக்குளங்களிலே பாசி எடுத்து, படிக்கட்டுகளைச் சுத்தம் செய்து இலட்சோப லட்சம் ஜனங்களுக்குச் சௌகரியம்! ஓலைக் கொத்து குடிசைகளில் இருந்துகொண்டு, சுத்தமாக சுகாதார முறைப்படி வாழத் தெரியாமல், மௌடிகத்திலே மூழ்கிக் கிடந்த ஜனங்களுக்கு இதோபதேசம்! கிராமத்துக் குழந்தைகளுக்குக் கோலாட்டம் டான்சு ஆகியவைகளைக் கற்றுக் கொடுத்து பல கிராமங்களிலே ஆனந்தமான பொழுது போக்கு ஏற்பாடு செய்து தந்த பெருமை! இவ்வளவும் சாதித்தது யாருன்னு எண்ணிண்டிருக்கிறீர். இதோ, சாட்சாத் ஜானகி போல, டாக்டர் இரகுராமன் பக்கத்தில்அமர்ந்திருக்கும் சாருபாலாதான் என்று சப்ஜட்ஜ் சபேச சாஸ்திரிகள் திருமண வாழ்த்து வைபவத்திலே கூறியபோது, 'கர கோஷம்' பலமாக எழும்பிற்று. திருமணம் அந்த வட்டாரத்து மக்களுக்கே கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது! கவர்னரின் வாழ்த்துச் செய்தியைக் கலெக்டர் படித்தார்! வியாபாரிகள் அனைவரும், வரிசை வரிசையாக நின்று, திருமணப் பரிசுகள் வழங்கினார்கள். வெள்ளியால் செய்து தங்கமுலாம் பூசப்பட்ட குடிசை, ஏர் கலப்பை, பரிசளித்துப் பாராட்டுதலைப் பெற்றார், பாரதசேவா சமாஜப் பரிபாலகர் பிராணதார்த்தி. நடனம்— சங்கீதம்— பொய்க்கால் குதிரை ஆட்டம் பள்ளிச் சிறுமிகள் கோலாட்டம் என்று வைபவம் பிரமாதமாக இருந்தது.

ஓரோர் சமயம்தானே இப்படிப்பட்ட உல்லாசக் காட்சியைக் காண முடிகிறது! அதோ கொடி போன்றிருக்கும் அந்தப் புது மணப்பெண்ணின் கூந்தலைக் கோதி நிற்கும் குமா

ரன் எவ்வளவு இன்பமாகப் பேசுகிறான. அவள் எவ்வளவு மயக்கும் பார்வையை வீசுகிறாள். தனியாகத்தானே இருக்கிறோம் என்று அந்த இளங்காதலர்கள், இப்படி விளையாடுகிறார்களோ! அடே, அடே! எத்தனை தடவைதான் அந்த எழிலரசியை இழுத்திழுத்து மடியில் சாய்த்துக் கொள்வது? கொஞ்சம்கூட உனக்கு இரக்கம் காணோமே. அப்பப்பா! போதும்! போதும்! என்று அந்தப் பாவை கூறக் கூற, 'உஹூம்! உஹூம்!' என்று கொஞ்சிக் கொஞ்சி அந்தக் கோவ்வை இதழைக் கொத்துகிறானே, இந்தக் கொடியவன்! அட பாதகா! இப்படியா இந்த இளமங்கையை இறுகத் தழுவிக் கொள்வது? மூச்சுவிட முடியாமல் திணறுகிறாளே அந்த மோகனாங்கி! பைத்யக்காரப் பெண்ணே! அவன் உன்னை இந்தப் பாடு படுத்துகிறான்; நீ கலகலவெனச் சிரிக்கிறாயே! பேதைப் பெண்ணே! ஆம்! அதுதான் சரி... கண்களை மூடிக் கொண்டாயா...நல்லது...உறங்கு...மெல்ல மெல்ல உறங்கு ...இன்ப நினைவுகள் உனக்குத் தாலாட்டாக அமைந்து விட்ட நிலையல்லவா! இனி உறங்கு...அட, வெட்கமற்றவனே! என்னடா இது. அவளுடைய பாதத்தை வருடுகிறாயே! செச்சே! ஆண் சிங்கம்! வீட்டின் தலைவன்! என்றெல்லாம் பெருமை பேசுகிறார்கள். இங்கு என்னடா என்றால், இவன், அவள் பணிக்கா முன்பு பாதம் வருடுகிறான்— பளிங்காலான பதுமைக்கு தங்கத் தகடு உடுத்தி வைத்திருக்கிறது என்று சொல்லும்படி இருக்கிறது இந்தக் காட்சி! இந்த வாலிபன், கைதேர்ந்த சிற்பி; தான் சமைத்த சிற்பத்தின் கலை அழகை இங்கும், அங்கும், எங்கும், கன்னத்திலும் நெற்றியிலும், கதலித் தொடையிலும், மின்னல் இடையிலும் கண்டு கண்டு பெருமிதம் கொள்வது போலல்லவா இருக்கிறான்! டாக்டராமே இவன்! உடற்கூறு தெரிந்தவன்! நோய்க்கு மருந்தளிக்க வேண்டியவன், இதோ நோயூட்டுகிறான்! என்று கூறி ரசித்திடுவதுபோல, வெண்ணிலவு காட்சி அளித்தது. டாக்டர் இரகுராமன், அண்ணாந்து பார்த்தல்ல, மடியில் சாய்த்தும், பக்கத்திலே இருத்தியும், வெண்ணிலவு கண்டான்—அந்த நிலவை மறைத்திடும் கார் நிறக் கூந்தலை அவ்வப் பொழுது அப்புறம் தள்ளியபடி,

களங்கமில்லாத முகநிலவு கண்டு, ஏதோ பேசுகிறான்—என்னென்னமோ கேட்கிறான் -எதை எதையோ தருகிறேன் என்கிறான். அவள் புன்னகை பூத்த முகத்துடன், 'முடியாது! முடியாது!' என்று கூறுவதுபோலத் தலையை அசைக்கிறாள். அவனோ, அவள் மனம் பாகாய் உருகத்தக்க ஒரு பரிதாபப் பார்வையால் அவளை ஒரு கணத்திலே வெல்கிறான்!

நாள்தோறும் களம்— இன்று சாரு, நாளை இரகுராமன், வெற்றி பெறுவது என்று இருக்கிறது, காமக் களியாட்டக் களத்தில். நித்த நித்தம் இந்தக் காதலரின் இன்ப விளையாட்டைக் கண்டு கண்டு மெலிந்து மெலிந்து நிலவும் தேய்ந்தது! நிலவு தேய்ந்தால் என்ன! அவன்தான் அவனுக்கென்று ஒரு முழு நிலவு பெற்றுவிட்டானே! அவன் அந்தக் குளிர் மதிப் பார்வையில் தன்னை மறந்திருந்தான். கட்டழகி கிடைத்துவிட்டாளென்பதால் கடமையை அடியோடு மறந்து விட்டானே இவன் என்று கோபத்தால், கண்களை இறுக மூடிக் கொள்வது போன்ற நிலையை நிலவு அடைந்தது. வான விளக்கு அடியோடு அணைந்தது. இவன் இதயச் சுடரொளியோ கொழுந்துவிட்டெரிந்த வண்ணம் இருந்தது. சாருபாலா இரகுராமன் காதல் வாழ்க்கை அரும்பி, போதாகி, மலர்ந்தது.

"சாரு! இதென்ன வடு? என்று டாக்டர் இரகுராமன் கேட்டான்.

''ரொம்ப போக்கிரிதான் நீங்கள்! செய்வதைச் செய்து விட்டு கேலி வேறா செய்கிறீர்கள்'' என்று கோபித்துக்கொண்டாள் சாரு. கோபம் என்றால் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகம் என்று பொருள் அல்ல; இடம் தெரிகிறதல்லவா, அந்த இடத்துக் கோபம்!!

'கன்னம்! கன்னம்!' என்று அந்த அஞ்சுகம் அஞ்சி அஞ்சி சொல்லச் சொல்ல அந்த அக்ரமக்காரன் கொஞ்சிப் பேசிப் பேசி, 'வடு' உண்டாக்கி விட்டிருந்தான் முன்னிரவு! மறுநாள் மாலை! அவனே, ஏதுமறியாதவன் போல இந்த வடு ஏன் ஏற்பட்டது என்று கேட்டால், கோபம் வராமலா இருக்கும்.

அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டபோது தான் டாக்டர் இரகுராமனுக்கு, அந்த நினைவு வந்தது. அவன் கேட்டது, அவள் தலை 'வகுட்டில்' இருந்த ஒரு சிறு 'வடு'வைப் பற்றி! அதை அவள் பிறகு விளக்கினாள்!

''இதுவா! சமூக சேவையின் பரிசு.''

''பரிசா?''

''ஆமாம்! ஏழூரில், ஒரு குடிசையின் மேற்கூரையைத் தாங்கிக் கொண்டிருந்த இடத்தின் சுவர் கலனாகிக் கிடந்தது—அந்த 'அப்பாவி' அதைக் கவனிக்காமல் இருந்தான். நான்தான் அதைக் கண்டுபிடித்து, புதிதாகச் 'சாந்து' பூசினேன்—அப்போது, ஒரு மரக்கட்டை தலையில் பட்டது. அந்த 'வடு'தான்—சமூக சேவையின்போது கிடைத்த பரிசு' என்று சாரு சொன்னாள்.

''இரத்தம் நிரம்பக் கசிந்ததா சாரு! இந்த வேலையெல்லாம் ரொம்ப ஜாக்ரதையாகச் செய்ய வேண்டும். மடையன், உன் தலையில் 'கட்டை' விழுந்தபோது சும்மாவா இருந்தான்?'' என்று கேட்டார் டாக்டர்.

''சார், சார்!'' என்ற குரல் கேட்டது. கம்பவுண்டர் குண்டப்பன் எப்போதும் இப்படித்தான், 'சிவபூஜைக்கரடி' என்று மனதிலே எண்ணிக் கொண்டு, டாக்டர் இரகுராமன், கீழே சென்றான்.

''சாமியோய்! ஒரே கொழந்தைதாங்க...கொலக் கொடி...தவமாத்தவம்ருந்து பெத்ததுங்க...இந்த அநியாயத்தைப் பாருங்க சாமி...என் வயித்திலே பால் வாருங்க டாக்டர்...''என்று அழுது கொண்டே கூறினான், பட்டிக்காட்டான்—அவன் அங்கொரு பெஞ்சில் படுக்கவைத்திருந்த நாலு வயதுக் குழந்தையின் மண்டை நொறுங்கி, இரத்தம் குழைந்து கொண்டிருந்தது; ஆபத்தான நிலைமை.

டாக்டர் இரகுராமன் குழந்தையின் கோரமான நிலைமையைக் கண்டு, உள்ளபடி பச்சாதாபப்பட்டான். கம்பவுண்

டர், குழந்தைக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைக்குத் தேவையான ஏற்பாடுகளில் ஈடுபட்டான்.

''ஏன் இப்படி? என்ன நடந்தது?''

''கொழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்ததுங்க டாக்டர்! என் போறாத வேளை, கூரைப்பக்கமிருந்து, சுவர் வெடித்து ஒரு பாளம் விழுந்தது, கொழந்தை தலைமீது.''

''மடையாகளாடா நீங்கள்! பாளம் விழும்போது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''பால் கறந்து கொண்டிருந்தேன் டாக்டர்! கொழந்தை 'கோன்'னு கூச்சல் போட்டதும் தோட்டத்திலே இருந்து ஓடி வந்தா; கொழந்தை இந்தக் கோரமாக இருந்தது; அவ என் வூட்டுக்காரி வெளியே போயிருந்தா...''

''சுவர் எப்படிடா வெடித்து பாளம் விழுந்தது...ஏன் அப்படிப்பட்ட ஆபத்தான நிலையிலே சுவர் இருக்கவிட்டு வைத்தே...''

''அதை ஏன் டாக்டர் கேட்கறிங்க. என்னமோ வீடு ரிப்பேர் செய்கிறோம், காசு செலவில்லாமேன்னு சொல்லிகிட்டு வந்தாங்க, பட்டணத்துப் பொம்பளைங்க. வேண்டாமா, எங்களுக்குக் காசு கிடைச்சா, நாங்களே செய்துகிடுவோம்; எங்களுக்குத்தான் எப்படிச் செய்யறதுன்னு தெரியும். நீங்க அதை எல்லாம் என்னத்தைக் கண்டிங்கன்னு, எவ்வளவோ எடுத்துச் சொன்னேனுங்க. ஒரு துடுக்குக்காரப் பொண்ணு, 'டே! நாங்க உதவி செய்ய வந்தா தடுக்கறயா நீ? நாங்க எல்லாம் யார் தெரியுமா? சர்க்காரோட ஆளுங்க! சம்பளம் வாங்காம வேலை செய்கிறவங்க! எங்களைத் தடுத்தே, அவ்வளவுதான். உன்னைப் போலீசிலே சொல்லி தண்டனை வாங்கித் தருவோம்'னு மிரட்டிச்சி. உங்களுக்கு ஏம்மா இந்த வேலையெல்லாம்! உங்களோட பங்களா, தோட்டம், காடு, கழனி இங்கெல்லாம் வேலை செய்யறதுக்கே, எங்களாட்டம் ஆளுங்கதானே தேவைப்படுது. நீங்க என்னமோ, கொல்லன் தெருவிலே ஊசி விக்கிற மாதிரி, எங்க

இடத்திலே எங்க வேலையைச் செய்ய வருகிறீங்க. நல்லா இல்லேம்மான்னு நல்லதனமாச் சொன்னேன். அதட்டிப் பேசின பொண்ணு, உடனே சிரிச்சுப் பேச ஆரம்பிச்சு, ''பெரியவரே! நாங்க எப்படியும் முப்பது குடிசையைச் சீர் திருத்தம் செய்தாகணும். எங்க சங்கத்தோட திட்டம் அது. தடை சொல்லாதே''ன்னு கேட்டுகிட்டு, சேறு கொண்டா, சுண்ணாம்பு எடு, கல் எடு, அப்படி இப்படின்னு சொல்லி, நல்லா இருந்த சுவரைச் 'சாந்து' பூசறேன்னு சொல்லி, கெடுத்துவைத்துட்டுதுங்க; நாலு நாளைக்கு முன்னே மழை வந்ததுங்களா, அவ்வளவுதான்! பூச்சு வேலை கரைஞ்சு போச்சு;பாளம் விழுந்து என் கொழந்தை இந்தக் கதியாச்சி'' என்றான். கம்பவுண்டர், டாக்டரைத் தனியாக அழைத்து, ஏதோ இரகசியமாகச் சொன்னான். டாக்டர் முகத்தில் ஈயாட வில்லை. கம்பவுண்டர், கிராமத்தானைப் பார்த்து, ''குழந் தையை பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ! இங்கே ஒண் ணும் செய்வதற்கில்லை'' என்று கூறிவிட்டான். 'ஐயோ தெய்வமே!' என்று அலறியபடி, குழந்தையை வாரி எடுத் தான் கிராமத்தான்; வாழைத்தண்டு போல ஜில்லிட்டுக் கிடந்தது.

★

# 9
# சொர்க்கத்தில் நரகம்

“என்ன பிழைப்படி இது, என்ன பிழைப்பு! எழிலும் இளமையும் இருந்தென்ன, ஆடல் பாடல் அறிந்தென்ன! அடிமை வாழ்வுதானே—சச்சே! என்னென்ன இழிசெயலுக்கு உடன்பட வேண்டியிருக்கிறது. உடன்படுவதா? துரத்தப்படுகிறோம்! இந்தக் கேவலமான நிலைமையைப் பெறவா தவமாய்த் தவமிருந்து தேவமாதரானோம். எனக்கு வரவர, ரம்பா! இந்த விண்ணுலக வாழ்வு வேம்பாகி வருகிறதடி” என்று திலோத்தமை கூறினாள்-கண்களில் நீர் துளிர்த்தது.

“வேம்பு என்கிறாயடி திலோத்தமா, எனக்கு இந்த வாழ்வு எட்டியாகி விட்டது. பட்டியில் யாடுகளைப் பார்த்திருக்கிறோம், அவைகளுக்கு உடலிலேதான் புண்; பசும் பொன்மேனி நமக்கு. ஆனால் உள்ளத்திலேயோ ஓராயிரம் புண். அப்பப்பா! எவ்வளவு இழிநிலைக்கு ஓரோர் சமயம் ஆளாக நேரிடுகிறது. எப்படிப்பட்ட காமாந்தகாரத்துக்கு உடந்தையாக நேரிடுகிறது. திலோ! நம்மைத் தீயிலே தள்ளி விட்டாலும் பரவாயில்லை;கருகித்தான் போவோம். ஆனால் பிறரைத் தீயில் தள்ளும் வேலையை அல்லவா நமக்குத் தருகிறார்கள்!” என்று ரம்பை கூறிக் கொண்டிருக்கும்போது, தொலைவில் மேனகை வந்துகொண்டிருக்கக் கண்டு, “பார்த்தாயா! மேனகா வருகிறாள்; எவ்வளவு ஆயாசத்தோடு வருகிறாள், பார்! பாபம், என்ன காரியமாகப் போய்வருகிறாளோ? எத்தகைய இன்னலுக்கு ஆளானாளோ?” என்று பச்சாதாபத்துடன் கூறினாள். மேனகாவும் அவர்கள் அமர்ந்திருந்த பளிங்காலான படிக்கட்டில்வந்து உட்கார்ந்து, முகத்திலே முத்து முத்தாகத் துளிர்த்துக் கொண்டிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

விண்ணுலகத்துத் தருக்கள் யாங்கள் என்று கர்வம் கொண்டிருப்பதுபோல தேவதாரு மரங்கள் ஓங்கி வளர்ந் திருந்தன. எம்முடன் அடிக்கடி வானவில் போட்டியிட்டுத் தோற்று மறைவது வாடிக்கை என்று கூறுவது போலப் பல வண்ணப்பூக்கள் நிரம்பிக் கிடந்ததோர் பொழில். குழலும் யாழும் என்ன இனிமையைத் தரமுடியுமோ அதை இதோ நாங்கள் தருகிறோம், கேண்மின் என்று கூறுவதுபோல சிற் றாறு ஓடிக்கொண்டிருந்தது. எங்கும் மணம்—விழாக்கோலம்! பாசிபடராத, தூசு விழுந்தால் தெரிந்துவிடத்தக்க தெளிந்த நீர்கொண்ட தடாகம். 'ஸ்படிகக்' கண்ணாடியில் தமது முக ''இலாவண்யததை'' கண்டு களித்திடும் காரிகையர்போல மலர் சுமந்து கிடந்த தருக்கள் தமது வனப்பைக் கண்டு மகிழ்வதற்காகவே இந்தத் தடாகம் ஏற்பட்டது என்றுகூடக் கூறலாம். அந்தத் தடாகத்துப் படிக்கட்டுகளில் அமர்ந்து ஓரோர் சமயம் தேவலோக மாதர் பொழுது போக்குவர். இதை அறிந்து, தமக்கு எத்தகைய விருந்து வேண்டும் என்று தேர்ந்தெடுக்க அங்கு மாலைப் போதினில் தேவர்கள் 'அலங் கார புருஷர்களாக' உலவ வருவர், இங்கு அமர்ந்திருக்கும் போது, தேவமாதர் தத்தமது அல்லல், அனுபவம பற்றிப் பேசிப் பேசித் தமது ஆயாசத்தைப் போக்கிக் கொள்வர் போலும். அவர்களுக்கு என்ன தொல்லை நேரிட முடியும்? தாங்க முடியாத குடும்ப பாரமா? தொட்டுத் தாலி கட்டின வன் விட்டுப் பிரிந்ததால் வந்துற்ற துயரமா? தொட்டதெல் லாம் தங்கமாகும்; அவ்வளவு பாக்யவான் இவன் என்று ஜோதிடரும் தரகரும் கூறியதால், மணமகனாக்கப்பட்ட வன், வெறும் மண்ணாங்கட்டி என்பது, போகப் போகத் தெரிந்தால் புலம்பிக் கிடக்கும் பூலோகத்துப் பூவையர் போலவா தேவ மாதரின் நிலை இருக்கும்? அவர்களுக்கென்ன குறை? இந்திர சபையில் நடனம், சந்திரனின் சல்லாபம், அக்கினியே ஓடைக்குளிர் மதிப்பார்வை காட்டுவான்! உண்ண அமுதம், உடுத்திட தேவலோசப் பட்டாடைகள்! நடந்திடும் பாதையோ மலர் தூவியன! இவர்களின் போக போக்கியத் துக்கு என்ன குறை?எனறுதான் எவரும் எண்ணுவர். ஆனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்—இதயக் குமுறலைத் தரத்

தக்கது என்பது அவர்கள் பளிங்காலான படிக்கட்டுகளில் அமர்ந்து பேசும்போதுதான் தெரிந்து கொள்ள முடிந்தது.

தேவமாதர்களின் முகத்திலே ஒரு துளியும் கவலையின் கீறல்கள் தெரியக் காணோம். உள்ளத்தில் ஓராயிரம் சோகக் கதைகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்று கண்டறிய முடியவில்லை: அவர்கள் இருளுக்கு ஒளி ஊட்டும் பேரழகுடன் காணப்பட்டனர். பூலோகத்திலல்லவா, தங்கம் நாலாறு ஆண்டுகளில் பித்தளையாகிப் போகிற நிலைமை!

''கனகாவா? நிஜமாகவா? அட பாவமே! மான் குட்டி போலத் துள்ளி ஓடுவாளே! பழத்தோட்டங்களிலே புகுந்து அவள் ஆடிடும் ஆட்டம் கொஞ்சமா? சிறிதும் பயமறியாதவளாயிற்றே! யாரையும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி விடுவாள்; கோபம் கொண்டு தாக்க வந்தாலோ ஒரே புன்னகையால் அவர்களை வென்றுவிடுவாளே! எவ்வளவு கவர்ச்சிகரமான கண்கள்! குவிந்து சிவந்து இருந்த அந்த அதரத்தை, கொவ்வை என்றெண்ணிக்கொண்டு கிளிகள் கொத்த வருமே! அந்தக் கனகாவா இது? தலையில் நரை! முகத்தில் கவலைக் கோடுகள்! கண்ணொளி எங்கேயோ போயேவிட்டது. அந்த அதரம்? அடடா, இப்படியா சுக்காகிக் கிடக்க வேண்டும். கலகலப்பான பேச்சு காணோம். பேசத் தொடங்கும்போதே பெருமூச்சும் கிளம்பிவிடுகிறது. நடையிலே ஓர் தளர்ச்சி! பாபம்! பரிதாபம்! இத்தனைக்கும் இப்போது வயது என்ன ஆகிவிட்டிருக்கும்? முப்பது அல்லது முப்பத்தி இரண்டுதானே இருக்க முடியும். இதற்குள்ளாகவா இந்த ''ஔவையார் கோலம்'' என்று பேசும் இடம் பூலோகம். இவர்களுக்கு என்ன! இன்பவல்லிகள்!! எனினும் அன்று அவர்கள் ஆயாசத்துடன் பேசினர். ரம்பை,மேனகாவின் கன்னத்தில் காணப்பட்ட 'வடுக்களை'க் காட்டினாள் திலோத்தமையிடம். ''பாவம்!'' என்று பரிதாபம் தெரிவித்தாள் திலோத்தமா.

''மேனகா! அலங்கோலமாக இருக்கிறாயே கண்ணே! நெடுந்தூரம் போய் வந்தாயோ!'' என்று திலோத்தமா கேட்டாள்.

''நெடுந்தூரமா!'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் மேனகா—சந்தோஷத்தால் அல்ல, வெறுப்புணர்ச்சியுடன. ''நான் சென்ற தூரம் கிடக்கட்டும், திலோத்தமா! பட்ட கஷ்டம் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''உனக்கு இடப்பட்ட கட்டளை யாதோ?'' என்றாள் ரம்பை.

''கட்டளையா? ஏண்டி பைத்யமே! அறிவு புகட்டு, அன்பு போதனைசெய், ஆண்டவனின் கலியாண குணங்களை அறிந்திடும் வழியைக் கூறு, எனறா நமக்குக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது? பாபத்துக்குச் சம்மதிக்கச் செய்ய வேண்டும், காமப்படுகுழியில் தள்ள வேண்டும், மோகலா கிரியை ஊட்டவேண்டும், கடுந்தவம் புரிவோனைக் காமுக னாக்க வேண்டும், தவமபல புரிந்து, அற்புதம் பல நடாத் தும் ஆற்றல் பெற்றவனை, நாம் பம்பரமாக ஆட்டிப் படைக்க வேண்டும், ஓமத்தீ கொழுந்துவிட்டெரியக் கண்டு களி கொள்ளும முனிவருடைய உள்ளத்தில் காமத்தீயை மூட்டிட வேண்டும்! நமக்கு இடப்படும கட்டளை இதுதா னேடி. நாமென்ன, நற்குணத்தைத் தரும் பணியைப்புரியவா இங்கு அமர்ந்திருக்கிறோம்! வேடன் கரத்திலே இருக்கும் அமபு, மாடப்புறாவையோ, மான் குட்டியையோ சாகடிக் கத்தானே பயனபடுகிறது! அரும்பை மலராக்கவா? அது போலத்தானே நாம் இருக்கிறோம்'' என்று கோபமும், ஆயாசமும் கலந்த குரலில் மேனகை பேசினாள்.

''ரம்பாவிடம், நான் இப்போது இதையேதான் சொல் லிக் கொண்டிருந்தேன். வரவர இந்தப் பிழைப்பு எனக்குத் துளியும் பிடிக்கவில்லை. பூலோகத்திலே நாம் காண்கிறோம். அவர்கள் பொற்கொடிகளாக இல்லாதிருக்கலாம்; ஆனால் எவ்வளவு கண்ணியமாக வாழ்கிறார்கள். காதலை அவர்கள் தானே, பெறுகிறார்கள்! எட்டுத் திக்கும் வெற்றிக் கொடி நாட்டியவனாயினும், அவனுடைய இன்பவல்லியிடம், பார்த்தனையோ, குழந்தை போலாகிக் கொஞ்சுவதை. மேனகா! அவர்களுக்கு ஆயிரத்தெட்டு அல்லல் இருக்கிறது— எனினும் எதனையும் போக்கிடும் 'காதல்' மாமருந்தாகிறது.

நாமும் இருக்கிறோமே, மாதர்களாக...அதிலும் தேவமாதர் களாக! பாரிஜாதம் சூடுகிறோம்; பரிமளகந்தம் பூசுகிறோம்; பூலோகத்தாருக்குக் கிட்டாத பட்டாடையும் பல்வேறு அணிகளும் உள்ளன; பூங்கொடி போலாடுகிறோம்; புள்ளி னம் போலப் பாடுகிறோம்; பூம்பொழில்கள் உள்ளன உலவி மகிழ! எனினும், உள்ளத்திலே உயர்ந்த எண்ணம் மலர வழி இருக்கிறதா? உலகோருக்கு உயர்நெறி பற்றி எடுத்துக் கூறும் வாய்ப்பு கிடைக்கிறதா? கட்டி முத்தமிடு! தழுவித் தாசனாக்கு! கடைகாட்டு, இடை ஆட்டு! காலில் விழச் செய்! காமக் குழியில் தள்ளு! வெட்டிப் பேசுவான்; எட்டிப் போய்விடாதே! பொறி பறக்கும் அவன் கண்களில், புன் னகை பூத்திடட்டும் இதழில்! கோபப்பார்வை கண்டு அச்சம் கொள்ளாதே! மோகவலை வீசிப் பிடித்திடு! தவம்! தவம்! என்று எண்ணிக் கிடப்பவனை, பெண்களைத் தேடுவதும், நாடுவதும் பாவம் என்று நினைத்துக் கிடப்பவனை, மலரடி வருடிடும் நிலைக்குக் கொண்டுவா! வேத ஒலி கிளப்பிக் கொண்டிருப்பானவன், உன் சாகசத்தால், 'மணியே! மானே! மரகதமே!' என்று உன்னை அர்ச்சிக்க வேண்டும். அந்த வகை யில் அவனை அடிமையாக்கிவிட வேண்டும். என்ன செய் வாயோ தெரியாது. அவன் ரசனை அறியாத காட்டானாக இருக்கலாம்; அனுபவித்தறியாத அப்பாவியாக இருக்கலாம்; அல்லது ஆடி அலுத்துப் போனவனாக இருக்கலாம்; நீ சிரித் துப் பேசி மயக்குவாயோ, சிந்துபாடி உருக வைப்பாயோ, நாட்டியமாடி வெற்றி கொள்வாயோ, அருகே சென்று ஆரத் தழுவி அதர அமுதளித்து அடிமையாக்குவாயோ, எனக்குத் தெரியாது; அவன் தவக்கோலம் கலைந்திட வேண்டும்— யோக தண்டத்தை வீசி எறிந்துவிட்டு அவன் போக பூமியில் புரள வேண்டும். போ! போ! புனிதன், பூஜ்யன் என்று புக ழப்படுகிறான், அவன், காமுகனாக வேண்டும்—இதைச் சாதிக்க, எத்தகைய முறை தேவையோ அதை உன் யுக்தம் போலக் கையாண்டு வெற்றி பெற்ற பிறகே, இங்கு நீ வருதல் வேண்டும். ஆபத்து வருமோ என்று அஞ்சாதே! சாபம் கொடுப்பானோ என்றெண்ணிச் சஞ்சலப் படாதே. அவ னைப் பாபியாக்கிட உன் பருவ கருவ மிகுந்த அங்கம்,

காதல் பொங்கும் இடைக்கலங்களாகட்டும். களத்திலே நின்று நீ உன் கண்ணம்பை ஏவினால் தவக்கோலம் கலைந்து போகும். உனக்கென்ன இது தெரியாதா!! இன்று நேற்றா, நீ இந்தக்காரியததில் ஈடுபடுகிறாய்.கல்லுருவம்கூட உருகிடத் தக்க வகையில் சாகசம் புரியும் சல்லாபி அல்லவா நீ. உன்னிடம் எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. சென்று வா, வென்றுவா! என்றுதானே நமக்கு இங்கு கட்டளை பிறக்கிறது. இதுதான் நமது வாழ்வு என்று தெரிந்திருந்தால், ரம்பா! ஆண்டவன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; நான் இங்குவரச் சம்மதித்து இருக்கவே மாட்டேன்.'' என்றாள் திலோத்தமா.

''நமது வேதனை யாருக்குத் தெரியப் போகிறது. கிடக்கட்டும், நாம் செய்த தீவினை இது. என்ன செய்யலாம். இப்போது என்ன காரியமாகச் சென்று வந்தாய்? அதைச் சொல்லு!'' என்று ரம்பை கேட்டாள். திலோத்தமா, மேனகையை அருகே அழைத்து அணைத்துக் கொண்டு, ரம்பையிடம் ''போடி போக்கிரிச் சிறுக்கி! பார்த்தாலே தெரியவில்லையா, அவள் பட்டபாடு! கிளறிக் கிளறிக் கேட்கிறாயே! கிளியே! நீ வருத்தப்படாதே'' என்று கூறினாள்.

''திலோத்தமா! மலரினைப் பறிப்பதற்கும் கசக்கி எறிவதற்கும் உள்ள வித்தியாசத்தைக் கூடவா இந்தப் பெரிய ஞானி அறியாதிருப்பான் என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் அவன் நாலு வேதத்தையும் ஆறு சாஸ்திரத்தையும் படித்துப் படித்துத் தடித்துப் போன உள்ளத்தினனாகிக் கிடந்தான். தங்கமே! தங்கமே! என்றுதான் கொஞ்சினான். ஆனால், இரும்பாலான சிலை என்று எண்ணிக் கொண்டல்லவா தழுவினான். இதழ், மலராம், எனக்கு! மலரை எப்படிப் பக்குவமாக, இலாவகமாகப் பறித்து நுகர வேண்டும் என்றாவது அறிந்திருந்தானா! அப்பப்பா! அவனிடம் சிக்கிச் சீரழிந்தேன். தாயுமானேன், தெரியுமா?'' என்றாள்.

''அடி, அழகுராணி! தாய் ஆகிவிட்டாயா? கேளடி, ரம்பா! மேனகா, தாயாகி விட்டாளாம். குழந்தை எங்கேயடி கோமளமே! என்ன குழந்தை? ஆணா, பெண்ணா? அழ

காகத்தானே இருந்தது? ஒரு முகமா ஆறு ஏழா? பிறந்ததும் பாடிற்றா, ஓடிற்றா? சொல்லடி சொர்ணபிம்பமே!சொல்லு. எங்கே, குழந்தை?'' என்று ஆவலுடன் கேட்டாள் திலோத்தமா.

''அழகான பெண் குழந்தை! அடவியிலேயே விட்டு விட்டேன்'' என்று சோகமாகக் கூறினாள் மேனகா.

''அடவியிலா? அரண்மனையிலா?'' என்று கேட்டாள் ரம்பை.

'அடவியடி அடவி! என் இன்பப் பெருக்கு, அன்புக் குழவி, கானகத்திலேதான்! வேறென்ன செய்வேன்! எனக்கு இடப்பட்ட கட்டளை விசுவாமித்திரனுடைய தவத்தைக் கெடுக்க வேண்டும் என்பதாகும். அவனே முன்கோபியாம்! முரடனாகவும் இருந்தான்!கடுந்தவம் இயற்றிக் கொண்டிருந் தவன் மீது காமக் கணைகளை வீச நான் கால் கடுக்குமளவு ஆடினேன்; கண் திறந்தான். சாபமிட வாய் திறந்தான்— என்னைக் கண்டான், கோபம் மடிந்தது, காமம் கொப்பளித் தது. பசும் புற்றரை மஞ்சமாயிற்று. கிளியும் நாகண வாய்ப் புள்ளும் சுபசோபனம் பாடிட, மான் கூட்டம் நடனமாட, எங்கள் மதனவிழா இனிது நிறைவேறிற்று—இனிது என் பது அவர் நிலை—நான்?—தாயானேன்—பெண் குழந்தை'' என்று விவரித்தாள் மேனகா.

''பாரடி ரம்பா! பரமனை வேண்டி அந்த முனிவன் எத்தனையோ காலமாகத் தவங்கிடக்கிறான். நீரில் நின்றி ருப்பான், நெருப்பில் அமர்ந்திருப்பான், ஊசி முனையில் தவமிருந்திருப்பான், காற்றைத் தவிர வேறெதுவும் புசி யேன் என்று கூறி கடுந்தவம் புரிந்திருப்பான். வகை வகை யான யாகங்களைச் செய்திருப்பான். எனினும் வரம் கிடைக் வில்லை. மேனகையைப் பார்! திவ்ய தரிசனம் தந்தாள், வரமும் கொடுத்தாள்'' என்றாள் திலோத்தமா.

''வாரி அணைத்துக் கொண்டு உச்சிமோந்து முத்த மிட்டு, கானகத்தில் கிடைத்த கட்டழகி பெற்றெடுத்த கனி யமுதே! காவியக் கர்த்தாக்களுக்கும் ஓவிய வித்தகர்களுக்கும்

களிப்பூட்டிக் கற்பனையைச் சுரக்க வைக்கும் கலைவடிவே! என் தவத்தின் பலனே! ஓம குண்டத்தருகே கிளம்பிய, வேத ஒலியை உன் வடிவெடுத்து வந்ததோ, என்னை வாழ்விக்க! நிரந்தர இன்பத்தை நாடினேன், நிர்மலனைத் தேடினேன், அதைப் பெற! அது இருக்குமிடம் விண்ணுலகம் என்றெண்ணி அண்ணாந்து பார்த்துப் பார்த்து அலுத்துப் போனேன். சர்வலோக இரட்சகன், என் தவத்துக்கு மெச்சி, 'வரம்' உன் வடிவில் அருளி இருக்கிறார்! அழகொழுகும் குழந்தாய்! அடவியில் நான் பெற்ற அருஞ்செல்வமே!'' என்றெல்லாம் விசுவாமித்திரர் குழந்தையிடம் கொஞ்சியிருப்பார்'' என்றாள் ரம்பை. குறும்பாக அல்ல—குதூகலத்துடன்தான். மேனகையின் கன்னத்திலே கண்ணீர் புரண்டது. ''காட்டு வாசத்தால் கல்மனமாகிவிட்ட அந்தக் காதகன், 'காமுகனாகிவிட்டேனே; கடுந்தவம் கலைந்ததே! கடவுள் சன்னிதானத்துக்கு இந்தக் கறைபடிந்த நிலையில் எங்ஙனம் செல்ல முடியும்' என்று கூறிவிட்டு, என் செல்வத்தை, அவனுடைய காதல் விளையாட்டில் கனிந்த இன்பத்திருவைத் தொடவும் மறுத்தானடி! அதே காட்டிலே புலி, குட்டிகளுடன் விளையாடுகிறது. பாம்புப் பிலத்திலே பாசம் இருக்கிறது! பரமபதம் தேடும் அந்தப் பாபிக்கு, பெற்றெடுத்த குழந்தையிடம் அன்பு சுரக்கவில்லை. என் அழகைக் கண்டதும், தவம் கலைந்தது—இன்பம் பெற்றானதும் மீண்டும் தவத்தின்மீது நினைவு சென்றது! என்ன விந்தையான மனமடி இது. கள்ளன், வழிமறித்து அடித்துப் பொருளைப் பறித்துக் கொண்டான பிறகு, கடுகிச் செல்கிறானே, அதுபோலவே என்னிடம் பெறவேண்டியதைப் பெற்றுக் கொண்டான். பிறகு, கற்ற வேதத்தைக் கவனத்துக்குக் கொண்டு வந்தான்; கண்களை இறுக மூடிக் கொண்டான். தேவமாதல்லவோ நான்! இங்கு குழந்தைகளைக் கொண்டு வருதல் முறையல்ல என்பதை அறியீரா? என்று கேட்டேன்—பூலோகத்தில் இவள் ஓர் புவனசுந்தரி யாவாள். பூஜிதரே! கையிலேந்திப் பாரும்! கண்ணழகு பாரும்! கருநீலமலர் பாரும்! கட்டித் தங்கம், குழந்தை வடிவெடுத்திருக்கிறது! என்று பாசத்தை ஊட்ட முயற்சித்தேன். பாறை மனம் கொண்டோனானான். உணர்ச்சிக்கே ஆட்படாதவனு

என்றால், சிறிது நேரத்துக்கு முன்புவரை, 'அன்னமே! சொர்ணமே! அமுதே! கனியே!' என்று இளித்துக் கிடந்தான். 'தங்கள் அந்தஸ்துக்கு இது அடுக்காது. வேண்டாம் அபசாரம், என்று நான் தடுத்தும், என் பாதம் வருடி, தேவலோகத்திலே பாதைகளில் மலர் தூவி வைக்கிறார்களல்லவா! இல்லையானால் இந்தப் பாதம் நொந்து போகுமே என்று பேசிக் காமம் கக்கினான். காரியம் முடிந்தானதும், 'கடுந்தவம் செய்வோன் நான். காரிகையே! என்ன காரியம் செய்தனை! என்ன காரியம் செய்தனை!' என்று கூறி மிரட்டலானான். என்ன செய்வது? கோழியும் அதன் குஞ்சுகளைக் கொத்த வல்லூறு வட்டமிடக் காணும்போது சீறுகிறது...போரிடவும் செய்கிறது. நான் என்ன செய்ய முடிந்தது? குழந்தையை, புலியும் பிறவும் உலவும் பெருங்காட்டிலே விட்டுவிட்டு வரவேண்டி இருக்கிறது!! என்று கூறி விம்மினாள் மேனகை.

''மேனகா, அழாதே! அந்தக் காட்டிலே, கண்மூடித் தவம் புரியும் தவசிகள் மட்டுமா? வேடர்கள் இருப்பார்கள், அவர்கள் குழந்தையிடம் அன்பு காட்டத் தவறமாட்டார்கள். குற்றம் அந்த முனிவன்மீதுகூட அல்லடி அம்மா! சுவையுள்ள கனி குலுங்கும் மரத்தைக் காண்பவன், ஏறிப் பறித்தோ கல்லால் அடித்தோ, பழத்தைப் பெறுகிறான்; உண்டு மகிழ்கிறான். ஒரு நொடிப் பொழுதில், சுவை தந்த தருவினை மறந்துவிடுகிறான். அதேதான், ஆடவர் போக்கு! அதிலும் நாம் சந்திக்கும் ஆடவரின் போக்கு!! அவர்கள் ஆண்டவனை சந்தித்து 'ஆனந்தம்' பெறும் பாதையில், !இடையில் நம்மைச் சந்திக்கிறார்கள், இன்பம் பெறுகிறார்கள், பிறகோ நம்மை நிராகரித்துவிடுகிறார்கள்...மீண்டும் புனிதப் பயணத்தைத் தொடங்கிவிடுகிறார்கள். நாம்? வீசியெறியப்பட்ட மலராகி விடுகிறோம். கசக்கிப் போடப்பட்ட கனியாகிறோம். நாம் இத்தகைய கொடுமைக்கு உட்பட்டுக் கிடப்பது மடமை. தேவலோகவாசம் தேவதேவனின் தரிசனம் என்ற மயக்கம் நம்மை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிடுகிறது. பூலோகத்தில் உள்ளவர்களுக்கு மூப்பு, பிணி, சாவு உண்டு...சாகாவரம் பெற்றவர்கள் நாங்கள்...இளமை மாறாது, அழகு

குன்றாது, நினைக்கும் வடிவம் எடுக்கவல்லோம், இந்த விநாடி விண்ணகத்திலிருப்போம், மறு விநாடி மண்ணுலகு செல்வோம். அவ்வளவு மகத்துவம் இருக்கிறது எங்களுக்கு என்று பூரித்துக் கிடக்கிறோமே, அதனால் வந்த வினை இது...எவனெவனுக்கோ பெண்டாகி, எவருடைய அன்பையும் நிரந்தரமாகப் பெற முடியாமல், கட்டித் தழுவிடும் காதலனையும் பெற்றெடுக்கும் செல்வத்தையும் கைவிட்டு விட்டு, இங்கு வந்து கண்ணீர் வடிக்கிறோம்; நாமாகத் தானே இந்த 'நரக' வாழ்வைப் பெற்றுக் கொள்கிறோம் சொர்க்கத்தில்! நமக்குச் சிறிதளவாவது சிந்தித்துச் செயலாற்றும் சக்தி இருந்தால், இந்த வாழ்க்கைக்குச் சம்மதித்திருப்போமா? சகித்துக் கொள்கிறோம்...சர்வேஸ்வரன் கட்டளை என்று எண்ணிச் சிரம் சாய்க்கிறோம்...'' என்று கூறிப் பெருமூச்செறிந்தாள் திலோத்தமை.

''கொண்டவளைக் கைவிடாதே, கண்டவளுடன் கூடி அழியாதே, காமுற்றுத் திரியாதே, கதியற்ற கன்னியரைக் கெடுத்திடாதே, போக போக்கியத்தில் புரளாதே'' என்றெல்லாம் எவ்வளவு அற்புதமான போதனைகள் தருகிறார்கள் பூலோகத்தில்—திலோத்தமா! ஒழுக்கம், குடும்ப வாழ்க்கை, பிறர்மனை நாடாமை, வஞ்சித்து ஒழுகாதிருத்தல் போன்ற அருங்குணங்களை அவர்கள் போற்றி வருகிறார்கள். ஒழுக்க நெறி தவறுவோனை இகழ்கிறார்கள்—தண்டிக்கிறார்கள். இப்படிச் சீலத்தோடு வாழ்கிற பூலோகம் வேண்டாமென்று, இங்கு வந்து காமச் சேற்றை தெய்வீகமாகக் கொண்டு உழல்கிறோம். இதை எண்ணும்போது, எனக்குத் திலோத்தமா! அழுவதா, சிரிப்பதா என்று தெரிவதில்லை. ஐயன் ஒழுக்கம் தவறுபவனை நரகத்தில் தள்ளுவான், என்று அங்கே பூலோகத்தில் உள்ள மக்கள் நம்புகிறார்கள்—அஞ்சுகிறார்கள்—பயபக்தியுடன் நடந்து கொள்கிறார்கள். கடவுளிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட தோழர்கள் நாங்கள் என்று கூறிவிடும் சிலர், ஒழுக்கக் குறைவையே தனிச் சிறப்பாகக் கொண்டு,ஐவர் ஒரு அழகியைக்கூடி மகிழ்கிறார்கள்.சாமான்யர்களோ, ஒழுக்கத்தை ஓம்பி வருகிறார்கள். அப்படிப்பட்ட

இடத்தை மட்டமானதென்று கூறிக்கொண்டு, அங்கு உள்ள வர்களிலே மிக மட்டரகமானவர்களும் செய்யக் கூசும் காரி யங்களை இங்கு செய்துகொண்டு, நாம் இருக்கிறோம். இதென்ன விந்தை!! நாம் பூலோகத்தை மட்டமானது என்று கூறுவது மட்டுமல்ல, பூலோகத்தில் தேவலோகம் மேலானது என்று போதிக்கப்பட்டு வருகிறது! அதுதான் எனக்கு வேடிக்கை கலந்த வேதனையாகப் படுகிறது,'' என்றாள் மேனகை.

''பூலோகத்திலே மகா உத்தமிகளாக, பதிசொற் கட வாப் பாவையராக, கணவன் பொருட்டு எத்தகைய கஷ்ட நஷ்டத்தையும் தாங்கிக் கொள்ளக் கூடிய காரிகையாக இருப் பினும், மேனகா! இங்கே, தேவலோகத்திலே ஒரு பத்துநாள் தங்கிவிட்டால் போதும்; ஒன்று எங்களைத் தலைகீழாகப் பிடித்துத் தள்ளிவிடுங்கள் பூலோகத்துக்கு. அக்ரமமும்ஆபாச மும் நெளியும் இந்த அமரலோக வாழ்வு எமக்கு வேண்டாம் என்றாவது காலடி வீழ்ந்து கண்ணீர் பொழிந்து கேட்பார் கள். அல்லது மெள்ள மெள்ள காமாந்தகாரப் படுகுழியில் தங்களையும் அறியாமல் தள்ளப்பட்டுப் போவார்கள். பாவம்! இங்கே இருக்கிற இழிதன்மை இன்னதென்று தெரி யாமல், அங்கே அவர்கள், பூஜை நடத்தியும் பூசுரன் காலில் வீழ்ந்து வணங்கியும்,கடுமையான நோன்பு விரதம் ஆகியவை களில் ஈடுபட்டும் தேவலோகம் வந்து சேரவேண்டும் என்று தவம் கிடக்கிறார்கள்.''

''ஆமாம், தேவலோகமென்றால், தேவதேவனுடைய திவ்ய நாமங்களைப் பஜித்துக் கொண்டு, காலையில் கைலா யம், மாலையில் வைகுந்தம் சென்று தொழுது பேரானந்தம் அடையும் இடம், நிர்மலனுடன் நித்தநித்தம் உரையாடி மகிழும் லோகம் என்று எண்ணிக் கொள்கிறார்கள். அவர் களுக்குத் தெரிகிறதா, இங்கு நடைபெறும் காமக் களியாட்ட வெறிச் செயல்கள்.''

''அந்த உண்மை தெரிந்துவிடக் கூடாதென்பதற்காகத் தானே இங்குள்ள தந்திரக்காரர்கள் பூலோகத்தில் புரா

ணிகர்கள் என்ற கூட்டத்தினரை அனுப்பி தேவர்களின் மகாத்மியத்தைப் பற்றி மனம்போன போக்கில் புளுகித் தள்ளச் சொல்லி இருக்கிறார்கள். முடித்துவிட்டுக் குளறுவது, கிடைத்தவனுடன் கூடிக்குலவுவது, பிறன்மனையாளை கற்பழிப்பது ஆகிய இழிச் செயல்களுக்கெல்லாம் பூலோகத்தில் புராணிகர்கள் தத்துவார்த்தம் கூறி, எல்லாம் மகிமை என்று பேசி மக்களை மயக்குகிறார்கள். தங்கள் லோகத்திலே எவையெவை பஞ்சமா பாதகம் என்று நம்பப்படுகிறதோ, எவைகளைச் செய்ய நாணயமானவர்கள் கூசுகிறார்களோ, எவைகளைச் செய்தால் செய்பவனை இழிமகனென்று கண்டித்து, சமூகத்திலிருந்தே ஒதுக்கி வைக்கிறார்களோ, அதே செய்கைகளை இங்கு தேவர்கள் வெறிவேகத்துடன் செய்கிறார்களே என்று வெறுப்படையாமல், கடவுளின் லீலைகள் என்று கூறி கற்பூரம் கொளுத்துகிறார்கள்; கன்னத்தில் அடித்துக் கொள்கிறார்கள்; கர்மம், கர்மம்!''

''அவ்வளவு போதை ஏற்றி வைத்திருக்கிறார்கள் புராணக்காரர்கள்.''

''ஆமாமடி! ஒரு நாள் அந்தரத்திலிருந்து ஒரு அரிகதா காலட்சேபத்தைக் கேட்டபோது ஒரு கணம் நானே மயங்கி விட்டேன்.''

''புராணக்காரர்களை ஏவி பூலோக வாசிகளை ஏமாற்றிவருகிறார்கள்; புண்யலோக வாசம் கூறி நம்மை ஏய்க்கிறார்கள்...''

''நாம் செய்யும் காமச்சேட்டைகளேகூட புண்ய கைங்கரியம் என்றுதானே கூறுகிறார்கள். வேறு எப்படிக் கூறுவார்கள்? நாம்தான் பார்க்கிறோமே இங்கு மூலவர் என்று கொண்டாடப்படுபவர்களே ஒழுக்கத்தைப் பற்றி ஒரு துளியும் சிந்திக்கவும், மதிக்கவும் மறுக்கிறார்கள்—அப்பப்பா! மகா**விஷ்ணு** செய்திருக்கிற ஆபாசங்கள் கொஞ்சமா...''

''பாவமடி, இந்த நாரதர்! **விஷ்ணு**விடம் சிக்கிக் கொண்டு பட்டபாடு பற்றி எண்ணினாலே சிரிப்புவருகிறது''

''இந்தக் குறும்புக்காரர் ஏன் பெண் வடிவமெடுக்க வேண்டும்? புதுப்பெண் என்று தெரிந்ததும் அவர் புண்ய கைங்கரியத்தில் ஈடுபட்டுவிட்டார்.''

''அறுபது புத்திரர்களாம், அந்த ஆபாசக் கூட்டுறவில் பிறந்தவை...''

''பூலோகவாசிகளிடம் புராணக்காரன் இந்த அறுபது குழந்தைகளின் பெயரை அறுபது வருஷங்களாகக் கொண் டாடுவது புண்ய காரியம் என்று கூறிவிட்டான்; மக்களும் நம்பிவிட்டார்கள்.''

''பாரேண்டி அக்ரமத்தை! கள்ளனுடைய கன்னக் கோலுக்கு கோயில்கட்டிக் கும்பிடச் சொல்லி திருட்டுக் கொடுத்தவர்களிடம் கூறுவது போலச் செய்திருக்கிறார்கள்''

''என்னதான் செய்ய மாட்டார்கள இந்தத் தேவர்கள்! பூலோகத்தில் சிவலிங்க பூசையே சிலாக்கியமானது என்று நம்ப வைத்திருக்கிறார்களே!''

''ஆமாம், இங்கே நடைபெறுகிற ஆபாசம் அத்தனை யும் அங்கு தேவப் பிரசாதமாக்கப்படுகிறது.''

''மோகினியாக வடிவமெடுத்தாரே, மஹாவிஷ்ணு, எதற்காகத் தெரியுமாடி...?''

''இவரும் அரனும் கூடினர்; ஐயனார் பிறந்தார்... பூலோகத்தில் மிகப்பிரமாதமாகக் கொண்டாடுகிறார்கள் ஐயனாரை...''

''அதற்கல்ல நான் கேட்பது. ஏன் மோகினியாக வடிவ மெடுத்தார் தெரியுமா, மகாவிஷ்ணு? அடி, தேவமாதர்களே! நாங்கள் இடுகிற கட்டளைப்படி நடக்காவிட்டால், எங் களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை; வேறு எத்தனையோ வழி கள் எங்களுக்குத் தெரியும். உங்கள் தயவே தேவையில்லை, எங்களால் மோகினியாகி ஒருவருக்கொருவர் சேவை செய்து கொள்ள முடியும் என்று கூறி, நம்மை மிரட்டுவதற்காகவே, மகாவிஷ்ணு மோகினி வடிவம் எடுத்தார்.''

''இருக்கும், இருக்கும். அந்த முனிவனுடைய தவத்

தைக் கெடு—இந்த அரசனை ஆலிங்கனம் செய்து அடிமை யாக்கு என்று நமக்குக் கட்டளையிடும்போது, நாம் சிரம மாக இருக்கிறது; வேறு வேலை நிரம்ப இருக்கிறது என்று ஏதாவது மறுப்பு சொன்னால், இவ்வளவுதானே! உங்கள் உதவியே வேண்டாம்; இந்தத் தவசியின் 'நிஷ்டையைக் கலைக்க இதோ நானே 'மோகினி' யாகிறேன் பார் என்று மகாவிஷ்ணு கூறிவிடுவாரல்லவா...''

''தாராளமாக! அந்த 'மகா சேவையை இந்தக் கட வுள்களே தங்கள் ஏகபோக உரிமையாக வைத்துக்கொள்ளட் டும்-இந்த இடத்தைவிட்டுப் போய்விட வழி செய்து கொடுத் தால் போதும்; நமக்கு ஏற்றவன், ஒரு நாணயஸ்தன், பூலோ கத்தில் கிடைக்கவா மாட்டான்—அவனோடு காலந் தள்ளு வோம். அமிர்தமும் வேண்டாம்; ஆபாசம் புரியும் இந்த வாழ்க்கையும் வேண்டாம்.''

''நம்மால் இங்கே உட்கார்ந்து கொண்டு, இதுபோல முணுமுணுத்திட மட்டுமே முடிகிறது; முடிவு எடுக்க வேண் டிய கட்டம் வந்ததும் மீண்டும் நமக்குச் சபலம் பிறந்துவிடு கிறது. சதங்கையைத் தேடிக் காலில் அணிந்து கொண்டு இந்திர சபையில் ஆடி அதனால் ஏற்பட்ட அலுப்புத் தீரு வதற்குள், எவனாவது தேவன் இளித்தால் அவனுக்கு இறை யாகிறோம். பூலோகத்தில் மாதவி என்றோர் மடந்தை— கணிகையர் குலம்தான். கனவான் எவனுக்காவது காமக் கிழத்தியாகி அவனுக்குக் களிப்பூட்டிக் காலந்தள்ள வேண் டிய விதிதான அவளுக்கு. அழகு, இளமை, கவர்ச்சி இவற் றுடன் அவளிடம் கலையும் பூரணமாக இருந்தது; அரசன் அவையில் அவள் ஆடியபோது, அனைவரும் ஆஹா ஹார மிட்டனர். கோவலன் எனும் வணிக இளைஞன், அவளிடம் காதல் வேண்டிப் பெற்றான். இருவரும் இன்ப வாழ்வு பெற்றனர். பிறகு அவன் காரணமற்று அவளிடம் கோப மடைந்து அவளை விட்டுப் பிரிந்தான்—கணிகைதானே அவள்— பாபப்பிண்டம் என்கிறார்கள் அவளை! பழி சேரும் இடம் என்கிறார்கள் அவள் மனையை...! அப்படிப்பட்ட மாதவி, தன்னை மகிழ்வித்து வந்த இன்னுயிரானை யான்

தன்னைவிட்டு நீங்கி பிறகு பயங்கரமான ஒரு சூழ்நிலை காரணமாகக் கொல்லப்பட்டுப் போனான் என்று கேள்விப் பட்டதும் என்ன செய்தாள் தெரியுமா அந்த மாதவி? நாமும் இருக்கிறோமே இங்கு புதனை விட்டால் வியாழன், சூரி யனை விட்டால் சந்திரன் என்று; இப்படி கைமாறியபடி—அப்படியா செய்தாள் அந்த ஆடலழகி—அவர் என் மனதுக் கிசைந்தவர்—எனவே என் மணாளர்—அவர் மடிந்தபின் மாதவியும் மடியத்தான் வேண்டும். அதுதான் அறம்—ஆனால் என் கருவில் வளரும் குழவியை உலகுக்கு அளித்திடும் கடமை ஒன்றுளது. அதனை நிறைவேற்ற மட்டும நான் உயிர் துறக்காதிருக்கிறேன்— எனினும் கோவலன் இறந்தபின் அவ னுடன் கொஞ்சி விளையாடி கோலமயில் போலாடி, அவன் திருவாயால் கோமளமே! அஞ்சுகமே! என்று கொஞ்சுமொழி கேட்டு, அவனுடன் தென்றலைச் சுவைத்து, தேனமுது உண்டு, மாலை மதியத்தின் போது 'மாசில் வீணையை மீட்டி மதுரகீதம் அவர் பாட, மலர்க் கொடிபோல் தான் ஆட இருந்து வந்த காதல் வாழ்வைப் பெற்றிருந்த மாதவி, இனி யும் இருத்தல் அறமாகாது— அந்த மாதவி, சிரித்து விளை யாடிய சிங்காரி, நயனம் காட்டி நவரசம் ஊட்டி நடனமாடிய நாரீமணி, எவ்வகையாக இன்று அலங்காரம் செய்து கொண் டால் என் இதயநாதனுக்கு மகிழ்வளிக்கும் என்று கண்ட றிந்து அதன்படி கவர்ச்சியைக் கொண்டு கொட்டி, காத லின்பத்தை ஊட்டிய மாதவி மடிய வேண்டியதுதான்' என்று தீர்மானித்தாள். மலரைத் துறந்தாள் அந்த மலர் முகவதி! ஒளியைத் துறந்தன கண்கள்! பளபளப்பை இழந் தது மேனி! தைலத்தை இழந்தது, அவள் கார்நிறக் கூந்தல்! புன்னகை போன இடம் தெரியவில்லை. ஒரே நாளில் ஔவை யானாள்! மாளிகையை வெற்றிடமாக்கினாள். இருந்த பொருளையெல்லாம் வறியருக்கு அளித்தாள்— புத்த சமயம் புகுந்தாள். இது பூலோகத்தில்! கணிகைக்கு இத்தகைய பெருநோக்கு பிறந்தது. அந்த பூலோகவாசிகள் புண்யம் தேடிக் கொண்டு இங்கே வந்து வாசம் செய்யலாம் என்று புராணிகனை ஏவிக்கூறச் செய்கிறார்கள், நம்மைக் காமச் சேற்றில் உழலவிட்டிருக்கும் உத்தமர்கள்...''

''நாம் மட்டும் காமச்சேற்றில் உழல்கிறோம்.''

''அந்தத் தேவலோகத்தை மேலானது என்று எண்ணிக் கிடக்கிறார்களே இந்த ஏமாளிகள் என்று எண்ணும் போது, எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. ஒரு நாள் இதைப் பூலோகத்தாருக்குக் கூறிவிட வேண்டும் என்று கூட எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் திலோத்தமை.

''அதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லையே! திலோத்தமா! நம்மை பூலோகம் சென்றுவரச் சொல்வதெல்லாம் யாரையாவது சீரழிக்கச் செய்வதற்கும்,ஒழுக்கத்தைக் கெடுப்பதற்கும்தானே'' என்று மேனகா சொன்னாள்.

''நாமெல்லாம் புரட்சி செய்துவிட்டு பூலோகமே போய் விட்டால்...'' என்று கேட்டாள் திலோத்தமை.

''நம்மாலே முடியுமா? நமக்குத் தெரிந்ததெல்லாம், ஸ்வாமி! நாதா! அன்பே! ஆருயிரே! என்று அடி மூச்சுக் குரலால் பேசுவதும் ஆடிடும் கொடியில் அழகுமலர், என் அங்கமதில் உண்டு இன்பமலர் என்று, காலைத் தூக்கி நின்று ஆடுவதும், கட்டி முத்தமிடுவதும், பாடுவதும், பிறகு பட்டபாட்டினை எண்ணி விம்முவதும் ஆகிய இதுதானே தவிர ஏன் என்று கேட்க, எதிர்த்துப் பேச,புரட்சி செய்யவா தெரியும்'' என்று மேனகா இடித்துரைத்தாள். ஆழ்ந்த யோசனையிலிருந்து கலைந்த நிலையில் ரம்பை, ''நம்மால் முடியாதுதான்! ஆனால் பூலோகத்தில் இப்போது அவ்விதமான அறிவாற்றல் வெகுவாகப் பரவிக் கொண்டு வருகிறது. நாம் இருக்கும் இடத்தின் அவலட்சணங்களை எடுத்துக் கூறி மக்களைத் திருத்திக் கொண்டு வருகிறார்கள். புரட்சி வீசுகிறது'' என்றாள்.

கலகலவென மணியோசை கேட்டது; மூவரும் திடுக்கிட்டுப் போயினர்.

''இந்திர சபையில் என் நடனம் இன்று'' என்று கூறிக் கொண்டு எழுந்தாள் திலோத்தமை.''

''சந்திரனுடைய வெப்பத்தைத் தணிக்க இன்று நான்

தொண்டு செய்ய வேண்டும்'' என்று கூறினாள் ரம்பை.

''நீ?'' என்று இருவரும் மேனகையைக் கேட்டனர்.

''நானா? இன்று யமனிடம் செல்கிறேன்'' என்று கூறி விட்டுச் சிரித்தாள்.

('என்னங்க இது, ரம்பையும் மேனகையும்' என்று கேட்டு என் துணைவி என்னைத் தட்டி எழுப்பிடவே, என் கனவு கலைந்தது.)

★

# 10
# கருப்பண்ணசாமி யோசிக்கிறார்

மணி ஒலித்தது!

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

கருப்பண்ணசாமி அலறியபடி உள்ளே ஓடலானார்; ஒளிந்து கொள்ள இடம் தேடினார்.

'களுக்'கென ஓர் சிரிப்பொலி கேட்டது. கருப்பண்ண சாமி, கோபம் கொண்டு ''வேதனைப்படுகிறேன் நான்—இந்த வேளையில் கேலி வேறு செய்கிறாயா?'' என்று கேட்டார், சிரித்தபடி தன் எதிரே வந்த தேவியைப் பார்த்து.

''கருப்பண்ணா! என்ன கலக்கம்! ஏன் ஓடுகிறாய்—'' என்று தேவி கேட்க, கருப்பண்ணசாமி ''காதிலே விழவில்லையா, மணிச் சத்தம்'' என்று கேட்டார்.

''விழுந்தது—அது கேட்டு அச்சம் ஏன் வரவேண்டும்—ஆச்சரியமாக இருக்கிறதே''—என்று தேவி கேட்டார்.

''உனக்கும் ஒன்றும் புரிவதில்லை. யாரோ பக்தர்களல்லவா வருகிறார்கள்'' என்று பயத்துடன் பேசினார் கருப்பண்ணர்.

''பைத்யமே! பக்தர் வருகிறார் என்றால் பயம் ஏன் வரவேண்டும்? உன்னைத் தொழ, சூடம் கொளுத்த, சோடசோபசாரம் செய்ய, படையல் போட வருகிறார்கள் பக்தர்கள். இதற்கு ஏன் பயப்படவேண்டும்...ஓஹோ! இவ்வளவு பூஜையை ஏற்றுக் கொண்டும் எங்கள் கஷ்டத்தைப் போக்காமலிருக்கிறாயே கருப்பண்ணசாமி! என்று அந்த பக்தர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்ற பயமா?'' என்றார் தேவி.

கருப்பண்ணர், ''போதும் தேவி, உன் தொல்லை. வரம் தந்து அவர்களின் குறையைப் போக்கவில்லை என்பதற்காக என்மீது சீறுவார்கள் என்ற பயம் எனக்கு இல்லை— நானென்ன தேவாலய அரசு செலுத்தி அனுபவமில்லாத வனா...இங்கு இல்லாவிட்டால், மேலுலகில் என்னைப் பூஜித்த பலன் கிடைக்கும் என்று பக்தர்கள் எண்ணிக் கொள்வார்கள். இங்கே அவர்களுக்குள்ள குறையைத் தீர்த்து வைக்காததற்காக என் மீது சீற மாட்டார்கள் என்ற சித்தாந்தம் எனக்கும் தெரியும். நான் பயப்பட்டது அதனால் அல்ல'' என்று பெருமூச்சு வருமளவு வேகமாகப் பேசினார் கருப்பண்ணசாமி.

தேவியார் வேகமாகச் சென்று வாயிலில் பார்த்துவிட்டு வந்து, ''கருப்பண்ணா! பக்தர் யாருமல்ல, காற்று பலமாக அடித்ததால் மணி ஓசை கேட்டது. பயப்படாதே. சரி, பக்தர்கள் வருகிறார்கள் என்றால் ஏன் பயம் உண்டாகிறது உனக்கு? அதைச் சொல்லு'' என்று கேட்டார்கள். பக்தர் யாரும் வரவில்லை என்று தெரிந்ததால் தைரியம் பெற்று, தன் பீடத்தில் அமர்ந்து, எதிரே ஒரு பீடத்தில் அமர்ந்த தேவியிடம் கருப்பண்ணசாமி விளக்கம் கூறலானார்.

''தேவி! பக்தர்களால் எனக்கு ஏற்பட்ட ஆபத்தும் சங்கடமும் உனக்கு என்ன தெரியும்? வரவர இந்த 'வேலை' யிலேயே எனக்கு வெறுப்பு வளர்ந்து கொண்டு வருகிறது. தான் செய்த மோசத்தை அரை பலம் கற்பூரப் புகையிலே மறைத்துவிடலாம் என்று எண்ணுகிறான். அதற்கு நான் உடந்தையாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இவனுடைய பேராசைக்கு நான் துணை செய்ய வேண்டும் என்று எண்ணுகிறான். காரணம் கேட்டால் பெரிய படைய லிட்டிருக்கிறேன் என்று கூறுகிறான்.

தேவி குறுக்கிட்டு, ''இதென்ன, புது விஷயமா கருப் பண்ணரே! இப்படிப்பட்ட பக்தர்களை நாம் நெடுங்காலமா கப் பார்த்து, பழகிக் கொண்டுதானே வந்திருக்கிறோம்'' என்று கூறிட, கருப்பண்ணசாமி, மனக் கொதிப்புடன், ''இப்போது பக்தர்கள் அந்த அளவோடு நின்றுவிடவில்லை

தேவி—கேவலப்படுத்துகிறார்கள்; போலீசின் பாதுகாப்பிலே வாழவேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்னை'' என்று கூறினார்.

''கேவலப்படுத்தினார்களா! யார்?'' என்று தேவி ஆச்சரியத்துடன் கேட்டார்.

அவரைக் கேலி செய்வதைப்போல கருப்பண்ணர், ''யார்!'' என்று ஒரு முறை கூறிவிட்டு, ''நாஸ்திகர்கள் கேவலப்படுத்தினார்கள் என்று கருதுகிறீரா தேவி! அவர்களல்ல. அவர்கள் மனிதருடன் பழகுவதும் மனிதர்களின் பிரச்னைகளைக் கவனிப்பதுமாகக் காலந் தள்ளுகிறார்கள். என்னைக் கேவலப்படுத்தியது, பக்தர்கள்! கைகூப்பித் தொழுது, கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்களே, கற்பூரம் கொளுத்துகிறார்களே, அந்தப் பக்தர்கள்தான், என்னை, செச்சே! இப்போது எண்ணிக் கொண்டாலும் எனக்கே வெட்கமாக இருக்கிறது. கேவலப்படுத்தினார்கள்—போலீசாரின் துணையால் நான் மீட்கப்பட்டேன்'' என்று கூறினார். தேவிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

''கருப்பண்ணரே! என்ன பேசுகிறீர்? பக்தர்கள்—போலீஸ் - ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பேச்சாக இருக்கிறதே'' என்றார்.

''தேவி! கேள் இந்த விஷயத்தை. இந்த பக்தர்களை இன்னின்னது செய்யுங்கள் என் மனமகிழ்ச்சிக்காக, இன்னின்னது படையுங்கள் என்று நான் கேட்டதுமில்லை - அவர்களாகவே வருகிறார்கள்—அவரவர்கள் மனதுக்குத் தோன்றியபடி ஏதேதோ செய்கிறார்கள். நான் சிவனே என்று, எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறேன். என் பொறுமை, பெருந்தன்மை, இவைகளைக் கண்டு, இந்த பக்தர்கள், என்னை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற துணிவு கொண்டு.'' கருப்பண்ணரின் தொண்டை அடைத்துக் கொண்டது துக்கத்தால்! தேவியின் ஆச்சரியம் அதிகரித்தது. ''துணிவு கொண்டு...சொல்லும் கருப்பண்ணரே! துணிவு கொண்டு...'' என்று ஆவலை வார்த்தைக

ளாக்கினார் தேவி. ஆத்திரத்துடன் கூறினார் கருப்பண்ண சாமி. ''ஒரு அறையிலே போட்டு பூட்டி விட்டார்கள்!''— என்றார். தேவிக்கும் இலேசாகத் திகில் ஏற்பட்டது.

''பூட்டிவிட்டார்களா? உன்னையா? பக்தர்களா?''— என்று திகைப்புடன் தேவி கேட்டார்கள்.

''கேட்பதற்கே இவ்வளவு திகில் பிறக்கிறதே தேவி யாரே! என் மனம் என்ன பாடுபட்டிருக்கும், என்னை ஒரு அறையிலே போட்டு பூட்டினபோது! நான் என்ன கழனி வேலை செய்யும் கருப்பனா, சாமி—சாமி—விட்டுவிடுங்க— என்று கதற?நானோ அவர்கள் கும்பிட்டு வரங்கேட்கும் கருப் பண்ண ஸ்வாமி!அவர்களோ என்னையே அறையிலே தள்ளிப் பூட்டுப் போட்டுவிட்டார்கள். நான் என்ன செய்வது?''— என்று கூறி, ஆயாசமடைந்தார் கருப்பண்ணசாமி.

தேவி, உண்மையிலேயே அனுதாபப்படத் தொடங்கி னார்கள்.

''கேவலமான நிலைமைதான் இது. பக்தர்கள், உன் னைச் சிறையில் போடுவதுபோல அல்லவா செய்து விட்டி ருக்கிறார்கள்'' என்று பேசினார் சோகமாக.

''தேவி! உன் காதிலே, அவர்கள் அப்போது போட்ட கூச்சல் விழுந்திருந்தால் தெரிந்திருக்கும், அவர்களின் போக் கும் குணமும். போட்டுப் பூட்டடா, என்ன நடந்துவிடு துன்னு பார்க்கலாம்'' என்று ஒருவன் கொக்கரிக்கிறான்.

''பெரிய பூட்டு கொண்டு வா''என்று கூவுகிறான் ஒரு வன்.

''அலிகார் பூட்டு வேண்டுமா''என்று கேட்கிறான் இன் னொருவன். இவ்வளவு கூச்சல், துணிவு! ''போட்டுப் பூட் டுங்க, பார்க்கலாம், எவன் வந்து என்ன செய்து விடுகிறான்'' என்று கூவி, தேவி! என்னை ஒரு பெரிய அறையிலே போட்டு பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.''

வெளியே சிரிக்கிறார்கள்—இனி பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று! நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன்

—என்னைப் போட்டு பூட்டிய 'பாவி'கள் சிரிக்கிறார்கள்! நான் கேட்கலாமா, அவர்களைப் பார்த்து? இதென்ன அக்ர மம்— திறந்துவிடுங்கள் என்னை - இல்லையானால் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வரச்செய்வேன்,கைகால்களை முறித்துப் போட்டுவிடுவேன்''— என்று பேசலாமா! அவர்களோ பக்தர் கள்! நானோ அவர்களால் வணங்கப்படும் சாமி. தேவி! மனம் எவ்வளவு பதறி இருக்குமென்று யோசியுங்கள்'' என் றார் கருப்பண்ணர்.

''கருப்பண்ணரே! அது கிடக்கட்டும், ஏன் பூட்டினார் கள்? என்ன செய்தீர்?'' என்று கேட்டார் தேவியார்.

''நானா! என்ன செய்தேனோ, அவர்கள் என் எதிரே இருந்துகொண்டு சொல்லி வந்த புளுகுகளை எல்லாம் கேட்டுச் சகித்துக்கொண்டிருந்தேனே, அதுதான் நான் செய்த தவறு; 'போதும், புளுகாதீர்கள்' என்று ஒருதடவை யாவது—ஒரு பக்தனையாவது கண்டித்திருந்தால், அவர் களுக்கு அன்று அவ்வளவு துணிவு வந்திருக்காது'' என்றார் கருப்பண்ணர்.

''உன்னை ஒரு தனி இடத்தில் போட்டுப் பூட்ட வேண் டிய அவசியம் என்ன வந்தது?'' என்று மீண்டும் கேட்டார் தேவியார்.

சலிப்பும் வெறுப்பும் கலந்த குரலிலே கருப்பண்ணர் சொன்னார்: ''ஏன் பூட்டி வைத்தார்கள் என்றா கேட்கிறீர் தேவி! நான் அவர்களின் ''சாமி''யாம். அதனாலே என்னை வேறே சில பக்தர்கள் கொண்டு போகாமலிருப்பதற்காக, என்னைப் போட்டு பூட்டி வைத்தார்கள். அவ்வளவு 'பக்தி' என்னிடம். வேறெந்த பக்தனிடமும் நான் பேசிவிடக்கூடாது அப்படி ஒரு எண்ணம்— ''என்றார் கருப்பண்ணர்.

''இதென்ன பைத்யக்காரத்தனமான எண்ணம்!''— என்று தேவி கேலியாகப் பேசினார்கள். ''இவர்கள் கண்ட தையும் கடியதையும், வேகாததையும் பழுக்காததையும் தின்று வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் என்னை வந்து கேட் கிறார்களே, தேவி! 'கருப்பண்ண ஸ்வாமி! என்னைக் காப்

பாற்று'ன்னு. பைத்யக்காரத்தனம்தானே அது. அதுபோல இதுவும் ஒரு பைத்யக்காரத்தனம். உண்மையைச் சொல்லப் போனா, தேவி! அப்படிப்பட்ட பைத்யக்காரத்தனத்தை நாம் வளரவிட்டது தவறு. இல்லையா? என் விஷயத்தைக் கேள், தேவி! இந்தப் பக்தர்களுக்கு, நான் தங்களுடைய ''சாமி'' வேறு யாரும, தங்களுடையதுன்'னு 'பதுமையை' கொண்டாடினாலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்கிற எண்ணம் ஏற்பட்டது. அதறகுத் தகுந்தபடியே நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. நான், நீ என்று போட்டிபோட்டுக்கொண்டு பக்தர்கள் கூட்டம் பெருகுவது கண்டு எனக்கும பெருமை யாகத்தான் இருந்தது. என் போறாத வேளை! என் பக்த கோடிகள், இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து அவர்களுக்குள்ளே தீராத பகை ஏற்பட்டுவிட்டது. அவர்களுடைய பகை எனக் குப் பெரிய ஆபத்தாக வந்து சேரும் என்று நான் கண்டேனா - நான் என் வேலையைக் கவனித்துக்கொண்டு இருந்தேன். வழக்கமாக எனக்கு நடத்துகிற உற்சவத்தை நடத்தினார்கள். எனக்கு மகிழ்ச்சி—தேரும் திருவிழாவும் வீண் வேலை என்று ஊருக்குப்போய்ச் சிலபேர் பேசிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் பேச்சிலே மயங்கி, எங்கே என் பக்தர்கள்—இந்த வருஷம் உற்சவத்தை நடத்தாமல் இருந்துவிடுகிறார்களோ என்று எனக்கு இலேசாகப் பயம். அவர்கள் உற்சவத்தை வழக்கப்படி நடத்த முன்வரவே, நான் மகிழ்ச்சி அடைந் தேன்—எவ்வளவு பிரச்சாரம் நடைபெற்றாலும் நமது செல் வாக்கு போய்விடவில்லை என்று எண்ணிப் பூரித்துப் போனேன். வருஷா வருஷம் வைகாசி மாதம் உற்சவம் நடத்துவார்கள் எனக்கு. கருப்ப உடையார் தலைவர், உற் சவம் நடத்திய பக்தர் குழாத்துக்கு. வழக்கப்படி ஊர்வலமாக என்னை அழைத்துச் சென்றார்கள். 'பயல்களே! பகுத்தறிவு சுயமரியாதை என்று கத்திக் கொண்டிருக்கிறீர்களே— பாருங்களடா, பக்தர்கள் எனக்கு உற்சவம் கொண்டாடு வதை!'' என்று கூறிட எண்ணினேன்—ஆனால் அந்தப் பயல் கள் ஒருவன்கூடக் காணோம்—எங்காவது மகாநாடு போட்டிருப்பான்கள் போலிருக்கு. சந்தோஷமாகப் பவனி வநதேன். எப்போதும்போல என்னைக் கொண்டுபோய்

மண்டபத்தில் கொலுவிருக்கச் செய்தார்கள். பக்தர்கள் என்னை வந்து தரிசிக்க அதுதானே நல்ல ஏற்பாடு. நானும் மண்டபத்தில் கெம்பீரமாக வீற்றிருந்தேன்.

பக்த கோடிகள் இரண்டு 'கோஷ்டி'யாகி இருந்தனர் என்று சொன்னேனல்லவா—உற்சவம் செய்தது ஒரு கோஷ்டி - கருப்ப உடையார் கோஷ்டி—மற்றொரு கோஷ்டி பிச்ச உடையார் நடத்தி வந்தார்— அந்தக் கோஷ்டியும் என் பக்தர்கள்தான். அந்த இரண்டு 'கோஷ்டி'க்கும் பகை! இரண்டு கோஷ்டிக்கும் என்னிடம் பகை ஏற்படக் காரணமே கிடையாது.

மண்டபத்தில் இருந்த என்னை மீண்டும் கோயிலுக்கு அழைத்துப் போகக் கூடிற்று கருப்ப பக்தர் கோஷ்டி.

''தூக்காதே! எடுக்காதே!'' என்று கூவிற்று பிச்ச பக்தர் கோஷ்டி.

''நீங்கள் யாரடா, தடுக்க— எங்க கருப்பண்ணசாமிக்கு நாங்கள் உற்சவம் நடத்துகிறோம்—எங்கள் இஷ்டப்படி நடத்துகிறோம்— உலா முடிந்தது. கொலு முடிந்தது—கொண்டு போகிறோம் கோயிலுக்கு— நீங்கள் யார் தடுக்க?'' என்று கருப்ப பக்தர் கோஷ்டி பதில் கூறிற்று.

''தொடாதே!''— என்று அதட்டிப் பேசினர் பிச்சை பக்தர் கூட்டத்தினர்.

''தூக்கு! தூக்குடா!'' என்று அதிகாரக் குரலில் பேசினர் கருப்ப பக்த கோஷ்டியினர்.

''வெளியே கிளப்பினே—கொலை விழும்— ஆமாம்.''

''சூரப் புலிகளோ! தூக்குடா சாமியை.''

''வேண்டாம்— வீணா தொல்லைப்படாதீங்க.''

''கருப்பண்ணசாமியை நாங்க எங்க இஷ்டப்படி தூக்கிக் கிட்டுப் போவோம்.''

''கருப்பண்ணசாமி, எங்க சாமிடா!''

''இல்லே, எங்க சாமிடா, கருப்பண்ணசாமி.''

''கையை வெட்டிவிடுவேன்.''

''காலை ஒடித்துவிடுவோம்.''

தேவி! இரு பிரிவும் இப்படிக் கொக்கரித்தன— நான் மண்டபத்திலே கொலு இருக்கிறேன்! என்னைக் கொண்டு போய் பழையபடி கோயிலில் சேர்த்துவிட வேண்டும் என்று ஒரு பிரிவு முயற்சி செய்கிறது— இன்னொரு பிரிவு, கூடாது என்று கூறித் தடுக்கிறது. நான் என்ன செய்வது! இரு பிரிவினரும் என் பக்தர்கள். நான் யார் பக்கம் சேரட்டும்? சேர முடியும்? இரண்டு பிரிவும் சண்டை போட்டுக் கொள்ளட்டும். நாம் கோயிலுக்குப் போய்த் தொலைப்போம்— இரு பிரிவின் தயவும் வேண்டாம் என்று எண்ணம் பிறந்தது— ஆனால் எப்படிக் கோயிலுக்குப் போவது? நான் திண்டாடிப் போனேன், தேவி! திகைத்துப் போனேன்.

பட்டிக்காடுகளிலே, கலியாணத் தகராறு கிளம்பிவிட்டால், 'பெண்ணைக் கொண்டுவா' என்று ஒரு கூட்டம் கூவ, 'பெண்ணைக் கொண்டுபோகாதே' என்று மற்றொரு கூட்டம் கூவ, இரண்டு கூட்டத்தின் சச்சரவிலே சிக்கிய பெண், புலம்புவது உண்டு. என் நிலை அது போலாகிவிட்டது. ஆனால் நான் புலம்பலாம்! நானோ சாமி! என்னை இந்தக் கொடுமைக்கு ஆளாக்கினவர்களோ என்னைப் பூஜிக்கும் பக்தர்கள்! என்ன செய்வது நான்?

''கோயிலிலே கொண்டு போய், ஸ்வாமியைச் சேர்ப்பதுதான் நியாயம்'' என்று கருப்ப பக்தக் குழாம் கூறியபடி இருந்தது. பிச்சை பக்தர் குழாமோ, ''விவகாரத்தைத் தீர்த்துவிட்டு, சாமியைத் தொடு— விவகாரம் பைசலாகாததற்கு முன்னே தொட்டா, விடமாட்டோம்'' என்று கூறுகிறது.

அட, பாவிகளா! உங்களுக்குள்ளே, ஏதாவது விவகாரம் இருந்தா என்னை ஏன் அதுக்காகச் சீரழிவு செய்கிறீங்க. நான் கோயிலுக்குப் போன பிறகு, உங்க விவகாரத்தைப் பேசி, பைசல் செய்து கொள்ளக்கூடாதா? என்னை இப்படி அவ

மானப் படுத்துவது முறையா—என்று கேட்க விருப்பம் தான்—எப்படிக் கேட்க முடியும்?

ஊரிலே இதற்குள்ளே பேசப்பட்ட பேச்சோ, கேட்டுச் சகிக்க முடியல்லே.''

''சாமி புறப்படலே இன்னும்?''

''இல்லே—சாமியை விடமாட்டேன்னு சொல்றாங்களாம்.''

''ஏனாம்—யாராம்—?''

''அவுங்கதான் பிச்சையா.''

''ஏனாம்.''

''என்னமோ விவகாரம் இருக்காம், கருப்பையா வோடே அந்த விவகாரத்தைப் பைசல் செய்து ஆசாம்யைத் தொடு—இல்லேன்னா விடமாட்டோம்னு பேசறாங்க.''

''சாமி, மண்டபத்திலேதான் இருக்கா?''

''ஆமாம்—பாவம்—மண்டபத்திலேயேதான் இருக்கு.''

''இந்நேரம் கோய்ல் போய்ச் சேர்ந்திருக்குமே.''

''ஆமாம், விட்டாத்தானே!''

''இவர்களுக்குள்ளே சண்டைன்னா, சாமி என்ன பண்ணிச்சாம், பாவம்! அதை மண்டபத்திலே காக்கப் போட்டு வைக்க வேணுமா?''

—இப்படித் தாய்மார்கள் பேசுகிறார்கள்.

சிறுவர்களோ, ''டோய்! சாமி அம்பிட்டுக்கிச்சி, மண்டபத்திலே'' என்று கூவித் தொலைக்கிறார்கள்.

தேவி! கோயில் நிர்வாக சம்பந்தமாக, அந்த இரண்டு பிரிவுக்குள் ஏதோ தகராறாம்—அதற்காக என்னை இந்தக் கோலப்படுத்தினார்கள்.

'கோயில் தகராறு தீர்க்கப்பட்டாலொழிய, என்னை மண்டபத்தைவிட்டு எடுத்துச் செல்லக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதுடன், ''கணக்கு வழக்கு முடிந்தாலொழிய கருப்பண்ணசாமியைக் கோயிலுக்குக் கொண்டு போகவிடப் போவதில்லை'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, தேவி, என்னை மண்டபத்துக்குள்ளே விட்டுவிட்டு, கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்கள், பிச்ச பக்தக் கூட்டம். நான் உள்ளே அடைபட்டுக் கிடந்தேன்— மண்டபத்தைப் பூட்டிவிட்டார்கள். உற்சவத்துக்கு ஆசைப்படாமலிருந்தால், நிம்மதியாகக் கோயிலிலே இருந்திருக்கலாம்— இப்போது, மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்.

''டோய்! சாமி, உள்ளே இருக்குடா— பூட்டிப் பூட்டாங்க'' என்று கூவிக் குதிக்கிறார்கள்.

''பாவம்! கருப்பண்ணசாமியைப் போட்டு பூட்டிவிட்டான்க!'' என்று தாய்மார்கள் முகவாய்க் கட்டையில் கை வைத்தபடி பேசுகிறார்கள். நான் உள்ளே சிறை வைக்கப் பட்டேன். என்னை இந்தச் சதிக்கு ஆளாக்கிய கருப்ப பக்தர், என்னைச் சிறை மீட்க அரும்பாடுபடலானார், 'இந்து மத பரிபாலன போர்டாராமே, அவர்களிடம் முறையிட்டாராம்!

''சாமியை மண்டபத்திலே போட்டு பூட்டிவிட்டார்கள்! கோயிலிலே சாமி இல்லை— சாமியை வெளியே கொண்டு வந்து கெ.டுக்கவேணும்''னு கேட்டாராம். போர்டார் இதுக்கா இருக்காங்க! ஏதோ கணக்கு வழக்கு சரியா இருக்கா இல்லையான்னு பார்க்கத்தானே— அந்தக் காரியத்தை ஒழுங்காகச் செய்யவே அவர்களுக்கு நேரம் போதறதில்லே— என்னைப் போட்டு பூட்டிவிட்டா, அதற்காக ஓடோடியா வருவாங்க! போப்பா! போயி, போலீசிலே சொல்லுன்னு யோசனை கூறிவிட்டாங்க. ஓடியிருக்கிறார் போலீசுக்கு. நான் உள்ளே அடைபட்டுக் கிடக்கிறேன். போலீசிலே என்னென்ன பேசினாங்களோ தெரியல்லே! என்ன பேசியிருக்கப் போறாங்க, கேலிதான்! கடைசியிலே லால்குடி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு போலீஸ் படையோடு வந்து, பூட்டை

உடைத்து, என்னை வெளியே விட்டார்! அந்த நல்ல மனுஷன் இந்த உபகாரம் செய்ய வந்தாரே, அவரைச் சும்மா விட்டாங்களா? ''எப்படி பூட்டை உடைக்கலாம்—பார், என்ன செய்கிறோம்—எங்க கருப்பண்ணசாமியை நாங்க பூட்டி வைக்கிறோம்—மாட்டி வைக்கிறோம். எங்க இஷ்டப்படிச் செய்கிறோம், நீ யார் கேட்க—பூட்டை உடைக்கலாமா?'' அப்படி இப்படின்னு, அவரைச் சூழ்ந்து கொண்டாங்க. அவர் என்ன, என்னைப் போலவா, வாயை மூடிக் கிட்டுக் கிடப்பாரு—'மரியாதையா நடங்க—சட்டப்படி நடக்க வேணும்'னு சொல்லியிருக்காரு—கேட்கல்லே! போலீசாரைக் கூப்டாரு. 'போடுங்கடா பூஜை'ன்னு உத்திரவு போட்டாரு. தூக்கினாங்க, தடியை; அடிச்சி விரட்டினாங்க, தேவி! அப்பத்தான் என் மனம் கொஞ்சம் நிம்மதியாச்சி. பக்தனுங்கன்னு பேர் வைத்துக் கொண்டு, என் எதிரே கன்னம் கன்னம்னு போட்டுக் கொண்டு, கற்பூரம் கொளுத்திக் காட்டிகிட்டு இருக்கிறவங்க, நீதி நியாயத்தைக் கவனிக்காமல், ஈவு இரக்கம் காட்டாமல், பழி பாவத்துக்கு அஞ்சாமல், சாமியை இந்த அலங்கோலப்படுத்தலாமான்னு யோசிக்காமே, நெஞ்சழுத்தத்தோட, என்னைப் பூட்டிப் போட்டு விட்டாங்க—கேவலப்படுத்திவிட்டாங்க. நான் என்ன செய்ய முடிந்தது? எந்தப் புண்யவான் வந்து வெளியே விடுவாரோ—எத்தனை காலம் இங்கே அடைபட்டுக் கிடக்கவேணுமோ - எவனெவன் கேலி செய்கிறானோ'ன்னு எண்ணி எண்ணி ஏக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளையா லால்குடிகாரர், தங்கமான மனுஷன்! அவர் புள்ளெ குட்டிக சுகமா இருக்கணும். என்னை வந்து வெளியே கொண்டு வந்து சேர்த்தாரு—தேவி! இந்தப் பாடுபடுத்திவிட்டாங்க, பக்தர்னு சொல்லிக் கொள்கிறவங்க—அதனாலேதான் எனக்கு பயம் ஏற்பட்டு விட்டுது—நிஜமாச் சொல்றேன். இனி இந்த பக்தர்களை நம்பிப் பிரயோஜனமில்லே—ஏதோ பூஜை செய்கிறாங்களேன்னு பூரிப்படையறதிலே அர்த்தமில்லே. இனி நமக்கு அவங்க தயவு வேண்டாம் - சகவாசமே கூடாதுன்னு தோணி விட்டுது''—என்று கருப்பண்ணசாமி தன் கதையைக் கூறி முடித்தார். தேவியும், கதையைக் கேட்டுக் கலக்கம்

அடைந்தார்கள்.

"ஆமாம்! இனி இந்தப் பக்தர்களை நம்பக்கூடாது" என்று தேவியும் தீர்ப்பளித்தார்கள்.

"நாம் இரண்டு பேரும் மட்டும் தீர்மானித்தால் போதுமா தேவி! நம்ம கூட்டம் பெரிதல்லவா? எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி, இனி இந்தப் பக்தர்களிடம் நாம் சிக்கிச் சீரழிவு படக்கூடாது. பக்தர்கள் வேண்டாம்" — என்று தீர்மானம் நிறைவேற்றினால்தானே நல்லது என்றார் கருப்பண்ணசாமி.

"ஆமாம். கருப்பண்ணரே! பக்தர்களால் நம்மவர்களுக்கு ஏற்பட்டுவரும் சீரழிவுகளையும், எத்தர்கள் ஏமாளிகளை ஏய்க்க நம்மைக் கருவியாகக் கொள்வதையும் விளக்கமாகக் கூறி, நமது நண்பர்களுக்கும் இனி இப்படிப்பட்ட இடைஞ்சல் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளத்தான் வேண்டும். நாம் இதற்கெல்லாம் ஒரு தனி மாநாடு கூட்டிவிட வேண்டியதுதான். இனிப் பொறுக்கமுடியாது. நான் வரவேற்புக் கழகத்துக்குத் தலைமை தாங்கிவிடுகிறேன்— திறப்பு விழா நீ நடத்திவிடு— தலைமைக்கு யாரை அழைக்கலாம்" என்று தேவியார், ஆர்வத்துடன் கேட்டார்கள்.

"யாரை அழைக்கலாம்?" — என்று கருப்பண்ணசாமியும் யோசிக்கலானார்!

★

---

1951-ம ஆண்டு ஆகஸடு மாதத்தில் லால்குடிககுச சமீபத்தில் உள்ள புளுசை சாங்குடி என்ற கிராமத்தில், இரு கட்சிகள் ஏற்பட்டு, கருப்பண்ணசாமியை மண்டபத்தில் போட்டு பூட்டிவிட, போலீஸ உதவியுடன் பூட்டு உடைக்கப்பட்டு சாமி கோயிலில் கொண்டுபோய்ச் சேர்ககபபட்டார் என்ற செயதி, இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில், ஆகஸ்ட் 22ல வெளிவநதது. அந்த உண்மைச் சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு தீட்டப்பட்டது இந்தக் கற்பனைக் கதை.

# 11
# சூதாடி

"இஸ்பேட் இரண்டடி, மேல்ஜாக்கும் இருந்தது. சரி, ஒரு கை பார்த்து விடுவது என்று தீர்மானித்து, 220 கேட்டு விட்டேன்; சனியன் போல, கிளாவர் மணிலா ஒன்று ஷேக்காக இருந்து தொலைச்சுது..."

"எதிர்க் கையிலே கிளாவர் ஜாக்கியோ?"

"ஆமாம்—அதை ஏன் கேட்கிற? போ, கிளாவர் ஜாக்கேதான்; அவன் முதலிலேயே தட்டினான்..."

"அட சனியனே! முதலிலேயே அதுதானா..."

"ஆமாம் சார்! இல்லையானா, எதிலாவது தள்ளித் தொலைத்து விடுவேனே, கிளாவர் மணிலாவை. சரி, என்ன செய்வதுன்னு மணிலாவைப் போட்டேன்."

"போடாவிட்டா, விடுவானா? பிறகு...?"

"பிறகா! மேல் ஜாக்கி இருந்ததல்லவா என்னிடம், அந்த ஜாதி அவனிடம் இல்லை; ஒரே ஒரு ஆஸ் இருந்தது. அதைத் தள்ளிவிட்டான், நான் கவனிக்கவில்லை; ஜாக்கியைத் தட்டினேன்; அவ்வளவுதான்! ஒரு 'தழை' எட்டாம் 'பந்து'அதனாலே வெட்டிவிட்டான். அந்த ஜாக்கும்போச்சு.

"முட்டாள்டா நீ. ஏன் முதலிலேயே துருப்பைத் தட்டக் கூடாது?"

"தட்டித் தொலைச்சேண்டா? கணக்கு எண்ணினதிலே தவறிவிட்டேன். துருப்பு கீழே விழுந்துவிட்டதுன்னு, கணக்கு செய்துவிட்டேன்,"

''சரிதான். தப்பாகக் கணக்கும் போட்டே; ஷேக் மணிலா வேறு, இந்த இலட்சணத்துக்கு இருநூற்று இருவது கேட்டுட்டே; போடா, போ. பணம் போகாமே, என்ன ஆகும். நீயும் ஒரு ஆட்டக்காரன்தானா?''

''சும்மா இருடா! போன வாரம், அதைவிட மோசமான சீட்டு, தெரியுமா? துருப்பிலே, மணிலா கிடையாது—ஷேக் மணிலா ஒண்ணு, வேறே ஜாதியிலே—ஆனா ஜெயித்து விட்டேன்; தெரியுமா? துருப்பைத் தட்டினேண்டா, ட்டான்னு கீழே மணிலா விழுந்தது. என் 'ஜோடி' ஆளிடம மணிலா ஷேக்; மறுபடியும் துருப்பிலே ஒரு தழையைக் கொடுத்தேன்...''

''ஏன்?''

''துருப்பு ஆஸ் வெளியே இல்லவா இருக்கு?''

''அட பாதகா! துருப்பிலே, மணிலாவும் கிடையாது; ஆசும் இல்லை. ஆட்டம் கேட்டுட்டயே, என்ன தைரியண்டா உனக்கு.''

''கேட்டது மட்டுமா, ஜெயித்தேனடா ஆட்டத்தை—துருப்புத் தழையைத் தட்டினேனா, ஆஸ் போட்டுப் பிடித்தான்; அவன் ஜதை ஆள் இருக்கிறானே அவன் ''தொப்பு''ன்னு ஜாக்கியைத் தூக்கிப் போட்டான், அதன தலையிலே. எந்த ஜாக்கி தெரியுமோ? நான் ஷேக் மணிலா வைத்திருக்கிறனே, அதே ஜாக்கி. அவ்வளவுதான்! அந்தப் பிடியிலே, அவன் கண்டதோடே சரி. நம்ம ஷேக் மணிலா பிழைச்சுது; ஆட்டமும் ஜெயித்தது. அப்படி சில வேளையிலே, எவ்வளவு மோசமான சீட்டா இருந்தாலும் ஜெயித்துவிடுது; சில நேரத்திலே கல்லாட்டம் சீட்டு இருந்தும் தோத்துப் போகுது.''

''ஆமாம்! சரி. போடுவமே நாலு ஆட்டம்.''

''இரண்டே பேரா?''

''ஆமா, இரண்டு பேர்லே முன்னூத்தி நாலு, ரொம்ப ஜோரா இருக்கும்டா.''

''மேஸ் என்னா?''

''அரையணா, ஓரணா.''

''செ! வேண்டாம்டா. காலணா அரையணா போதும்!

''சரி,போடு. அவங்க வருவதற்குள்ளே நாலு ஆட்டம் போடலாம்.''

இது, பங்களா வாசற்படியை அடுத்த மோட்டார் ஷெட்டில்! பங்களா சொந்தக்காரர் பார்த்தசாரதி முதலியாரின் மோட்டார் டிரைவர், பாலுவுக்கும், முதலியாரைப் பார்க்க வந்த முத்துசாமி ஐயரின் மோட்டார் டிரைவர், மோசசுக்கும் நடந்த பேச்சு. ஐயர் முதலியாரிடம் பேசிக் கொண்டிருக்கிறார் உள்ளே. மோட்டார் ஷெட்டிலே 304 ஆரம்பமாகிவிட்டது. மளமளவென்று மோசசுக்கு இரண்டே காலணா போய்விட்டது. பணமாகப் போன இரண்டே காலணாவுடன், தோல்வியால் வந்த கோபத்தை மாற்றிக் கொள்வதற்கு, இரண்டு கத்தரிக்கோல் தீர்ந்துவிட்டது; அது வேறு நஷ்டம்; பணம் அப்படியும் கொஞ்சம் புகைந்து போயிற்று. பாலுவுக்குப் பரம சந்தோஷம். மோசசுக்குக் கவலை. இருவருக்கும், ஐயரின் குரல் கேட்கவில்லை. அவர் மோட்டார் ஆர்ன் செய்தபோதுதான மோசஸ் அலறி அடித்துக் கொண்டு, எழுந்து ஓடினான். ஐயர் கோபமாக இருந்தார். அவசரமாக மோட்டாரண்டை சென்றான் மோசஸ்.

''கழுதே! என்னடா இது? நான் கத்து கத்துன்னு கத்திண்டிருக்கேன்...எங்கே போயிருந்தே.''

''ஷெட்டுக்கு....''

''ஷெட்டிலே எனன வேலை உனக்கு.''

''நம்ம கார் பாட்டரி தொல்லை கொடுக்குது பாருங்கோ, அதுக்காக...''

''304 ஆடினா, பாட்ரி சரியாப்பூடும்னானா அவன்.'' மோசஸ் தலையைச் சொரிந்தான்—ஐயருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது, சீட்டாடிக் கொண்டிருந்த விஷயம். குறும்புப் பார்வையுடன் தோட்டக்காரப் பையன் நின்று கொண்டிருந்ததை மோசஸ் பார்த்தான். பயல், இவன்தான கலக மூட்டிவிட்டான் என்று தெரிந்தது. தெரிந்த பிறகு ஒரு

சமயம் கவனித்துக் கொள்வோமென்று தீர்மானித்துக் கொண்டு, மோட்டாரைச் சரிபார்ப்பதுபோல இருந்தான். ஐயர் ஏறினார்; கார் நகர்ந்தது—ஐயர் பேசலானார்.

''மடையன்! இந்தச் சூதாடும் புத்தி உனக்கிருக்கும் வரைக்கும் நீ ஏதுடா உருப்படுவது? எப்படிப் பார்த்தாலும், இந்தச் சூதாட்டந்தானே உனக்கு. நீ எப்படி யோக்யமாக, நாணயமாக இருக்க முடியும்? சூதாட்டக்காரப் பயலிடம் எப்படிடா நாணயம் இருக்கும்?'' என்று, புத்தி கூறும் பாவனையிலே திட்டிக்கொண்டேயிருந்தார். மோசஸ் என்ன பதில் கூறமுடியும்? கோபந்தான்; ஆனால் அவனோ டிரைவர்; அவரோ முதலாளி. கோபித்து என்ன செய்வது? எதிரே வந்த, இரட்டைமாட்டு வண்டிக்காரன் மீது காட்டினான் கோபத்தை எல்லாம். ''புத்தியில்லேடா நாயே! நடுரோட்டிலே என்னடா வண்டி? ரொம்பத் திமிருடா உங்களுக்கெல்லாம்! ஏன்னா, ஆறணாவுக்குக் கேட்பாரத்துக் கிடந்த வைக்காக் கட்டு இப்ப ஒண்ணரை ரூபாய்க்கு விக்கறதாலே, உங்களுக்குத் தலைகால் தெரியலே.''

மோசஸ் சொன்ன வார்த்தை,வண்டிக்காரனுக்கு மட்டுமல்ல, மோட்டாருக்குள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கும் ஐயருக்குந்தான் பொருந்தும். ஐயருடைய ''அம்சா மார்க் சோப்'' கேட்பாரற்றுத்தான் கிடந்தது. யுத்த காலத் தேவையினாலே, டஜன் ஆறணா தாளிக்கையில்லாத சோப்பு, ஒன்று ஆறணாவுக்கு விற்றது. அதனாலேதான் மோசசும் மோட்டாரும் ஐயருக்குக் கிடைக்க முடிந்தது. இது மோசசுக்குத் தெரியும். தெரிந்ததாலேதான், வண்டிக்காரனைத் திட்டினான். ஐயர், கனைத்தார்; அவ்வளவுதானே அவர் செய்ய முடியும்? கேட்க முடியுமா?''டே மோசஸ்! நீ என்னை மனதிலே வைத்துக் கொண்டுதான் வண்டிக்காரனைத் திட்டினாய் என்று. ''சரி, விடுடா! இந்தக் கிராமத்தான்கள் இப்படித்தான். நீ விடு, காரை'' என்றார். மோசசுக்கு டபுல்மேஸ் வந்தது போன்ற சந்தோஷம். கொஞ்சதூரம் சென்று, வேறோர் வீட்டு வாசலில் நின்றது மோட்டார். ஆரனை அடிக்கச் சொன்னார். இரண்டு மூன்று தடவை

அடித்தானதும், உள்ளே இருந்து ஐயரின் மற்றொரு நண்பர், அவசர அவசரமாக, கோட்டிலே ஒரு கையுடன் ஓடி வந்து காரில் ஏறினார். கார் புறப்பட்டது, உள்ளே பேச்சு ஆரம்பித்தது.

முத்துசாமி ஐயர்—'சீனு! தெரியுமோ விஷயம்.'

சீனு: என்ன முடிச்சுட்டேளா?

மு: முடியாமே என்னடா! எல்லாம் எடுத்துப் பேசறதிலேதானே இருக்கு.

சீ: முதலி, ரொம்ப ஜாக்ரதையான பேர்வழியாச்சே. கொஞ்சத்திலே அகப்பட்டுக் கொள்ள மாட்டானே.

மு: அவன் 'சீட்டு' என்னான்னு எனக்குத் தெரியாதா? அதை வெட்டுவதற்கு என்னிடம் துருப்பு இல்லையா?

சீ: ஆமாம்—நடந்ததைச் சொல்லும்—நிஜமாவா சிக்கிண்டான்?

மு: டாட்டா ஷேர் வேணுமான்னு ஆரம்பிச்சேங்காணும் முதல்லே...

சீ: சாமர்த்தியமாகத்தான் ஆரம்பிச்சிருக்கீர்—முதலிலே உமக்கு ஷேர் வேணும்னு பேச்சு ஆரம்பிச்சிருந்தா படிந்திராது.

மு: முட்டாள்தானே ஓய், தன் கைத் துருப்பைப் பாழாக்கிண்டு, பேந்தப்பேந்த விழிப்பான். நானாகப்போய், உம்ம 'லட்சுமிராஜ்' ஷேர் விலைக்குத் தருகிறீரான்னு கேட்கணுமா—

சீ: உமக்கா சொல்லணும்! சரி, டாட்டா வேணுமான்னு ஆரம்பிச்சீர்—பிறகு...

மு: டாட்டாதான்யா உனக்குத் தெரியும்—ஏன்னா, அதுதானே பிரக்யாதியா இருக்கு—மற்ற ஷேரெல்லாம் மண்ணுன்னு நினைக்கிறீராக்கும்னு அவன் ஆரம்பிச்சான்.

சீ: ஓஹோ! அவன் அப்படி ஆரம்பிச்சானா? அதாவது, லட்சுமிராஜ் ஷேரின் பெருமையைச் சொல்ல அஸ்திவாரம் போட்டான்.

மு: போட்டான்! மண்டுவுக்கு, அவன் போடுகிற அஸ்திவாரத்தை நான் இடிக்கிறேன் என்பது தெரிந்ததா? முதலியாரே! டாட்டா கம்பெனி ஷேர்னா, அது பவுன் மாதிரி. மற்றதுகளை அப்படிச் சொல்ல முடியாது. ஆனா நீர் வேறு மாதிரியாத்தான் பேசுவீர். ஏன்னா...'' என்று இழுத்தாப்போலப் பேசினேன். உடனே, கோபம் வந்துவிட்டது முதலியாருக்கு. ''அப்படியானா, லட்சுமிராஜ் ஷேர் தம்பிடிக்குப் பிரயோஜனமில்லைன்னு சொல்லும்'' எனறு சீறினான் முதலியார்! கோபப்படாதீர்கள். என் வாய் கொஞ்சம் அறுதல். நான் புறப்படும்போதே, நாம் வாயைத் திறந்து ஒண்ணும் பேசப்படாது; பேசினா, நாம் சத்யத்துக்குத்தான் பாடுபடறோம் என்கிற விஷயம் தெரியாமல், முதலியார் நம் மீதுதான் கோபிப்பார்னு நினைச்சேன். ஆனா, பிறகு, எப்படி நமக்குத் தெரிந்ததை அவரிடம் சொல்லாமலிருப்பது—நமக்கு வந்தால் என்ன, அவருக்கு நஷ்டம் வந்தால் எனன, அவர் நம்ம பால்ய சினேகிதராச்சேன்னு மனசு அடிச்சுண்டது. அதனாலேதான் இந்தப் பேச்சையே ஆரம்பிச்சேன். உமக்குக் கோபம் வர்ரது சகஜம். ஏன்னா, லட்சுமிராஜ் ஷேர், உம்மிடம் ஐம்பதோ நூறோ இருப்பதாகக் கேள்வி எனக்கு...'' என்று சொன்னேன். 'அட, ஐந்நூறு இருக்கய்யா, அதுக்கென்ன இப்போ? 'லட்சுமிராஜ்' ஷேரை, நீ கிள்ளுக்கீரைன்னு—நினைத்துக்கோ. எனக்குத் தெரியும், அதனுடைய மதிப்பு' என்று மேலும் கோபமாக சொன்னார்.

சீ: ஆமான்னா, அவன் பிடிவாதக்காரன்...

மு: பிடியும் வாதமும்! கேளும் மேற்கொண்டு நடந்ததை. 'முதலியார்! நீங்க, அதற்குப் பேரு லட்சுமின்னும் ராஜான்னும் இருப்பதாலேயே, மதிப்புக் குறையவே குறையாதுன்னு நினைக்கிறீரா'ன்னு கேலி செய்து, கோபத்தை இன்னும் கொஞ்சம் ஏற்றி விட்டேன்.

சீ: துருப்புத் தழையை இறக்கி, எதிர்க்கை ஜாக்கியை கீழே விழவைக்கிற மாதிரியாகச் செய்தீர்.

மு: கேளுமய்யா, விஷயத்தை. லட்சுமி ராஜாக்கு என்ன குறைன்னு சொல்கிறீர் இப்போ. சீனு இருக்கானே,

அவன் நேத்து தலை கீழாக நின்று பார்த்தான், அதை வாங்க என்று அப்போதுதான், உன் விஷயத்தை ஆரம்பித்தார்.

சீ: பார்த்தீரா! அவ்வளவு நேரம், என் பேச்சையே எடுக்கவில்லை...''

மு: நான் மட்டும் தந்தியை உடனே எடுத்துக் காட்டினேனா?

சீ: எந்தத் தந்தியை?

மு: அதுதானய்யா, என மாமியாளுக்கு உடம்பு சரியில்லைன்னு தந்தி வந்ததே நேத்தைக்கு, உமமிடம் காட்டலே நான்.

சீ: ஆமாம், அந்தத் தந்தி எதுக்கு?

மு: அதுதான் ஓய், துருப்பு ஜாக்கியா இருந்தது. கேட்டுண்டு வாரும் விஷயத்தை. முதலியார், லட்சுமிராஜ் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்தான். பிறகு பொறுமையாகச் சகலத்தையும் கேட்டுண்டு இருந்துவிட்டு, 'முதலியார்! இதைப் பாருங்கள்' என்று சொல்லித் தந்தியை நீட்டினேன். வாங்கிப் பார்த்தான்— முகம் வெளுத்துப் போச்சு?

சீ: ஏன்?

மு: ஏனா? தந்தியிலே என்ன இருந்தது, நீர் சரியாக வாசிக்கலையோ?

சீ: உம்ம மாமியாளுக்கு...

மு: ஆமய்யா, ஆபத்தா இருக்குன்னு இருந்தது! அது நேக்குத் தெரியும்; உமக்குத் தெரியும்; அவன் கண்டானா அதை. தந்தியிலே என்ன வாசகம் இருந்தது?

லட்சுமிராஜ் சிங்கிங் அதாவது, லட்சுமிராஜ் பிராணன் போயிண்டிருக்கு. முழுகிண்டிருக்குன்னு அம்பி தந்தி கொடுத்திருந்தான். முதலியாருக்கு அந்த சூட்சமம் என்ன தெரியும்? லட்சுமிராஜி என்றால், 'ஷேர்' என்று எண்ணிக் கொண்டார்-சிங்கிங் முழுகிண்டிருக்குன்னா, எப்படி இருக்கும் அவனுக்கு. 'இருக்குங்களா?' என்று பயந்து கேட்டான். அம்பிக்கு நான் சொல்லி வைத்திருந்தேன்; லட்சுமிராஜ் ஷேர் விஷயமா. அதுவும் நீர் அதை வாங்கி இருந்ததாலே, முதலியார் தெரியாமலா வாங்கி இருப்பார்; நாமும் அதையே

வாங்கிப் போட்டு வைப்போம்னுதான் நினைச்சேன். நேத்து வர்றது இதுமாதிரி தந்தி என்று சொன்னேன். ஒரு நிமிஷத்திலே ஒன்பது தடவை, தந்தியை அடிக்கடி பார்த்தான்—என்ன பண்ணுவான்—தந்தியை மேஜை மேலே வீசினான்—பயல்கள் என்னை ஏமாத்திவிட்டான்கள்—லட்சுமி ராஜி, கல் மாதிரி அசையாதுன்னு சொல்லி ஆசை காட்டினார்கள் என்று சோகமாகப் பேச ஆரம்பித்தார். 'ஆமாம், ஷேர் வியாபாரமேஒருசூதாட்டந்தானே' என்று நான்சொன்னேன். 'சூதாட்டம் தேவலாம்; இது மகா பெரிய சூதாட்டமாக அல்லவா இருக்கு' என்று ஆயாசப்பட்டார். 'சரிதான், முதலியாரே! தந்தி எனக்குத்தான் வந்தது! ஊரிலே யாருக்கும் தெரியாது—அம்பிக்கு உன் அளவு தெரியும். அதனாலே அவனுக்கு இரகசியம் முதலிலே தெரிந்துவிட்டது. அதனாலே யாருக்காவது தள்ளி விட்டுவிடும், அந்தச் சனியனை' என்றேன். அவன் யாரையாவது பார்க்கும்படி என்னையே கேட்டுக் கொண்டான்.

சீ: சரின்னு ஒப்புக்கொண்டீராக்கும்.

மு: மண்டுவா நான். 'நான் எப்படி முதலியாரே, சத்யத்துக்கு விரோதமாகப் போக முடியும்—மனதறிந்து பொய் பேசறதுன்னா..' என்றேன். சரி, எனக்கு ஒரு உபகாரம் செய்யுங்கள், அதுபோதும். 'லட்சுமிராஜி ஷேர் விழுந்துவிட்டதுங்கிற விஷயத்தை மட்டும், வெளியே சொல்லாமலிரும்' என்று கெஞ்சினான். சரின்னு ஒப்புக் கொண்டேன்.

சீ: பேஷ்! பலே சமர்த்தா முடித்திருக்கிறீர் காரியத்தை.

மு: ஆகையினால், நான் மோட்டாரை நிறுத்தச் சொல்கிறேன். இறங்கி, எதிரே பஸ்வரும். ஏறிண்டு நேரே முதலியாரிடம் போனா, காரியம் பலித்துவிடும்—என்னைப் பார்த்து மூணு நாளாச்சின்னு சொல்லும்.

கார் நிறுத்தப்பட்டு, சீனு கீழே இறக்கப்பட்டார்—கார் மீண்டும் புறப்பட்டது.

''எங்கே, வீட்டுக்கா, கிளப்புக்கா?'' என்று கேட்டான் மோசஸ்.

''வீட்டுக்குத்தான். ஏண்டா மோசஸ்? உனக்குப் பசங்க எத்தனை?'' என்று ஐயர் கேட்டார்.

''மூணு'' என்று சுருக்கமாகப் பதிலளித்தான் மோசஸ்.

''மூணு பசங்களுக்குத் தகப்பனாகி இருக்கிற; சூதாட்டத்தை விடமாட்டேன்கிறியே. ஏண்டா, சூதாட்டப் புத்தி இருந்தா எப்படியடா உருப்பட முடியும்.'' என்று மறுபடியும் உபதேசம் செய்யலானார். அடிக்கடி மோட்டார் 'ஆரனை' உபயோகப் படுத்தித் தன் கோபத்தை மோசஸ் போக்கிக் கொள்ள முயன்றான். ''மோசஸ்! ஒரு விஷயம கேள். சூதாடி என்னடா சம்பாதிக்க முடியும். இல்லை, பணமே அதிலே கிடைக்கிறதுன்னே வைச்சிக்கோ, சூதாடிப் பிழைக்கிறது ஒரு பிழைப்பாகுமா— மோசஸ்?...'' என்று ஐயர் சூதாட்டத்தின் தீமைகளை விவரிக்கலானார். மோசஸ் சலிப்பும், கோபமும் கொண்டவனாய், அவர் வார்த்தைக்கு, 'உம்' கொட்டவில்லை. ஐயர், ''ஏண்டா, மோசஸ்! நான் சொல்றது காதிலே விழலையா?'' என்று கேட்டார். ஒரு சிரிப்புடன் மோசஸ் சொன்னான், ''நான் செவிடனல்ல; நீங்க பேசறது நல்லாக் காதிலே விழுகிறது'' என்றான். அவன் கோபித்துக் கொண்டான் என்று ஐயர் தெரிந்துகொண்டார். ஆனால் அவன் கோபத்துக்குக் காரணம் தெரியாது அவருக்கு.

சூதாட்டத்தைக் கண்டிப்பவர் நடத்திய சூதாட்டத்தைப் பற்றி அவரே பெருமையாகச் சீனுவிடம் பேசியதை மோசஸ் கேட்டுக் கொண்டுதானே இருந்தான். அத்தகைய இலாபச் சூதாட்டக்காரர், பொழுதுபோக்குக்காகவும், மனதிலே கொஞ்சம் கிளர்ச்சி வேண்டுமென்றும், சீட்டு ஆடுவதைச் சூதாட்டம் என்று சொன்னால் அவனுக்குக் கோபம் வராமலிருக்குமா? அவன் செவிடனா, சீனுவும் முத்துசாமி ஐயரும் பேசினது காதில் விழாமலிருக்க! நன்றாகக் கேட்டது. ஆனால் அவன் பேச முடியாதே! ஊமையல்ல; ஆனால் ஊழியக்காரன்! எப்படியோ முதலாளி முதல்தரமான சூதாட்டக்காரர் இஸ்பேட்—கிளாவர் போன்ற சீட்டுகளில் அல்ல, லட்சுமிராஜ்—காமதேனு—காந்தா முதலிய ஷேர்களைச் சீட்டுகளாகக் கொண்ட சூதாட்டக்காரர் என்ற உண்மையை எப்படிப் பேசமுடியும்?

★

# 12

# துணை நடிகை

அந்தச் சிற்றூரில் ஒரு அம்மையாருக்குப் பொன்னாடை போர்த்தப் போவது பற்றிய செய்தி மாவட்டச் செய்தித் தாளில் வந்திருந்தது. இவ்விழாவுக்குச் சோபியாவில் இருந்தும் விருந்தினர்கள் வரப் போவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

குறித்த நாளில் நூல் நிலையக் கிளப்பில் விழா ஆரம்பிக்சப்பட்டது. மண்டபம் முழுவதும் மக்கள் நிறைந்து இருந்தனர்.

சோபியாவிலிருந்து வந்தவர்கள் முதல் வரிசையில் அமர்ந்து இருந்தனர்.

'இதென்ன, சம்பிரதாயமான பாராட்டு விழாதானே!' என்று பலரும் பாராட்டும்படி அசமந்தமாக இருந்தனர். கூட்டத்தினர் முகத்தில், அலுப்பின் அறிகுறிகள் அப்பட்டமாகத் தெரிந்தன. அங்கு இருந்த பள்ளிச் சிறுமிகளின் முகத்தில் மட்டுமே உற்சாகம் மிளிர்ந்தது.

கூட்டத்தினரின் மனோ நிலையை ஊகித்துக் கொண்டு விழாக் கமிட்டித் தலைவர், சுருக்கமாக விழாவை முடித்துக் கொள்ள நினைத்தார். ஆனால் அவர் முன்னிருந்த நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்த பேச்சாளர்களின் பட்டியல் மிகவும் நீளமாக இருந்தது. பலரது பெயர்களை நீக்கிவிட நினைத்தார். ஆனால் ஒவ்வொருவரும் ஒரு ஸ்தாபனத்தின் பிரதிநிதியாக இருந்ததால், அவ்வாறு செய்ய முடியவில்லை! கடைசியில் ஒருவரது பெயருக்கு நேராக ''தனிப்பட்ட முறையில் பேசுவார்'' என்றிருந்தது.

ஆம்; இந்த ஆசாமியின் பெயரையாவது நீக்கிவிடலாம் என்று நினைத்த தலைவர் பென்சிலைக் கையில் எடுத்தார். ஆனால் ஏதோ ஓர் உணர்வு அவரது கைகளைக் கட்டிப் போட்டது.

விழாக் கூட்டம் தொடங்கியது. சம்பிரதாயப் பேச்சுக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடங்கின. கூட்டத்தினர் விளக்கெண்ணெய் குடிப்பதுபோல் முகத்தைச் சுளித்துக் கொண்டு அலுப்புடன் அமர்ந்து இருந்தனர். கடைசியில் தலைவர், ''தோர்ஸ்தோயன் தோப் ரோவ்...பேசுவார். ....அவர்'' என்று தட்டுத் தடுமாறிக் கூறினார். ''என்னடா இது! தலைவர் தடுமாறுகிறார்?'' என்று பலரும் மேடையை உற்று நோக்கினர்.

இராணுவ உடையிலிருந்த ஒரு கர்னல், ''நான வெகு நேரம் பேச வேண்டி இருக்கும் என்று அஞ்சுகிறேன். ஆனால் அதற்குள்ளே நான் இங்கு வந்திருக்கிறேன்! எனவே ''தோழர்களே, அருள் கூர்ந்து எனது சொற்பொழிவை இறுதிவரை கேளுங்கள்...''

பதட்டமில்லாத நிதானமான குரலில் அவர் பேசினார். ''நான் நாஜிகளின் ஆக்ரமிப்பின்போது தலை மறைவாக இருந்த காலத்தில் என் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்று. அதைப் பற்றிக் கூறவே இங்கு வந்துள்ளேன். 1943 வசந்த பருவத்தில் உங்கள் ஊரில் நடந்த சம்பவம் அது. ஒருநாள் மாலையில் நான் ஓரிடத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கும்போது இரகசிய போலீஸ் ஏஜண்ட் ஒருவன் என்னைப் பின்தொடர்வதை உணர்ந்தேன். எனவே திசைமாறி, வளைந்து வளைந்து செல்லத் தொடங்கினேன். ஆனால் என்னைப் பின்தொடர்ந்த ஆசாமி விடாக்கொண்டனாக இருந்தான். அவனுடன் மற்றொரு ஆளும் ''மப்டி'' யில் இருந்தான். ஊரின் எல்லையை அடைந்ததும் நான் காட்டை நோக்கி ஓடத் தொடங்கினேன். அப்படியாவது அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

ஆனால் என்னைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தவர்கள், ''நில் ஓடாதே'' என்று கூவியது என் காதில் வந்து விழுந்தது. என் தலைக்குமேல் அவர்கள் சுட்டனர். என்னை உயிருடன் பிடிக்க வேண்டும் என்பது அவர்கள் திட்டம் என்று தெரிந்து விட்டது.

ஆயினும் நான் ஓடிக்கொண்டே இருந்தேன். ஆனால் இதற்குள் என்னைத் துரத்தி வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. அப்போது அங்கு ஓர் ஒதுக்குப் புறத்தில் தன்னந்தனியாக ஒரு சிறியவீடு இருந்ததைக் கண்டேன். உடனே அவ்வீட்டின் தோட்டத்துப் பக்கம் சென்று வீட்டினுள் புகுந்து, கதவை அடைத்துக் கொண்டேன். அப்போது நான் அங்கே கண்ட காட்சி என் இரத்தத்தை உறையச் செய்தது.

அங்கே ஓர் இளம் பெண் வெண்ணிறச் சால்வையைப் போர்த்திக் கொண்டு கையில் ஓர் புத்தகத்துடன் நின்று கொண்டிருந்தாள்! அவள் என்னைக் கண்டதும் அதிர்ச்சியால் கூச்சலிட்டாள். அதற்குள் என்னைத் துரத்தி வந்தவர்கள் அந்த இடத்தை அடைந்து விட்டனர். உடனே அந்தப் பெண் தனது வாயில் கையை வைத்துப் பொத்திக் கொண்டாள். இதை நான் கண்ணால் கண்டேன்.

நான் உடனே என் ரிவால்வரை எடுத்துத் தயாராக கையில் வைத்துக் கொண்டேன். எனது உடலில் கடைசி இரத்தம் உள்ளவரை போராடுவது என்று நான் முடிவு செய்து கொண்டேன்.

அப்போது அந்த இரகசிய போலீஸ் ஏஜெண்டுகள் வீட்டின் பின்பக்க, ''கேட்டை''த் திறந்து கொண்டு, அங்கிருந்த பூச்செடிகளை மிதித்துக் கொண்டு வந்தனர்.

உடனே நான் மறைந்திருந்த வீட்டைச் சேர்ந்த இளம் பெண் வெளியே ஓடிவந்து, பெருங் கூச்சல் போட்டாள்.

''ஏ! முரடர்களே, உங்களுக்கு அறிவில்லையா? மலர்ச் செடிகளை இப்படியா பாழாக்குவது? எனதருமை மலர்களே, உங்களை அழித்த பாவிகள் ஆயிரம் முறை மடிந்து சாகட்டும்!

போலீசுக்காரர்கள் அப்பெண்ணின் புலம்பலைக் கேட்டுத் தயங்கி நின்றனர்.

''அம்மா, பயப்படாதீர்கள்! ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் கூறிவிடுங்கள்; போதும். இங்கு சற்று முன்பு ஒரு ஆள் ஓடிவந்தானா?''—போலீசு ஏஜண்டுகளில் ஒருவன் கேட்டான்.

அப் பெண்மணி அப்போது மார்பில் அடித்துக்கொண்டு புலம்பத் தொடங்கிவிட்டாள்.

''ஐயோ! என் அன்பே! உண்மையாகவே நீ இறந்து விட்டாயா! கேளுங்களைய்யா, என் சோகக் கதையை. அவர் ஒரு மாணவர், பிரெஞ்சுக்காரர்....காஸ்டன் என அவரை அழைப்பார்கள்....இளம் தாடி வளர்த்து வந்தார். அவர் ...எப்பொழுதும் நீண்ட தோல் காலணி அணிவார்...ஏன், என்னுடைய உயிர் இன்னும் போகவில்லையோ!! அவர் என்னை உயிரினும் பெரிதாக நேசித்தார்...என் அன்பு ராஜா! ஐயோ! மறைந்தனையோ!!''

''இந்தா பாரம்மா! என்ன உளறல் இது! நீ யாராவது ஆளைப் பார்த்தாயா?''

''என்னய்யா, காட்டுக்கூச்சல் போடுறே! என் காதலன் மட்டும் இப்பொழுதிருந்தால்...அன்பே! என் கண்ணாளா! ஐயோ, என்னை இப்படியா விட்டுச் செல்ல வேண்டும்.''

இவ்வாறு கூறிக் கொண்டே அப் பெண்மணி அந்தப் போலீசுக்காரர்கள் இருவரையும் கட்டிக் கொண்டு அழத் தொடங்கிவிட்டாள்.

''பைத்தியம்! நல்ல பைத்தியம்!'' என்று கூறிக்கொண்டே போலீஸ்காரர்கள் அவ்விடம் விட்டு அகன்றனர்.

பிறகு அவள் வீட்டுக்குள் வந்தாள். இளம் மங்கை தன்னந்தனியாக இருக்கும் வீட்டில் இருப்பது தகாது என்று எண்ணி வெளியேற நினைத்தேன் நான். எனவே தோட்டத்துக் கதவைத் திறந்தேன். அப்போது, ''சற்றுப் பொறுங்கள்' என்று அன்பு ததும்பும் குரலில் அவள் என்னைப் பார்த்துக் கூறினாள்.

அவள் என்னைப் பார்த்த பார்வையில் எவ்வளவோ வாஞ்சையும் அன்பும் நிறைந்து இருந்தன. போலீஸ்காரரிடம் பைத்தியம்போல் நடந்து கொண்ட அதே பெண்தானா இவள் என்று ஐயமுற்றேன் நான்.

ஆம்; அவளேதான்; அதே எழில் முகம்—வெண்ணிற சால்வை.

''ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்?வாருங்கள் வீட்டிற்குள்'' என்று அழைத்தாள்.

மறுக்க மனமின்றி அவளைப் பின்தொடர்ந்தேன்.

அந்த அறையில் பல நாடகக் காட்சிகளின் புகைப்படங்கள் தொங்கவிடப்பட்டு இருந்தன.

''தாங்கள் ஒரு நடிகையா?'' என்று கேட்டேன்,

''நடிகை என்று சொல்லிக் கொள்ள முடியாது. துணை நடிகை என்று வேண்டுமானால் கூறலாம்'' என்றாள் அப் பெண்.

''உண்மையிலேயே, நீங்கள் ஒரு பைத்தியம் என்றே நான் நினைத்தேன், நீங்கள் போட்ட கூச்சலைக் கேட்டு! உண்மையிலேயே நீங்கள் உங்கள் பாகத்தை நன்கு நடித்தீர்கள்!''

''இல்லை; அப்படி ஒன்றுமில்லை. எனக்கு எப்பொழுதுமே எனது நடிப்புத் திறமைபற்றி திருப்தி ஏற்பட்டதில்லை. நான் ஒரு குட்டி நடிகை. சிறிய பாகங்களையே ஏற்று நடித்து வருபவள். இன்று நான் அவர்கள் முன் நடித்ததுபோல் மோசமாக நடித்து இருந்தால், நாடகக் கொட்டகை காலியாகி விட்டு இருக்கும்'' என்றாள்

கர்னல் சிறிது நேரம் பேசுவதை நிறுத்தினார். பிறகு கூறினார்: ''அப்போது நான் அப் பெண்மணியின் கரத்தை முத்தமிட மறுத்துவிட்டேன். எனவே, இன்றாவது அதை நான் செய்ய விரும்புகிறேன...''

மண்டபத்தில் கரகோஷம் வானைப் பிளந்தது. எந்த அம்மையாருக்குப் பொன்னாடை போர்த்துவதற்காக விழா நடத்தப்பட்டதோ அந்த அம்மையாரின் கரங்களை பேச்சாளர் முத்தமிட்டார். அவள் எப்பொழுதுமே சிறிய பாகங்களை வகித்து வந்தவள், எப்பொழுதுமே ஒரு துணை நடிகையாக ஒதுங்கி நின்றவள் என்பதை தலைவருக்குப் பின்னால் அவளது உருவம் மறைந்திருந்தது!...